
ராணி முத்து
முத்துலட்சுமி ராகவன்
தூங்காத கண்ணொன்று உண்டு
ரூ. 6

முத்துலட்சுமி ராகவன்

# தூங்காத கண்ணொன்று உண்டு



1

"வாராயென் தோழி வாராயோ...
மணப் பந்தல் காண வாராயோ..."

அந்தத் திருமண வீட்டின் மாடி மேல் கட்டப்பட்டிருந்த ஒலிபெருக்கியில் இருந்துபாடல் ஒலித்துக்கொண்டிருந்தது. தெருவை அடைத்துப் போடப்பட்ட பந்தலின் இரு பக்கமும் வாழை மரங்கள்

கட்டப்பட்டிருந்தன. உள்ளே வரிசையாக பிளாஸ்டிக் நாற்காலிகளைப் போட்டிருந்தார்கள். பந்தல் வாசலில் வேட்டியை மடித்துக் கட்டிக்கொண்டு, பரபரப்புடன் நின்றிருந்தான், சத்தியமூர்த்தி.

"என்னப்பா சத்யா... பெண்ணை அழைச்சுட்டு வர்றாங்க போல இருக்கே...?" என்று விசாரித்தார் பெரியவர் ஒருவர்.

"ஆமாம் பெரியப்பா" என்றான், அவன்.

"ஏன்ப்பா... விடிஞ்சா கல்யாணம். இப்படி சுரத்தில்லாம பதில் சொல்லுற! கல்யாணம் யாருக்கு? உனக்கா, இல்லை பக்கத்து வீட்டுக்காரனுக்கா?"– எடக்காக கேட்டார்.

'இந்தப் பெரிசுக்கு இருக்கும் லொள்ளைப் பாரேன்' – கடுப்பாக மனதில் நினைத்தபடி பதில் பேசாமல் நின்றான் சத்தியமூர்த்தி.

"ஏம்ப்பா... உனக்கு பகடி பேச, இந்த நேரம்தான் கிடைச்சதா? கல்யாண மாப்பிள்ளைகிட்ட போயி என்ன கேள்வி கேட்கிற? நல்ல ஆளு வந்து சேர்ந்தேப்பா"– பக்கத்தில் இருந்தவர், பெரியவரை கடிந்துகொண்டார்.

"யாருப்பா நீ? சுத்த விவரம் கெட்ட மனுசனா இருக்க. கல்யாண மாப்பிள்ளைன்னா தனிக் களையோட இருக்க வேணாமா? பெண்ணை அழைச்சுட்டு வந்து மேலத் தெரு வீட்டில வெச்சாச்சு. இவன் என்னடான்னா அங்க போய் மணப்பெண்ணை நோட்டமிடாம இங்கேயே ரோந்து சுத்திக்கிட்டு இருக்கான். இந்நேரம் கல்யாண மாப்பிள்ளையா– லட்சணமா பறந்து போயிருக்க வேணாமா?"

"நீ சொல்றதும் நிசம்தான். அந்தக் காலத்தில உனக்குக் கல்யாணம் நடந்தப்போ... பெண் அழைக்கிற கூட்டத்தில சேலையைக் கட்டி முகத்தை மறைச்சுக்கிட்டு பொம்பளைகளோட பொம்பளையா கலந்து போன ஆசாமிதான நீ... வேற எப்படிப் பேசுவ? இப்படித்தான் பேசுவ..."

"ஆயிரம்தான் இருந்தாலும் அதுல என்ன தப்பு! நாம கல்யாணம் பண்ணிக் காலம் பூராவும் குடித்தனம் பண்ணப் போற பெண்ணா இருந்தாலும், கல்யாணத்துக்கு முதலில் திருட்டுத்தனமாய்– ஜாடைமாடையாய் பார்க்கறதுல இருக்கிற சுகமே தனி. அது உனக்கெங்க தெரியப்போகுது?"

"எங்களுக்குத் தெரிஞ்சதெல்லாம் போதும். நீ கொஞ்சம் அடங்கு. இப்ப உனக்கு வாலிப வயசுன்னு நினைப்பா?"

அவர்கள் இருவரும் வழக்கடித்துக்கொண்டிருக்க, சத்யமூர்த்தி நகர்ந்து வீட்டுக்குள் போனான்.



பெரிய மண்டபத்தில்– மறுநாளைய திருமணத்திற்கு மணமேடை அலங்காரம் செய்யப்பட்டுக்கொண்டிருந்தது. அந்தப் பணிகளை மேற்பார்வை செய்த மருதநாயகம் திரும்பி மகனைப் பார்த்தார்.

"என்ன சத்யா...?"

"ஒண்ணுமில்லைப்பா?"

"காப்பி குடிச்சியா?"

"ம்ம்ம்."

"அப்புறம் ஏன்டா சுரத்தில்லாம இருக்கே? பவளக்கொடி... அடியேய் பவளக்கொடி..."

மருதநாயகம் உரத்த குரலில் மனைவியை அழைத்தார். வள்ளுவர் கூப்பிட்டதும் பறந்தோடி வந்து நின்ற வாசுகியாய்... "என்னங்க..." என்றபடி அரக்கப் பறக்கக் கேட்டாள்.

"புள்ள சோர்ந்து போய் தெரியறானே... கூப்பிட்டுப் போயி காப்பித் தண்ணிய குடு."

அப்போதுதான் மகனின் முகத்தைப் பார்த்த பவளக்கொடியின் கண்களில் கவலை தெரிந்தது.

"ஏன்டா சாமி... சுணங்கிப் போய் நிக்கற? என்ன பண்ணுதடா ராசா. தலை நோவுதா?"

அருகில் வந்து அவன் நெற்றியில் கை வைத்துப் பார்த்தாள்.

"ஒண்ணும் இல்லைம்மா."

தகப்பனிடம் சொன்ன அதே பதிலை தாய்க்கும் சொல்லியவாறு, அவளது கையை விலக்கிவிட்டான்.

"சரி... உள்ளே வா. காப்பி போட்டுத் தர்றேன்."

மறுக்க முடியாமல் அம்மாவைப் பின்பற்றி உள்ளே சென்றுகொண்டிருந்த அவனைப் பார்த்தபோது, தந்தை மருதநாயகத்தின் விழிகளில் சிந்தனை படர்ந்தது.

'ஒண்ணுமே இல்லையா...?'

அவருக்குத் தெரியும்... மகனின் மனதில் ஓராயிரம் எண்ணங்கள் இருக்கின்றன என்பது!

"இந்தக் கல்யாணத்தில எனக்கு இஷ்டமில்லைப்பா."

"ஏன் இஷ்டமில்லை...? நான் பார்த்து வைச்சிருக்கிற பெண்ணுக்கு என்ன குறைச்சல்? 'பேங்க்'குல வேலை பார்க்குது. மூக்கும் முழியுமா லட்சணமா இருக்குது. கையில ரொக்கம் கொடுத்து, கழுத்து நிறைய நகைகளைப் போட்டு அனுப்புறாங்க. கட்டிக்க உனக்கு கசக்குதா?"

"அந்தப் பொண்ணு 'பேங்க்'குல வேலை பார்க்குது சரி... நான் எதுல வேலை பார்க்கிறேன்னு சொல்லுங்கப்பா."

"அரசாங்க வேலைதான் வேலையா? டீக்கடை வச்சிருந்தாலும், அதுவும் வேலைதான்டா."

"சரி... உங்க பேச்சுக்கே வர்றேன். அந்தப் பொண்ணு எம்.எஸ்சி. படிச்சுருக்கு. நான் வெறும் 'பிளஸ் டூ'தானே?"

"படிப்புக்கு என்னடா சத்யா... அதை எப்ப வேணும்னாலும் படிச்சுக்கலாமே? நாளைக்கே தபால்ல படி. யாரு வேணாம்கிறா?"

சத்தியமூர்த்தியின் எல்லா மறுப்புகளுக்கும், மருதநாயகத்திடம் பதில் இருந்தது. இதனால் இயலாமையுடன் பல்லைக் கடித்துக்கொண்டான் அவன்.

"ஏம்பா... எல்லாத்துக்கும் ஏடாகூடமாவே பதில் சொன்னா எப்படி? கல்யாணம்ன்னா என்ன... வியாபாரமா? மனசுக்கு பிடிச்சிருக்க வேணாமா?"

"ஏன்டா... நம்ம எட்டுப் பட்டியிலேயே அந்தப் பொண்ணுதான் பேரழகின்னு அம்புட்டுப் பேருக்கும் தெரியும். அது உன் மனசுக்கு பிடிக்காம போயிருமா?"

'பேரழகியாய் இருந்தால்... உடனே மனசுக்குப் பிடிச்சுடுமா?' சலிப்படைந்தான்.

அவன் மனதில் பூங்கோதை தோன்றினாள்.

மாநிறத்தில், சாதாரண முகத்தோற்றத்துடன், கண்களில் எல்லையில்லாத காதலைக் காட்டினாள்.

'ஏன் மச்சான்... அழகும், பணமும், படிப்புமா ஒருத்தி கிடைச்சவுடனே என்னை மறந்துட்டேல்ல?'

அவள் ஏக்கத்துடன் கேட்டபோது, விழிகள் கண்ணீரில் மிதந்தன. அதை நினைத்தபோது சத்தியமூர்த்திக்கு நெஞ்சம் வலித்தது.

"அவ எட்டுப்பட்டிக்கு பேரழகியாகவே இருக்கட்டும்... நான் யாரு? அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டுல அடங்காத காளையை அடக்கிக் காட்டிய வீரனா... இல்லை, உள்ளூரு கபடிப் போட்டியில ஜெயிச்சுக் காட்டின சூரனா? எதுவுமில்லாத டீக்கடைக்காரன்ப்பா. எனக்கெதுக்குங் அந்தப் பொண்ணு?"

"வேற எந்தப் பொண்ணு வேணும்? அந்தப் பால்காரியின் மகள் பூங்கோதைதான் வேணுமா?"

வேப்பங் குச்சியில் பல் துலக்கியவாறே மருதநாயகம் சாதாரணமாகக் கேட்க, சத்தியமூர்த்தி திகைத்தான்.



"அப்பா..."

"இது எப்படி அப்பனுக்குத் தெரிஞ்சதுன்னு பார்க்கறியா? எல்லாம் எனக்குத் தெரியும்டா மகனே. கொஞ்ச நாளா அம்மாக்காரி பாலூத்த வராம, மக வர்றது... அவ வந்த உடனே நீ டீக்கடைக்கு பின்னால இருக்கிற ஆலமரத்துக்கு அடியில போய் நிக்கிறது. அவளும் அங்கே வந்து உன்கிட்ட சரசம் பேசறது. இது எல்லாம் என் காதுக்கு எப்பவோ வந்தாச்சு. இது கிராமம்டா. பட்டிணத்துல காதலை ஒளிச்சு மறைச்சு வைக்கலாம். பட்டிக்காட்டில் அது முடியாதுடா. நீ தும்மினாக்கூட அது ஊர் பூராவும் பரவிடும்."

"உங்களுக்குத்தான் என் காதல் தெரிஞ்சிருக்கே. தெரிஞ்சும் இந்த அநியாயத்தைப் பண்ணணுமா?"

"இது அநியாயமா! சரிடா ராசா. நான் உன் வழிக்கே வர்றேன். போன வாரம் உன் தங்கச்சி சாவித்திரியை பொண்ணு பார்க்க மதுரையில இருந்து மாப்பிள்ளை வீடு வந்தாகளா... இல்லையா?"

"வந்தாக."

"மாப்பிள்ளை, கலெக்டரு ஆபீசல கிளார்க்கா உத்தியோகம் பாக்குறான். அவனை உன் தங்கச்சிக்கு பிடிச்சுப் போச்சா இல்லையா?"

"பிடிச்சுப் போச்சு."

"நீதான் 'பிளஸ் டூ'. உன் தங்கச்சி பி.ஏ. படிச்சவ. எட்டிக்கு போட்டியா நான் மாப்பிள்ளை பார்த்தா கட்டிக்குமா?"

"கட்டிக்காது."

"வந்த மாப்பிள்ளை, பொண்ணுக்கு நாற்பது பவுனு நகையைப் போட்டு, மோட்டார் சைக்கிளை வாங்கிக் கொடுத்து, கையில ரொக்கமாய் ஐம்பதாயிரம் பணமும் கேட்கிறான். கல்யாணச் செலவு நம்மோடது. இது போக சீர்வரிசை, பாத்திரம், பண்டம் லொட்டு லொசுக்குன்னு இருக்கு. இதுக்கு என்ன செய்யப் போற? என்னால முடிஞ்சது பத்துப் பவுனு நகையும், பத்தாயிரம் ரொக்கமும் மட்டும்தான். மீதிக்கு எங்கே போறது... எங்கேயாவது போய் கொள்ளை அடிக்கலாமா?"

"இதுவும் கொள்ளைதானேப்பா."

"அது நீயா நினைச்சுக்கறது! அவங்களா பிரியப்பட்டு பொண்ணுக்கு அறுபது பவுன் நகை போடறோம்னு சொல்றாங்க. அதுல நம்ம சாவித்திரிக்கு முப்பது பவுன் நகையை எடுத்துக்கிறலாம்.

கையில ரொக்கமா ஒரு லட்சம் தர்றேன்னு சொல்றாங்க. நாற்பதாயிரம் ரொக்கம் கொடுத்தது போக, மீதி அறுபதாயிரத்தில் சாவித்திரியின் கல்யாணத்தை முடிச்சுரலாம். உனக்கு வாங்கித் தர்ற மோட்டார் சைக்கிளை, சாவித்திரியைக் கட்டிக்கப் போகிற மாப்பிள்ளைக்கு கொடுத்துரலாம்."

"அப்புறம் அவ கொண்டு வர்ற சீர் செனத்தியை சாவித்திரிக்கு சீராய் செஞ்சிரலாம். அப்படித்தானேப்பா...?"

"உனக்கு கற்பூர புத்திடா மகனே."

"என்னை விலை பேசி விக்கப் பாக்கறீங்களேப்பா?"

"சரி... வேணாம். கழுதைய விடு. உன் தங்கச்சிக்கு ஏழைக்கேத்த எள் உருண்டையாய் ஒரு மாப்பிள்ளையைப் பார்ப்போம். நீ அந்த பால்க்காரி மகளைக் கட்டிக்க. ஆனா ஒண்ணு, கல்யாணம் மாறிப்போன ஏக்கத்துல உன் தங்கச்சி மருந்தைக் கிருந்தைக் குடிச்சு தொலைச்சுட்டா என்னைக் குத்தம் சொல்லாதே. ஆமாம்... சொல்லிப்புட்டேன்."

"பயமுறுத்துறீங்களாப்பா..."

"எனக்கெதுக்குடா அந்தப் பொல்லாப்பு? நடப்பைச் சொன்னேன். அவ்வளவுதான். அப்புறம் நீயாச்சு, உன் தங்கச்சி வாழ்வாச்சு. எனக்கென்ன போச்சு?"

"இப்ப என்னதான் சொல்ல வர்றீங்க?"

"ஒண்ணு உன் காதல் நிறைவேறணும். இல்ல, உன் தங்கச்சி ஆசைப்பட்ட மாப்பிள்ளைய கட்டிக்கிடணும். இந்த வீட்டுல ரெண்டில ஒண்ணுதான் நடக்க முடியும். உன் காதலை நீ பார்த்தால், உன் தங்கச்சிக்கு வாழ்க்கை கிடைக்காது. உன் தங்கச்சிக்கு அவ ஆசைப்பட்ட வாழ்க்கை கிடைக்கணும்ன்னா உன் காதலை நீ விட்டுக் கொடுக்கணும். என்னப்பா செய்யப்போற?"

மருதநாயகம் தன் மகனை வற்புறுத்தவில்லை. சாதுர்யமாகப் பேசி முடிவை மகனே எடுக்குமாறு செய்துவிட்டார்.

தங்கை மேல் பாசம் கொண்ட அவன், வேறு வழியின்றி அப்பா சொன்ன திருமணத்திற்கு சம்மதம் சொல்லிவிட்டான்.

"தெரியும்ய்யா. நீ என்னைக் கை கழுவிடுவேன்னு எனக்குத் தெரியும். உன் தங்கச்சிதான் உனக்குப் பெரிசு. நான் பெரிசு இல்லல்ல."

பூங்கோதை விட்ட கண்ணீர் அவன் இதயத்தை வாள் கொண்டு அறுத்தது.





"கூடப் பொறந்துட்டனே கோதை!"

"என்கூட நீ பழகலையா?"

அவள் கேட்டுவிட்டுப் போய்விட்டாள்.

அவள் கேட்ட கேள்வி, இரவு பகல் என்று பாராமல் இருபத்தி நான்கு மணி நேரமும் அவனைத் துரத்தி வந்து சுட்டது.

இந்த நிலையில் இருக்கும் அவன் முகத்தில்– கல்யாணக் களையை 'வா... வா...' என்று அழைத்தால் எப்படி வரும்?

அம்மா பவளக்கொடி நீட்டிய காப்பியை வாங்கிக் குடித்தபடி, சத்தியமூர்த்தி யோசித்துக்கொண்டிருந்தான்.

"என்ன பவளக்கொடி.... இப்படி மசமசன்னு நிக்குற. ராத்திரியிலதான் நாம பரிசம் போட்டு முடிக்கணும். அது மறந்து போச்சா?"

பெரியம்மா மல்லிகா கேள்வி கேட்டபடி உள்ளே வந்தாள். அவள் பின்னாலேயே உறவுக்கார பெண்கள் வந்துவிட– சத்தியமூர்த்தி வெட்கத்துடன் எழுந்து வெளியே சென்றுவிட்டான்.

சற்று நேரத்தில் அவர்கள் வீட்டில் இருந்து நிச்சயதார்த்தம் செய்வதற்காக சீர்வரிசை தட்டுகளை ஏந்தியபடி பெண்களின் ஊர்வலம் கிளம்பியது.

'பெட்ரோமாக்ஸ்' விளக்கு வெளிச்சத்தில், தட்டுகளில் இருந்த சீர்வரிசை பொருட்கள் பளிச்சென தெரிந்தன. ஊர்வலத்தின் இரு பக்கமும் அரண் போல் ஆண்கள் நடக்க–அவர்கள் மத்தியில் பட்டு வேட்டி–சட்டையுடன் சத்தியமூர்த்தியும் நடந்து சென்றான்.

மேலத் தெரு வீட்டில் பெண் வீட்டார் வந்து இறங்கி இருந்ததால், அங்கேயே நிச்சயதார்த்தம் நடைபெற்றது. தாம்பூலத் தட்டுகளை மாற்றும்போது, தலை நிமிர்ந்து முதன் முதலாக மணப்பெண் வசுந்தராவைப் பார்த்த சத்தியமூர்த்தியின் விழிகள் விரிந்தன.

'இந்தப் பெண் இத்தனை அழகா... இவள் எப்படி என்னைக் கல்யாணம் பண்ணிக்கொள்ள சம்மதித்தாள்?'

அவன் மனதில் கேள்வி உலுக்கியது.

## 2

சத்தியமூர்த்தி பிறந்த அதே கிராமத்தில்தான் வசுந்தரா பிறந்திருந்தாலும், அவள் வளர்ந்து– படித்ததெல்லாம் திருச்சியில்!



அவளுடைய அம்மா விசாலம், அங்கிருந்த ஒரு தனியார் பள்ளியின் தலைமை ஆசிரியை. கண்டிப்புக்கு பெயர் போனவள்.

இளம் வயதிலேயே துணையைப் பறிகொடுத்துவிட்ட அவளுக்கு மகள் மட்டும்தான் வாழ்க்கையில் இருந்த ஒரே பற்று. கணவர் துரைச்சாமி விவசாயி. திருமணமான புதிதில் விசாலம், அந்த கிராமத்தில் இருந்தவள். தான் படித்திருந்த ஆசிரியைப் பயிற்சிப் படிப்பை மறந்துவிட்டு, வீட்டுக்குள் முடங்கி இருந்தாள்.

என்று நெஞ்சு வலியென்று படுத்த துரைச்சாமி, அவளை அநாதரவாக விட்டுவிட்டு கண்ணை மூடினாரோ அன்றிலிருந்து அக்கிராமத்தை வெறுக்க ஆரம்பித்தாள்.

அவள் படித்த படிப்பு கை கொடுக்க, திருச்சியில் வேலை தேடிக்கொண்டு– கைக்குழந்தையுடன் இடம் பெயர்ந்துவிட்டாள். வருடா வருடம் வரும் ஊர்த் திருவிழாவுக்கு மட்டும் மறக்காமல் வந்து துரைச்சாமியின் பெற்றோருடன் இருந்துவிட்டுச் செல்வாள். விசாலம் பிறந்த ஊர் திருச்சிக்குப் பக்கத்தில் இருந்ததால், அவளின் பெற்றோர் அவளுடன் வந்து தங்கிக்கொண்டனர்.

மகனைப் பெற்றவர்கள், மருமகளின் தயவில் வாழ விரும்பவில்லை. மண்ணைக் கொத்தி பயிராக்கி, அதில் வரும் வருமானத்தை ஆண்டுதோறும் ஊர்த் திருவிழாவுக்கு வரும் மருமகளிடம்– பேத்திக்கு என்று சொல்லி கொடுத்துவிடுவார்கள்.

அந்தத் திருவிழா நேரங்களில் வந்து போகும் வசுந்தராவின் அழகை அந்த ஊரே மெச்சும். அவள் சிறு வயதுப் பெண்ணாக இருந்தபோது, அவளைப் பார்த்திருக்கிறான் சத்தியமூர்த்தி. பெரிய பெண்ணாக ஆன பின்பு பார்த்ததில்லை.

இயல்பாகவே இருந்த நற்குணம் காரணமாகவே அவன், தன் வயதுப் பெண்களை என்றுமே ஏறெடுத்து பார்ப்பதில்லை. அப்படிப்பட்டவன்– பூங்கோதையைப் பார்த்து– பேசிப் பழகியது ஆச்சரியமான ஒன்று. அதனாலோ என்னவோ... அவன் காதல் நிறைவேறவில்லை.

இன்று திருமணப் பெண்ணாக அமர்ந்து இருந்தவளின் பேரழகைக் கண்டு அவன் பிரமித்துவிட்டான். 'இந்தப் பெண் எப்படி என்னைத் திருமணம் செய்துகொள்ள சம்மதித்தாள்?' என்ற கேள்வி அவன் நெஞ்சில் உழன்றது.

"பொண்ணு கையில பரிசச் சேலையைக் கொடுத்து கட்டிக்கிட்டு வரச் சொல்லுங்கப்பா..."

சற்று நேரத்தில் புதிய பட்டுச்சேலை உடுத்தி, சபைக்கு வந்து அமர்ந்தாள்.

"நலங்கு வைக்கிறவங்க எல்லாம் முன்னால வாங்கம்மா..." – மீண்டும் கூட்டத்தில் குரல் எழும்ப, நலங்கு ஆரம்பமானது.

சத்தியமூர்த்தி அவளையே பார்த்துக்கொண்டிருந்தான். எழுமிச்சைப் பழ நிறத்தில்– வட்ட வடிவ முகத்தில்– அகன்ற பெரிய கருவிழிகளுடன் குனிந்த தலை நிமிராமல் அமர்ந்து இருந்தவளிடம் தெரிந்த அழகு... அவனை அயர வைத்தது.

'இப்படிப்பட்ட பேரழகியையா நான் கைபிடிக்கப் போகிறேன்?'

அவனால் இன்னும்கூட நம்ப முடியவில்லை.

நலங்கு முடிந்து இரவு விருந்து தொடங்கியது. சத்தியமூர்த்தியின் தோளைத் தொட்ட பவளக்கொடி.

"ஐயா... உங்கூடப் படிச்ச கண்ணன் வந்திருக்கான்ய்யா. வந்து அவனை விசாரி. இப்படியே நின்னா எப்படி?... நின்னா நின்ன இடம்– உட்கார்ந்தா... உட்கார்ந்த இடம்னு இருந்தா எப்படி? உங்கல்யாணத்தைப் பார்க்க சென்னையில இருந்து உன் சிநேகிதன் வந்திருக்கிறான். அவன்கிட்ட நின்று ரெண்டு வார்த்தை நீ பேசினாத்தானே நல்லா இருக்கும்?" என்று கடிந்துகொண்டாள்.

'நான் என்னத்தைப் பேசி...?'– பெருமூச்சு விட்டவாறு நண்பனைத் தேடிப் போனான் புது மாப்பிள்ளை.

"வா கண்ணா... எப்ப வந்த?"

சென்னையில் மென்பொருள் நிறுவனம் ஒன்றில் என்ஜினீயராக இருக்கும் கண்ணனின் கையில் இருந்த பெட்டியை வாங்கியபடி விசாரித்தான்.

"ஏன்டா... விடிஞ்சா உனக்குக் கல்யாணம். நீ என் பெட்டியை சுமக்கணுமா? நானே இதை வைத்திருந்தா ஆகாதா?" – சிரித்தபடி பெட்டியைக் கொடுக்க மறுத்தான்.


"சரி. உள்ளே வா... முதல்ல சாப்பிடு."

"இப்ப வேண்டாம் சத்யா. ரெயிலில் வந்தேன். கசகசன்னு இருக்கு. ஒரு குளியல் போட்டுட்டு சாப்பிட்டுக்கறேனே...?"

"அதுவும் சரிதான். கொஞ்சம் இரு. மேலத் தெரு வீட்டுச் சாவியை எடுத்துட்டு வர்றேன். நீ அங்கே தங்கிக்க."

அவன் சாவியுடன் வந்ததும், இருவரும் பேசிக்கொண்டே நடந்தார்கள்.





# முத்து

★ சிப்பிக்குள் முத்து உருவாக 15 ஆண்டுகள் ஆகும்.

★ பப்பாளிப் பழத்தின் தாயகம் மெக்சிகோ.

# தேனீ

தேனியின் ரீங்காரம் என்பது இறக்கை ஒலியே! ஆஸ்திரேலிய தேனீக்களுக்கு கொடுக்கு கிடையாது.

– ஜெ.மரியவசந்தன், அழகப்பபுரம்.

# நினைவாற்றல்

★ ஆஷா கிரே என்ற பிரபல தாவர நிபுணர் 25 ஆயிரம் தாவரங்களின் பெயரை மனப்பாடமாகச் சொல்வார்.

★ சக்கரவர்த்தி ஜீலியஸ் சீசர் தன் சேனையில் இருந்த ஆயிரக்கணக்கான போர் வீரர்களின் பெயர்களை நினைவில் வைத்திருந்தார்.

★ எகிப்து முஸ்லிம் பல்கலைக்கழகத்தில் ஒவ்வொரு மாணவரும் திருக்குரானை மனப்பாடமாகச் சொல்ல வேண்டும்.

★ லார்டு பைரலுக்குத் தன் கவிதைகள் எல்லாம் தலைகீழ் பாடமாகத் தெரியும்.

★ பிரபல சரித்திர ஆசிரியர் மெக்காலே, ஒரு புத்தகத்தைப் படித்தால் ஒவ்வொரு பக்கமும் அவர் மனத்தில் நகல் போல பதிந்துவிடும்.

– லலிதா செல்லப்பா, பம்மல்.

திருமணப் பெண் தங்கி இருந்த வீட்டுக்கு பக்கத்து வீட்டைத் திறந்தான் சத்தியமூர்த்தி.

"இது யாரு வீடுடா."

"எங்க வீடில்லை."

"அதுதான் எனக்குத் தெரியுமே!"

"பஞ்சவர்ண அத்தையின் வீடு. அத்தை மகன் மும்பையில் வேலையில் இருக்கிறான். அத்தையும் அவன்கூடத்தான் இருக்காங்க. பிறந்த ஊரில் இந்த வீட்டைக் கட்டிப் போட்டுட்டிருக்கான். வீட்டுச் சாவி என்கிட்டதான் இருக்கும்."

புதுமாப்பிள்ளை சொன்னதைக் கேட்ட கண்ணன் சிரித்தான். பக்கத்து வீட்டின் ஆரவாரத்தைக் கேட்டுத் திரும்பிப் பார்த்தான். அவன் பார்வையைக் கவனித்த சத்தியமூர்த்தி, மெதுவான குரலில்...

"அங்கே பொண்ணு வீட்டுக்காரங்க தங்கி இருக்கிறாங்கடா..." என்றான்.

"இதைப் பாருடா... ம்ம்ம். அது யார் வீடு?"

"அது ரங்கசாமி பெரியப்பா வீடு. அவருடைய மகன்..."

"ஏதாவது ஒரு நகரத்தில் இருப்பான். அவரும் பெருமைக்காக வீட்டைக் கட்டிவிட்டு, மகனுடன் சேர்ந்திருக்கப் போயிருப்பார். வீட்டுச்சாவி உங்ககிட்ட இருந்திருக்கும்."

கண்ணன் கிண்டலாக இடைமறித்துக் கூற– சத்தியமூர்த்தி ஆமோதிப்பாக தலையை அசைத்துக்கொண்டே சிரித்தான்.

"அதுவேதான்."

"எது எப்படியோ... உன் கல்யாணத்துக்கு காலியான புது வீடுகள் நிறைய கிடைச்சிருக்கு. ஜமாய்டா. ஆமாம்... பொண்ணு வீடு பெரிய இடம்னு கேள்விப்பட்டேன். நீ மதுரையிலேயே பெரிய கல்யாண மண்டபமாய் பிடிச்சிருக்கலாமே?"

"வீண் செலவு எதற்குன்னு சொல்லிட்டாங்க."

"உன் வீட்டில் சொன்னாங்களா?"

"இல்லை. பொண்ணு வீட்டில் சொன்னாங்களாம்."

"அப்படியா...?"

கண்ணன் ஆச்சரியமாய் சத்தியமூர்த்தியைப் பார்த்தான்.

"நீ குளிச்சி முடி."

"நீ எங்க போற...?"

"உனக்கு சாப்பாட்டை இங்கேயே கொண்டு வரச் சொல்லிட்டு

வர்றேன்."

"உனக்கு ஏன்டா வீண் சிரமம்?"

"அதுசரி. பக்கத்து ஊர்ல பன்னிரெண்டாம் வகுப்பு வரைக்கும் ஒண்ணாப் படிச்சோம். நீ 'என்ஜினீயரிங்' படிக்கப் போயிட்டே. நான் டீக்கடைப் பக்கம் ஒதுங்கிட்டேன். வருஷம் பத்தாச்சு. சொந்த பந்தம்... பழகினவங்க... எல்லோருக்கும் பத்திரிக்கை அனுப்பும்போது, உன் நினைப்பும் வந்தது. அனுப்பி வைச்சேன். பழகின பழக்கத்தை மறக்காம பெங்களூருல இருந்து புறப்பட்டு வந்திருக்க. இது சிரமமில்லையா?"

"ஏன்டா... நீ என் பள்ளிக்கூட நண்பன். உன் கல்யாணத்துக்கு வருவது எனக்கு சிரமமா?"

"உனக்கு சாப்பாட்டைக் கொண்டு வரச் சொல்லுவது மட்டும் எனக்கு சிரமமா ஆகிவிடுமா?"

பதிலுக்குப் பதில் பேசின நண்பனைப் பார்த்து கைகளை உயர்த்திச் சிரித்தான் கண்ணன்.

"சரி. நான் சரணாகதி ஆயிட்டேன். உன் இஷ்டப்படி செய்."

கண்ணன் குளிக்கப் போக, சத்தியமூர்த்தி வாசல் கதவைத் திறந்துகொண்டு தெருவில் இறங்கி நின்றான்.

அவன் பார்வை அவனை அறியாமல் வசுந்தரா தென்படுகிறாளா என்று பக்கத்து வீட்டுப் பக்கம் துழாவியது.

## 3

கண்ணன் குளித்துவிட்டு கைலியும், 'டி-சர்ட்'டும் அணிந்துகொண்டான். சத்தியமூர்த்தி, ஒரு சிறுமி பின்தொடர வீட்டுக்குள் நுழைந்தான்.

"வைச்சுட்டுப் போ செல்வி..." என்று அவன் கூறியவுடன்–கையில் இருந்த இலைகளையும், டிபன் கேரியரையும் அங்கே இருந்த மேசையில் வைத்துவிட்டு அந்தச் சிறுமி ஓடிவிட்டாள்.

"வாடா சாப்பிடலாம்."

இலையைப் போடப் போனான்.

"சத்தியா... இன்னைக்கு என்ன பவுர்ணமியா?"– ஜன்னலருகே சென்று நிலவைப் பார்த்த வண்ணம் வினவினான் கண்ணன்.

"ஆமாம். அதுக்கென்ன இப்ப?"



"நிலாச்சோறு சாப்பிட்டு எத்தனை நாளாச்சு? எங்க ஊர் அடுக்குமாடிக் குடியிருப்புல ஜன்னலைக்கூட திறப்பது இல்லை. இன்னைக்காவது மொட்டை மாடியில் உட்கார்ந்து நிலாச்சோறு சாப்பிடலாமா?"

சத்தியமூர்த்திக்கும் அது பிடித்தமானதாக இருந்தது. அவன் மனதில் இருந்த வலிக்கு– கண்ணனின் வருகையும், அருகாமையும் மருந்தாக இருந்தன. சாப்பாட்டையும், இலைகளையும் ஒரு கையில் பிடித்து, மறு கையில் தண்ணீர் பாட்டிலை எடுத்துக்கொண்டு படியேற ஆரம்பித்தான். பின்னாலேயே ஜமுக்காளம், தலையணைகளோடு கண்ணன் தொடர்ந்தான்.

மொட்டை மாடியில் ஜமுக்காளத்தை விரித்து, அதன் முன்னால் இலைகளைப் போட்டுக்கொண்ட நண்பர்கள் பேசிக்கொண்டே சாப்பிட ஆரம்பித்தனர்.

வானில் வலம் வந்த நிலவை அண்ணாந்து கண்ணன் பார்க்க, சத்தியமூர்த்தி சிரித்தான்.

"என்னடா... நிலாவைத் தொட்டுக்கொண்டே சாப்பிடப் போகிறாயா?"

"இல்லை சத்யா. எனக்கு நிலாச் சோற்றைப் பற்றிய கவிதை ஒன்று நினைவுக்கு வருது."

"உனக்குத்தான் கவிதை பிடிக்குமே?"

"ஏன், உனக்குப் பிடிக்காதா? நானாவது கவிதை படிக்கற ஆள். நீ கவிதை எழுதுகிற ஆளாச்சே! படிப்பைத்தான் பாதியில் நிறுத்திட்ட.... முழுசாய் படிச்சிருந்தா நீ எங்கேயோ போயிருப்பியே."

"வீட்டுச் சூழ்நிலை சரியில்லை."

"அதைச் சொல்லு. உன்னைப்போல இருக்கும் இலக்கியவாதிக்கும், டீக்கடைக்கும் என்ன சம்பந்தம்னே தெரியலை. வாழ்க்கையில் நான் பார்க்கும் விசித்திரங்களில் இதுவும் ஒன்று."

"ப்ச்சு."

"ஏன்டா நாயைக் கூப்பிடுகிறாய்?"

"அடச்சீ. நீ சொல்வதை அப்படி ரசிக்கிறேன்டா."

"கலாய்க்கிறாயாக்கும்! அதுசரி... இந்தக் கவிதையையும் கேட்டுவிடு!"

"நீ முதலில் சொல்லு!"

"நதியோரம் நடந்தபோது...
நிலாச் சோற்றை நெஞ்சம் தேடும்...

சுமையில்லாத மனமிருந்தால்...
சுவையான உணவு கூடும்..."

சத்தியமூர்த்தியின் இதயம் கனத்தது. அந்தக் கவிதையின் அர்த்தமிகு வரிகள், ஆழமாக அவனுடைய இதயத்தில் இறங்கின.

'சுமையில்லாத மனமிருந்தால்...
சுவையான உணவு கூடும்'– நினைத்தபோது, அவனுக்கு சாப்பிட்டுக்கொண்டிருந்த சாப்பாடு ருசிக்கவில்லை.

எழுந்து இலைகளை வெளியே போட்டுவிட்டு கைகழுவிக்கொண்டவர்கள், மொட்டை மாடியின் சுற்றுச் சுவரில் அமர்ந்தார்கள். பக்கத்தில் இருந்த வேப்ப மரத்தின் காற்று, உடல் தளுவ... கண்ணன் அதை ஆனந்தமாக அனுபவித்தான்.

"ஆயிரம்தான் சொல்லுடா. இந்த இயற்கைக் காற்றுக்கு ஈடு, இணை கிடையாது. இந்த மொட்டை மாடி... நிலாச்சோறு... வேப்ப மரத்துக் காத்து! இந்த நாளை என்னால் அவ்வளவு சீக்கிரம் மறந்துட முடியாது."

உணர்ச்சிவசத்தோடு பேசிக்கொண்டிருந்த கண்ணன்– எதையோ நினைத்தவனாக சத்தியமூர்த்தியைப் பார்த்து கண் சிமிட்டினான்.

"உன்னாலும்தான் மறக்க முடியாது."

"எனக்கென்ன வந்துச்சு?"

"ஏன்டா... விடிந்தால் உனக்குக் கல்யாணம். இந்த நாளை மறந்திடுவியாக்கும்? ஒருவேளை... நாளைக்கு ராத்திரியைத்தான் உன்னால் மறக்க முடியாமல் இருக்குமோ...?" என்று சொல்லிவிட்டுச் சிரித்தான்.

நண்பனின் கேலியில் சத்தியமூர்த்திக்கு லேசாக உடல் சூடேறியது. மறுதினத்தின் இரவு நேரத்தை அவன் நினைத்துப் பார்த்தான்.

எப்படி...? இயல்பாய் அவளைத் தொட்டு ஆண்டுவிடுவானா? அவனால் பூங்கோதையை மறந்து, வசுந்தராவுடன் கலந்துவிட முடியுமா?

'முடிய வேண்டும்'– அவனுக்குள் பெருமூச்சுக் கிளம்பியது.

"எதுக்குடா... இவ்வளவு நீளமாய் பெருமூச்சு விடறே? இந்த ராத்திரி முடியாம நீண்டுக்கிட்டே இருக்குதுன்னா?"– கண்ணன் அதற்கும் கேலி செய்தான்.

பக்கத்து வீட்டின் சலசலப்பை அவர்கள் சற்று நேரம் வேடிக்கை பார்த்துக்கொண்டு இருந்தார்கள்.



"ஏன்டா சத்யா... பொண்ணு அந்த வீட்டில்தானே இருக்கு?"

"ம்ம்ம்."

அசுவாரசியமாய் 'ம்' கொட்டினவனை ஆச்சரியத்துடன் பார்த்தான்.

"விடிஞ்சா கல்யாணம். பொண்ணு பக்கத்து வீட்டில் இருக்கு. எதையாவது சாக்கை வைத்து, பொண்ணை ஓரம்கட்டி பேசணும்னு உனக்குத் தோணவே இல்லையா?"

"எனக்கு அது தோணலை."

"வேற எது தோணுது?"

"ஆளாளுக்கு... 'விடிஞ்சா கல்யாணம்...' 'விடிஞ்சா கல்யாணம்'னு பழைய சினிமாப் படப்பெயரைச் சொல்றீங்களே! விடிந்தால் விடிந்துவிட்டுப் போகுது. கல்யாணம் நடந்தால் நடந்துவிட்டுப் போகுது. அதுக்குப் போய் இவ்வளவு அலட்டிக்கணுமா?"

புதுமாப்பிள்ளை சலிப்போடு இதைக் கூற– நண்பனோ அவனை விநோதமாக பார்த்தான்.

"ஏன்டா அப்படிப் பார்க்கற?"

"நீ அருங்காட்சியகத்துல இருக்க வேண்டிய பிறவிடா."

இதைக் கவனிக்காமல் பக்கத்து வீட்டைப் பார்த்தான் அவன். ஜன்னல் பக்கம் வசுந்தராவின் முகம் தெரிய– அவன் விழிகளில் மின்னல் வெட்டியது. அவளது முகத்தைப் பார்த்துக்கொண்டிருந்த கண்ணன், பார்வையைத் திருப்பாமலேயே...

"என்னடா சத்யா... பக்கத்து வீட்டில் கல்யாணப் பொண்ணு தெரியறாளா?" என்று கேட்டான்.

"எப்படிடா கண்டுபிடிச்சே?"

"உன் முகத்தில் எரியும் பல்பைப் பார்த்தாலே தெரியுதே?"

"ஏய்ய்..."

சத்தியமூர்த்தியின் முகத்தில் வெட்கம் சூழ்ந்தது. கண்ணன் அதை ரசித்தான்.

"அது எப்படிடா! கல்யாணமே பிடிக்காதவன் போல அப்படி ஒரு 'ரேஞ்சில்' பிலிம் காட்டின... இப்ப இப்படியொரு வழிசல் வழியறே... முகத்தைத் துடைச்சுக்க."

கண்ணன் பேசியவாறு திரும்பியபோது, பக்கத்து வீட்டு ஜன்னலில் தெரிந்த வசுந்தராவின் முகம் விலகி, வேறொரு நடுத்தர வயதுப் பெண்ணொருத்தி அங்கே வந்து நின்றாள்.

அவளைப் பார்த்த கண்ணனின் முகம் மாறியது.

"ஏன்டா... இதைப் பார்த்தா ஜொள்ளுவிட்டாய்?" என்று ஆச்சரியமாக கேட்டான்.

"ஆமாம்"– வசந்தரா விலகிப் போய்விட்டதை அறியாத அவன் திரும்பிப் பார்க்காமலே சொன்னான்.

நீ பாவம்தான்டா. இப்படியொரு பெண்ணைக் கல்யாணம் பண்ணிக்கொள்ளப் போகிறவன்... திகிலடித்தது போலத்தான் இருப்பாய்! நான்கூட உன்னைப் புரிந்துகொள்ளாமல் கிண்டல் அடித்துவிட்டேனே! எப்படிடா சத்யா... இந்தக் கல்யாணத்துக்கு எப்படி நீ சம்மதிச்சே...?"– உருக்கமாக கேட்கவும்,

'ஏன் இவன் இப்படி உருகுகிறான்?' என்று புரியாமல் பக்கத்து வீட்டு ஜன்னலைப் பார்த்த சத்தியமூர்த்தி– வயிற்றைப் பிடித்துக்கொண்டு சிரித்தான்.

"என்னடா சத்யா...?"– கண்ணன் புரியாமல் விழித்தான்.

"டேய்... இது பெண்ணோட அம்மாடா. ஹா...ஹா..." அவனால் சிரிப்பை அடக்க முடியவில்லை.

நண்பன் முகத்தில் குடம் குடமாக அசடு வழிந்தது. அவர்கள் இருவரும் பார்த்துக்கொண்டு இருக்கும்போதே விசாலம் உள்ளே போய்விட– வசுந்தரா மீண்டும் ஜன்னலருகே தென்பட்டாள்.

## 4

மணப்பெண்ணின் முகம் ஜன்னல் கம்பிகளில் பதிந்திருக்க– அவளுக்கு தாலிகட்ட காத்திருப்பவனாலும், நண்பன் கண்ணனாலும் அவளைத் தெளிவாக பார்க்க முடிந்தது.

"இவள்தான் கல்யாணப் பெண்!"

அவன் கூறியதும், கண்ணனின் முகம் அதிர்ச்சியைப் பிரதிபலித்தது.

"இவளா...?"

அக்குரலில் தெரிந்த வேறுபாட்டை, இவன் கண்டுகொண்டான்.

"இவளை உனக்குத் தெரியுமா?"

"தெரியும். ஆனா, அவளுக்குத்தான் என்னைத் தெரியாது."

கண்ணன் முகம் சரியாக இல்லை. எனவே, அவன் எதையோ கூறப் போகிறான். அது நிச்சயம் தனக்கு மகிழ்ச்சியை அளிக்கும்



செய்தியாக இருக்காது என்பது சத்தியமூர்த்தியின் உள்ளுணர்வுக்குப் புரிந்தது.

"சொல்லு கண்ணா... என்ன விஷயம்?"

"சத்யா... நீ வேடிக்கைக்காக சொன்னாலும், நானும் திரும்பவும் இந்த வார்த்தைகளைத்தான் சொல்ல வேண்டியது இருக்கு..."

"என்னடா..."

"விடிஞ்சா உனக்கு கல்யாணம் நடக்கப்போகுது..."

"டேய்..."

"பொறு... பொறு. அதுக்குள்ள கோபப்படாதே. இப்பப் போய் கல்யாணப் பெண்ணைப் பத்தி எனக்குத் தெரிஞ்ச விஷயத்தைச் சொன்னா அது நல்லா இருக்காது."

"அதுக்காக என்கிட்ட சொல்லாம மறைக்கப் போறியா?"

"நீ என் நண்பன். உன்கிட்ட சொல்லாம மறைக்கிறதுக்கும் எனக்கு மனசு வரலே."

"அந்தமட்டிலும் நீயாவது மாறாமல் இருக்கியே! ம்... சொல்லு."

நண்பன் சொல்ல ஆரம்பித்தான். சத்தியமூர்த்தி கைகளை முன்னால் கட்டிக்கொண்டு, குறுக்கே பேசாமல் கேட்டுக்கொண்டிருந்தான்.

வானத்தில் நிலவு– ஒளி மழையைப் பொழிந்துகொண்டிருந்தது. இதமான அந்த இரவு நேரத்தில்– மொட்டை மாடியில்– குளிர்ந்த வேப்ப மரக் காற்று தவழ்ந்து வந்து அவர்களின் உடலைத் தழுவியது. இது எதையும் உணராதவனாக சத்தியமூர்த்தி, கண்ணனின் முகத்தைப் பார்த்துக்கொண்டிருந்தான்.

"என்கூட பெங்களூரில் வேலை பார்க்கும் 'சாப்ட்வேர்' என்ஜினீயர் சதீஷ். அவன் கொஞ்சம் ஜாலி ரகம்."

"ஜாலி ரகம்னா?"

"பொண்ணுககிட்ட அதிகம் கடலை போடுவான்."

"ஓஹோ."

"எந்தப் பெண்ணாக இருந்தாலும் பேசிப் பழக முயற்சிப்பான்."

"அப்படியா?"

"ஆளும் அழகாக இருப்பான். பண வசதியும் எக்கச்சக்கம்."

"அவனைப் பத்தி எனக்கென்னடா வந்தது?"

"அவன் இந்தப் பெண்ணைக் காதலித்தான். அதாவது, காதலிப்பதாய் கொஞ்ச நாள் சொல்லிக்கொண்டான்."

"கண்ணா..."– சத்தியமூர்த்தி அதிர்ந்தான்.

'அவ்வளவு பெரிய படிப்பை படித்தவளை... 'பிளஸ் 2' வரை படித்த தனக்கு கல்யாணம் செய்து கொடுக்க, அவள் வீட்டார் முன்வந்ததற்குக் காரணம் இதுதானா? வங்கியில் வேலை பார்ப்பவள், டீக்கடைக்காரனை கைப்பிடிப்பதற்கான ரகசியம் இதுதானா?'

"ஸாரிடா சத்யா. இதைக் கேட்டதும், உன் மனசு என்ன பாடுபடும்னு எனக்குப் புரியுது. ஆனா, எனக்குத் தெரிஞ்சதை உனக்குச் சொல்லாம விட்டா ஒரு வகையில் அது நட்புக்கு நான் செய்யும் துரோகம்டா."

"காதலிச்சவன் ஏன்டா இவளைக் கல்யாணம் பண்ணிக்கலே?"

"அவன் அந்தஸ்தே வேறடா. சொந்தமாய் பெங்களூரில் கார்– பங்களாவுடன் இருக்கும் பெண் கிடைத்ததும், இவளைக் கழற்றி விட்டுவிட்டான்."

'கழட்டிவிட்டதா?'– சத்தியமூர்த்தியின் இதயம் ரணமானது. பூங்கோதையும் இந்த வார்த்தையைத்தானே சொன்னாள்.

'அதிக பணத்துக்கு விலைபோன தனக்கு இப்படிப்பட்ட பின்னணி கொண்ட பெண்தானே கிடைக்கும்' என்று நொந்துகொண்டான் சத்தியமூர்த்தி.

"இவள் வேலை பார்க்கிறாளேடா?"

"சதீசும் வேலை பார்க்கிற பெண்ணைத்தானே கல்யாணம் பண்ணிக்கொண்டான். இவள் வாங்கும் சம்பளத்தைப் போல அவள் நாலு மடங்கு அதிகமாய் வாங்குறாடா. பெரிய பன்னாட்டு கம்பெனி. இரண்டு பேருக்கும் ஒரே இடத்தில் வேலை. கார்– பங்களா என சகலமும் இருக்கு. சதீஷ் இவளை சுத்தமாய் மறந்துட்டான்."

"இது உனக்கு எப்படித் தெரியும்?"

"அவனும், நானும் ஒரே அறையில கொஞ்ச நாள் தங்கி இருந்தோம். இவளைப் பற்றி அவன் தினமும் பேசுவான். வாராவாரம் நேரில் பார்க்க சேலத்துக்கு கிளம்பிப் போயிடுவான்."

"சேலமா... இவள் ஊர் திருச்சியாச்சே?"

"அது இவளின் சொந்த ஊர். இவள் வேலை பார்த்தது சேலத்தில்தான். அங்கே பெண்கள் விடுதியில் தங்கி இருந்தாள். சேலத்துக்கு சதீஷ் ஏதோ வேலையாகப் போனபோது, சினிமாவுக்கும் போனானாம். அங்கே இந்தப் பொண்ணும், தோழியுடன் படம் பார்க்க வந்திருந்தாளாம். தியேட்டரில் ஏதோ கலாட்டாவாம். இவள் தன் கைப்பையை அப்படியே இருக்கையில மறந்து விட்டுட்டு, அவசரமாப் போய்விட்டாளாம்?"



"அந்த கைப்பை, உன் நண்பனின் கையில் அகப்பட்டதாக்கும்?"

"அது எப்படிடா இவ்வளவு சரியா கண்டுபிடிச்சே?"– கண்ணன் உற்சாகமாய் வினவினான்.

சத்தியமூர்த்தி கண் இமைக்காமல் அவனையே பார்த்தான்.

"சரி... சரி! முறைக்காதே."

"விஷயத்துக்கு வா."

"அப்ப, அவள் கைப்பையில் இருந்த செல்போன்ல 'ரிங்' அடிச்சிட்டே இருந்துருக்கு. அவன் எடுத்துப் பேசி இருக்கான்."

"இவள் முகவரி சொல்லி இருக்கிறாள்."

"அவன் உடனே நேரே கொண்டுபோய் கொடுத்திருக்கான்."

"ம்ம். அப்படியே காதல் வளர்ந்துட்டது. அப்போதெல்லாம் அவன் தினமும் மணிக்கணக்கில் இந்தப் பெண்ணுடன் பேசுவான்டா. எவ்வளவு வேலை இருந்தாலும் தூக்கித் தூரப் போட்டுவிட்டு இவளைப் பார்க்க, சேலத்துக்கு ஓடிடுவான். நான்கூட அவன் உண்மையாகத்தான் இந்தப் பெண்ணை காதல் பண்ணுறான்னு நினைச்சேன். அவனிடம் கூடக் கேட்டேன்."

"அவன் என்ன சொன்னான்?"

"அப்படித்தான் நினைக்கிறேன்னு சொன்னான். அதுவரைக்கும் பழகிய பெண்களிடம் இல்லாத பல விஷயங்கள் இவளிடம் இருப்பதாகச் சொன்னான். பொறுமை... உண்மை... நேர்மைன்னு 'மை'களாக நிறையச் சொன்னான். குடும்பப் பாங்குன்னான். குத்துவிளக்குன்னான். கடைசியில் 'சீரியல்' பல்புக்கு பின்னால் போய்விட்டான்."

"நீ அவனிடம் கேட்கலையா?"

"கேட்டேனே...! வாழ்க்கைக்கு பணம் தேவைங்கிறான்."

"இவளும் வசதியானவள்தான்டா. அறுபது பவுன் நகை போட்டு, ஒரு லட்ச ரூபாயை தூக்கிக் கொடுத்து, வண்டி வண்டியா சீர்வரிசையை அனுப்புறாங்கடா. இந்தப் பெண்ணின் அம்மா 'டீச்சர்'. சொந்தமா திருச்சியில் வீடு இருக்கு. இந்தக் கிரா[illegible] நிலம் இருக்கு. பெண்ணின் சம்பளம் இருக்கு. இது வீட்டுச்[illegible] வாரிசுடா. அத்தனையும் இவளுக்குத்தான் வந்து சே[illegible]

"அதெல்லாம் எந்த மூலைக்குப் பத்தும்?[illegible] சொல்லலைடா. சதீஷ் சொன்னான்."

"என்னடா இப்படிச் சொல்ற...?"

"நீ எந்தக் காலத்துல இருக்கே சத்யா...? பெங்களூரில் 'கிரவுண்ட்' வீட்டுமனை என்ன விலைக்கு விற்குதுன்னு தெரியு இந்தப் பெண்ணின் திருச்சி வீட்டை விற்றால், பெங்களூரில் கைய காலிமனைகூட வாங்க முடியாது. பெங்களூரில் முக்கிய இடத் மூன்று கிரவுண்டில் நீச்சல் குளத்தோடு பங்களா. நானே அ என் கனவில்கூட நினைத்துப் பார்க்க முடியாது. தீபாவின் தாத் முன்னாள் அமைச்சர்."

"தீபா யாரு?"

"சதீசோட மனைவி..."

"திருமணமே முடிந்துவிட்டதா?"– சத்தியமூர்த்தி திரும்பி பக்கத் வீட்டைப் பார்த்தான்.

ஜன்னல் கம்பியில் பதிந்திருந்த வசுந்தராவின் முகம் கண்ணீரி நனைந்திருந்தது.

# 5

"இந்தப் பெண்ணுக்கு தங்க நகைதானே அறுபது பவு போடுறாங்க? தீபாவுக்கு வைர நகைகளா செய்து வச்சிருந்தாங் ஒரு லட்சத்தை பெரிதாகப் பேசுகிறாயே? அவளோட பாங்கி இருப் ஒரு கோடியைத் தாண்டும். அவள் சம்பளத்திற்காக வேலைக் வரலை. படித்த படிப்பு வீணாகக் கூடாதுன்னு ஒரு எண்ணம் என்னதான் பணம் இருந்தாலும், வேலைக்குப் போவது என்பது ஒரு 'பிளஸ் பாயிண்ட்' என்ற கணக்கு. அதனால்தான் வேலைக்கு வந்திருக்கிறாள்."

"இவ்வளவு பெரிய இடத்துப் பெண்ணுக்கு, வேறு மாப்பிள்ளை கிடைக்கலையா?"

"சதீஷும் பெரிய இடம்தான்டா. அவனுடைய அப்பா ஐதராபாத்தில் பெரிய 'பிசினஸ்மேன்'. தீபாவைப் போலத்தான் இவனும் ஒரு அடையாளத்திற்காக வேலை பார்த்தவன். பணம் பணத்தோடதான் சேரணுங்கிறது சதீஷோட அப்பாவின் எண்ணம். தீபாவுக்கு ஏற்ற மாப்பிள்ளை இவன்தான்னு அவளோட அப்பா முடிவு பண்ணிட்டார். சதீஷ் அழகில் தீபாவும் மயங்கிட்டாள்."

"இது அநியாயம் கண்ணா."

இதைச் சொல்லும்போதே இதே அநியாயத்தைத்தானே அவனும் பூங்கோதைக்கு பண்ணி இருக்கிறான் என்று அவனுடைய மனசாட்சி அவனை உறுத்தியது.

"அவனுக்கு இதுதான் நியாயம் சத்யா. இந்தப் பெண் ரொம்ப அழுதுச்சாம். சதீஷை மறக்க முடியாதுன்னு கெஞ்சுச்சாம். அவன் இறக்கப்படலைடா. எதார்த்தமாய் யோசிச்சுப் பாருன்னு சொல்லிட்டானாம். இதையும் அவனே சொன்னான்."

'பெண்கள் பாவம். மென்மையான இதயம் கொண்டவர்கள். ஒருவனுடன் பழகிவிட்டால் கடைசி வரை அவனுடன் வாழ்ந்துவிட வேண்டும் என்று நினைக்கும் மனமுள்ளவர்கள். அவர்களிடம் போய் எதார்த்தத்தைச் சொன்னால் எப்படி?'– சத்தியமூர்த்தியின் மனம் வருந்தியது.

"இவள்தான் சதீஷின் காதலியா? உனக்கு நிச்சயமாகத் தெரியுமா?"

"தெரியும்டா. இந்தப் பெண்ணின் பெயர் வசுந்தராதானே?"

"இதை கல்யாணப் பத்திரிகையில் நீ பார்த்திருப்பாய்."

"பெண்ணோட அம்மா பெயர் விசாலம். பள்ளிக்கூட ஆசிரியை. திருச்சியில் வீடு. அப்பா இல்லை. மகள் குழந்தையாக இருக்கும்போதே இறந்துவிட்டார். இவள் இப்போது சேலத்தில் பாங்கியில் வேலை பார்க்கிறாள். இந்த விவரம் போதுமா?"

"போதும். ஆனால், இவளை எப்போது நீ பார்த்தாய்?"

"ஊஹூம். இந்தப் பெண்ணை நேரில் பார்த்ததில்லை. சதீஷ் அவனுடைய செல்போனில் இவளின் படத்தை வைத்திருந்தான்."

"இன்னும் வைத்திருக்கானா?"

"இல்லை. தீபாவுக்கு இது தெரிந்தால்... உடனே விவாகரத்து செய்துவிட்டுத்தான் மறுவேலை பார்ப்பாள்."

சத்தியமூர்த்தி யோசனையுடன் பக்கத்து வீட்டைப் பார்த்தான்.

வசுந்தராவின் சோக முகம், அவன் நெஞ்சைத் தாக்கியது. காதல் தோல்வி எத்தனை கடுமையானது என்று அவனுக்கும் தெரியும். இன்று இந்தக் காரணத்தைச் சொல்லி திருமணத்தை அவன் நிறுத்தினால், நாளைக்கு வசுந்தராவின் திருமணம் கேள்விக்குறியாக போய்விடாதா?

பூங்கோதைக்கும், அவனுக்கும் இருந்த பழக்கம் மனம் சார்ந்தது. காதல் என்ற வார்த்தையெல்லாம் இந்தக் கிராமத்துக்குள் இன்னும் வரவில்லை. ஆண்– பெண் இருவரும் லேசாக பார்த்துக்கொள்வதும்,

சிரித்துக்கொள்வதும்தான் காதல் என்று அவர்
நினைத்துக்கொண்டிருந்தார்கள். பூங்கோதைக்கும், அவனுக்
இருந்த பழக்கம்கூட அந்த வகையைச் சார்ந்ததுதான்.

பூங்கோதையை பெண் கேட்டு யார் வந்தாலும், அவ
திருமணத்துக்கு யாதொரு தடையும் இருக்கப் போவதில்ல
அவளுடைய சூழல் அப்படிப்பட்டது. அவளும், சத்தியமூர்த்தி
நான்கடி தள்ளி நின்று பகலில் பலர் பார்க்கப் பேசிப் பழகியவர்க
அந்தப் பழக்கம் அவளின் திருமணத்தைப் பாதிக்காது.

ஆனால், வசந்தராவின் சூழல் அப்படிப்பட்டது அல்
அவளுக்கும், சதீஷுக்குமான காதல் பல இடங்களில் பர
இருக்கலாம். காற்றுவாக்கில் திருச்சிக்குக்கூட பறந்து வந்திருக்கலா
அதனாலேயே அவசரமாக விசாலம் தன் புகுந்த வீட்டில் கல
பேசி, சொந்தத்தில் இருக்கும் குணமுள்ள மாப்பிள்ளையா
சத்தியமூர்த்தியைத் தேர்ந்தெடுத்திருக்கலாம்.

'காதல்' என்ற வார்த்தைக்கே இவ்வளவு பாதிப்புகளை வசந்தர
சந்தித்து இருக்கும்போது, திருமணம் நின்றுவிட்டால்... எவ்வள
பெரிய பாதிப்புகளை அவள் சந்திக்க வேண்டியது இருக்கும்?

அந்தப் பாதிப்புக்கு அவளை ஆளாக்கலாமா?

"என்ன சத்யா யோசிக்கிறாய்... கல்யாணத்தை நிறுத்த
போகிறாயா?"

"இல்லை. ஒருவேளை அந்த சதீசுக்கு இன்னும் கல்யாணமாகாம
இருந்திருந்தா, நான் இந்தக் கல்யாணத்தை கட்டாயம் நிறுத்
இருப்பேன். ஆனா, இவளை விட்டுட்டு வேறொருத்தியின் கழுத்தி
அவன் தாலி கட்டிவிட்டான்."

"அதனால...?"

"கல்யாணத்தை நிறுத்தப்போவதில்லை."

"உனக்கு நல்ல மனசுடா."

"கண்ணா... இந்த விஷயத்தை?"

"நான் யார்கிட்டேயும் சொல்லமாட்டேன். இந்த நொடியிலே
மறந்துட்டேன்... போதுமா?"

"அது போதும்!."

அதன்பின்னால் அவர்கள் பேசிக்கொள்ளவில்லை. மவுனம்
ஒரு கனத்த போர்வையாக அவர்கள் மேல் வந்து விழ– இருவரு
ஜமுக்காளத்தில் படுத்து கண்களை மூடினார்கள். கண்ண
படுத்தவுடன் பயணக் களைப்பில் கண்களை மூடிவிட... ப



ப்பிள்ளையால் தூங்க முடியவில்லை.

வசந்தராவின் கடந்த காலக் காதல் கதையைப் பற்றித்
தரிந்துகொண்டது, அவனுக்கு ஒரு தெளிவைக் கொடுத்தது.
கோதைக்கு அநியாயம் செய்யப்போவது போன்ற துக்கம் இருந்த
னதில், அது அகன்று– வசந்தராவின் நிலையை நினைத்து இரக்கம்
ந்து அமர்ந்தது.

மறுநாள் காலை, மணமேடையில் வசந்தராவின் கழுத்தில்
ாலியைக் கட்டியதும் அவனது மனதில் இருந்த கொஞ்ச நஞ்ச
ஞ்சலங்களும் மறைந்துபோய் நிர்மலமாகிவிட்டது.

முன்வரிசையில் அமர்ந்திருந்த கண்ணனைப் பார்த்தான். அவன்
மைதியாய் இமைகளை மூடித் திறந்தான்.

வசந்தராவின் கை பற்றி அக்னியை வலம் வந்தபோது, அவளது
ிரல்கள் நடுங்குவதை உணர்ந்தான். ஆறுதலாக அழுக்க மனம்
டித்தது. ஆனால், அதைச் செய்யவில்லை.

அவனுடன் இணைந்து பெரியவர்களின் பாதம் பணிந்து
ழுந்தபோதும், பாலும் பழமும் பகிர்ந்து சாப்பிட்டபோதும்,
லதெய்வம் கோவிலுக்குப் போய் வணங்கியபோதும், வசந்தராவிடம்
ரு விலகலை உணர்ந்துகொண்டான்.

அவள் இயல்பாக அவனுடன் ஒட்டி நிற்கவில்லை. மற்றவர்கள்
தை வெட்கம் என்று சொல்லிச் சிரித்தார்கள். ஆனால்,
த்தியமூர்த்தியின் மனசுக்குத் தெரியும். அது வெட்கத்தினால் வந்த
ிலகல் இல்லை என்பது.

"அம்மாடி வசந்தரா... அவன் உன்னைத் தொட்டுத் தாலி
ட்டின புருஷன். அவன் மேல பட்டால் நீ ஒண்ணும் கரைஞ்சு
போயிடமாட்டே. சும்மா ஒட்டி நில்லு. இப்படி எட்டி நின்னா,
ப்படி ரெண்டு வீட்டிலயும் பேரன்– பேத்தியைப் பார்க்கிறது?"

சொந்தக்கார பெண்மணி ஒருத்தி உரத்த குரலில் கூறவும்,
மற்றவர்கள் கலகலவென்று சிரித்தார்கள். அதைக் கேட்டு தலையைக்
னிந்துகொண்டாள் மணப்பெண்.

"படிச்சு வேலை பார்க்குற பொண்ணு. இப்படி
வெட்கப்படுதே!"

"வேலைக்குப் போனா வெட்கம் வராம இருக்குமா? நீ எதை
வைச்சு அப்படிச் சொல்ற...?"

இந்த தலைப்பை வைத்து பட்டிமன்றமே நடத்த
ஆரம்பித்துவிட்டனர்.





கண்ணன்– மணமக்களின் அருகே வந்து வாழ்த்துச் சொல்லிவிட்டு, கல்யாணப் பரிசாக நண்பனின் விரலில் மோதிரத்தை மாட்டுவிட்டான்.

"எங்கே வேலை பார்க்கற தம்பி...?" என்று ஒரு பெரியவர் கேட்க, காதில் அந்தக் கேள்வி விழாததைப் போலச் சென்றுவிட்ட நண்பனை நன்றியுடன் பார்த்தான் சத்தியமூர்த்தி.

# 6

பூக்கள், ஊதுபத்தி புகை சேர்ந்த கலவையான நறுமணம் சத்தியமூர்த்தியின் நாசியில் நுழைந்தது. அறைக்குள் நுழைந்து கதவைச் சாத்தினான்.

கட்டிலில் அமர்ந்திருந்தாள் வசுந்தரா. மெதுவாக அவளருகில் சென்றான். அவள் தலை குனிந்து தரையில் பார்வையைப் பதித்திருந்தாள். அவளுடைய தோளைத் தொட்டான். அவள் உடல் உதறியது. பதறி விலகினாள்.

அவன் புருவங்கள் முடிச்சிட்டன. இதை ஒருவகையில் எதிர்பார்த்தான்! ஆனால், இவ்வளவு பதற்றமான விலகலை எதிர்பார்க்கவில்லை.

'திருமணம் என்றால் என்னவென்று இவள் நினைத்தாள்?' என்று அவனுக்குள் சிறு கோபம் துளிர்த்தது. திருமணத்துக்கு சம்மதித்து மணமேடை ஏறி, தான் கட்டிய தாலியையும் கழுத்தில் வாங்கிக்கொண்டவள், இப்படி நடந்துகொள்வது தேவையில்லாத அலட்டல் என்றே அவனுக்கு தோன்றியது. தீர்க்கமாக அவளைப் பார்த்தான்.

"ஏன்... நான் உன்னைத் தொடக்கூடாதா?"– வார்த்தைகள் அழுத்தமாக வெளிவந்தன.

அவள் பதில் பேசவில்லை. சத்தியமூர்த்தியின் முகத்தில் ஒரு பிடிவாதம் வந்தது. இறுக்கமான முகத்துடன் அவளை நெருங்கினான். அவள் கலவரத்துடன் பின்னே நகர்ந்தாள்.

"வேண்டாம். கிட்டே வராதீங்க."

"ஏன்?"

"ஏன்னா... ஏன்னா... எனக்கு உங்களைப் பிடிக்கலை."

முகத்தில் அறைந்தது போல் உணர்ந்தான். ஆனால், இது

ஒருவழிப் பாதை. அவனைப் பிடிக்கவில்லை என்று அவளே
அவளைப் பிடிக்கவில்லை என்று அவனோ திரும்பிவிட முடியா
வாழ்க்கையின் இறுதி வரை சேர்ந்து நடந்துதான் ஆக வேண்டு

"இதே வார்த்தையை என்னாலும் சொல்ல முடியும் வசுந்தரா

"அப்படியா...?"

அவளது குரலில் இருந்த ஏளனத்தை அவனால் புரிந்துகொள்ள முடிந்தது.

அவளைவிட ஏளனமான பார்வையொன்றை அவளை நோக்கி வீசினான்.

"எதுக்கு இவ்வளவு ஆச்சரியப்படறே வசுந்தரா. நீ பெரிய அழகின்னு உன் மனசில நினைப்பா? மூக்கும் முழியுமா இருந் உங்கிட்ட மயங்கிருவேனா? இல்லைடி. நான் உன் கழுத்தி தாலியைக் கட்டித் தொலைச்சிருக்கேன். நீ என் பெண்டாட்டிய போயிட்டே! அதனால கிட்ட வந்தேன். இல்லைன்னா உ முகத்தைக்கூட பார்க்கமாட்டேன். போடின்னு சொல்லிட்டு போய்கிட்டே இருப்பேன். யாருகிட்ட உன் தெனாவெட்டை காட்டுற...?"

அவன் பேசியவிதம் கண்டு வசுந்தராவுக்கு கோபம் வந்தது.

"ஓ... அப்படியா. என் கழுத்தில் தாலியைக் கட்டி தொலைச்சிட்டீங்களா... எதுக்காக கட்டினீங்க? எனக்கு வாழ்க்கை கொடுப்பதற்காகவா... இல்லையே! உங்க தங்கைக்கு வாழ்க்கை கொடுக்க கட்டினீங்க. அறுபது பவுன் நகைக்கும், ஒரு லட்ச ரூபாய்க்கும் விலைக்கு வாங்கின மாப்பிள்ளைதானே நீங்க...?"

தன் மேல் சவுக்கடி பட்டதைப் போல் அவன் மனம் துடித்த முஷ்டியைத் மடக்கி கோபத்தை கட்டுக்குள் கொண்டுவந்தா அவளைப் புண்படுத்த வேண்டும் என்று அவள் இதைச் சொன்னா அந்த வார்த்தைகளில் உண்மை இருக்கிறதுதானே...!

"உனக்குத் தெரியாமல் இது நடந்ததா?"– நிதானம கேட்டான்.

"எனக்கு தெரிந்து நடந்ததால், தவறு தவறில்லைன்னு ஆகிவிடுமா?"– முகத்தைத் திருப்பிக்கொண்டாள்.

"இங்கே பாருடி.... இந்த சத்தியமூர்த்தியை விலைக்கு வா இனிமேல்தான் யாரும் பிறந்து வரமுடியும். அதை ஞாபகத் வைச்சுக்க. இன்னைக்கு சொல்றேன் கேட்டுக்க. என்னைக் உன்கிட்ட இருந்து நான் வாங்கும் நகையையும், பணத்தை



ன் மூஞ்சியில விட்டு எறிகிறேனோ... அன்னைக்கு உன்னைத் தாடுறேன்டி. அதுவரைக்கும் என் விரல் நகம்கூட உன் மேல ாது..."

வசுந்தராவின் முகத்தில் ஒருவித அமைதி திரும்புவதைக் வனித்துக்கொண்டே கட்டிலைவிட்டு எழுந்தவன், அறைக் கதவைத் றந்தான். அந்தப் பக்கம் இருந்த மொட்டை மாடிக்குச் செல்ல த்தனித்தவன், திரும்பி அவளைப் பார்த்தான்.

"ஆனா... உன்னோட வாழாமல் விடமாட்டேன்டி. நீ சொன்ன ார்த்தை என் மனசுல முள்ளா குத்திக்கிட்டு இருக்கு. அந்த முள்ளை தலில் பிடுங்கி எறிஞ்சுட்டு, அதுக்குப் பின்னால் உன்னை ஆள ்றேன்டி. இதை செஞ்சு உன்னை என் பெண்டாட்டியாக்கி ாழ்ந்து காட்டலே... என் பெயர் சத்தியமூர்த்தி இல்லைடி.."

அவன் மொட்டைமாடிக்குச் சென்றுவிட்டான். வசுந்தரா சார்ந்து போய் சுவரோடு சரிந்து தரையில் அமர்ந்தாள். அவள் னம் துயரத்தோடு துடித்துக்கொண்டிருந்தது.

காதல் என்னும் மாய அரக்கனின் வலையில் அவள் மட்டும் ாட்டிக்கொள்ளாமல் இருந்திருந்தால், இப்படிப்பட்ட கொடிய ார்த்தைகளை இவ்வளவு நல்ல மனிதனிடம் சொல்ல வேண்டிய அவசியமே இருந்திருக்காதே!

அவள் உடலால் கெடவில்லை. மனது...? அது அவள் வசம் இல்லையே! சதீஷ் செய்த துரோகம், அவளது மனதை வாள் கொண்டு அறுக்கிறதே! அந்த நினைவுகளோடு போராடிக்கொண்டு இருப்பவளால் எப்படி சத்தியமூர்த்தியோடு முதலிரவு கொண்டாட முடியும்?

ஆனால், அவளுக்குத் தெரியாது. அவளிடம் தன்மையாகப் பேசி, இரக்கம் காட்டினால்– இந்த விலகல் நிரந்தரமாய் போய்விடும் என்று...! இதனால்தான் சத்தியமூர்த்தி அதிரடியாய் பேசினான்.

அவளுக்கு திருமணம் நடந்துவிட்டது. அதை அவள் உணர வேண்டும். சத்தியமூர்த்தியை கணவனாக ஏற்க வேண்டும். அதற்கு அவளுடைய காதல் தோல்வி தடையாக இருக்கக்கூடாது. அவளது மனதை கடந்த காலத்தில் இருந்து நிகழ்காலத்துக்கு திருப்ப வேண்டுமானால் அதிரடி நடவடிக்கையால் அவன் இறங்கியாக வேண்டும்.

ஒவ்வொரு நொடியும்– தான் அவளுடைய கணவன் என்பதை அவள் உணர வேண்டும் என்று சத்தியமூர்த்தி விரும்பினான்.

ஆண்மை என்பது பெண்மையை ஆள நினைப்பது! அவ
ஆள வேண்டுமானால், அவன் நிமிர்ந்து நிற்க வேண்டும். அத
தடையாக உள்ளதைத் தெரிந்துகொள்வதற்காகவே அவளிட
வம்புக்குச் சென்றான்.

அவள் மனதில் இருப்பதை பட்டென்று சொல்லிவிட்டா
சத்தியமூர்த்தியின் இயல்பான ரோஷம் வீறுகொண்டு எழுந்த
அவளது மனதை ஜெயித்துக்காட்ட வேண்டும் என்ற வைராக்கிய
அவனுள் பொங்கியது.

வசுந்தரா முழங்கால்களில் முகத்தைப் புதைத்துக்கொண்
அமர்ந்திருந்ததை மொட்டை மாடியில் நடைபழகிய வண்ண
பார்த்துக்கொண்டிருந்தான். பின்னர், மெதுவாக அறை வாசலு
வந்து– நிலைப்படியில் சாய்ந்து கைகட்டிக்கொண்டு– அவளை
பார்த்தான். மெதுவான குரலில் பாடினான்.

"நிலவைப் பார்த்து... வானம் சொன்னது...
என்னைத் தொடாதே...
நிழலைப் பார்த்து... பூமி சொன்னது...
என்னைத் தொடாதே...
நதியைப் பார்த்து... நாணல் சொன்னது...
என்னைத் தொடாதே..."

வசுந்தரா சட்டென்று நிமிர்ந்து பார்த்தாள். இறுகிய முகத்துட
இருந்த அவனுடைய உயரத்தையும், கம்பீரமான தோற்றத்தை
கண்டவள், பார்வையைத் தாழ்த்திக்கொண்டாள். கோபத்துட
அவன் பாடிய பாட்டு, அவளது மனதை லேசாக அசைத்தது.

"தாளத்தை ராகம்...
தொடாத போதிலே...
கீதத்தை நெஞ்சம்...
தொடாமல் போகுமே...
தந்தை தன்னையே...
தாய் தொடாவிடில்...
நானும் இல்லையே...
நீயும் இல்லையே..."

அவன் விழிகள் அவளைத் துளைப்பதைப் போல் பார்ப்பத
அவளால் உணர முடிந்தது. ஏனோ முகத்தை நிமிர்ந்து பார்க்க
தைரியம் வரவில்லை. அவனது பாடலில் தெரிந்த தாபம் அவளை



வன் தேடுவதை உணர்ந்தாள்– கிளர்ச்சியுற்றாள்.
இது புதிது. இந்த உணர்வு புதிது. இந்த உறவு புதிது. இந்தத் தாபம்
திது. இந்தத் தேடல் புதிது. இந்தக் குற்றச்சாட்டும் புதிது.
வசுந்தரா, அன்றைய நாளை அந்த நொடியில் புதிதாக
ணர்ந்தாள்.

## 7

**வீ**டு பரபரப்பாக இயங்கிக்கொண்டிருந்தது. புதுமணத்
்பதியை மறுவீட்டுக்கு அழைத்துச் செல்ல– விசாலம் அனுப்பிய
ார் வாசலில் வந்த நின்றது.

குளித்து முடித்து தலைமுடியை காய வைத்தபடி மொட்டை
ாடியில் நின்ற மனைவியைப் பார்த்துக்கொண்டே சட்டையின்
ட்டன்களைப் போட்டான் சத்தியமூர்த்தி.

பட்டு வேட்டி– சட்டை அவனுக்கு பாந்தமாக பொருந்தி
ருப்பது வசுந்தராவின் கருத்தில் பட்டது. வெறும் பனியனுடன்
ருந்த அவனுடைய தோற்றத்தைப் பார்க்க கூச்சப்பட்டுக்கொண்டு
ார்வையை அகற்ற முனைகையில்– அவள் முன்னாலேயே
ட்டையை மாட்டிக்கொண்டு புருவங்களை உயர்த்தினான்.

அவன் விடும் சவால், அவளுக்குப் புரியாமல் இல்லை.

'இவனுக்கு இவனுடைய கம்பீரத்தைப் பற்றித் தெரிந்திருக்க
வண்டும்' என்று நினைத்துக்கொண்டாள்.

'இல்லாவிட்டால் இவன் சவால் விடமாட்டான். நேற்று
ாத்திரி பாட்டுப்பாடி இழுக்கப் பார்த்தானே...! அதைப்போல்
சய்திருக்கமாட்டான். இவனுக்கு தன்னம்பிக்கை அதிகம் இருக்கிறது.
தனால் என்னை ஆண்டுவிடலாம் என்று நினைக்கிறான் போல...!
வன் ஆண்டால்தான் என்ன தப்பு?' என்ற எண்ணம் மனதில்
ட– அவசரமாய் அதை அழித்தாள்.

ஒரே நாளில் மனம் மாறினால், இளப்பமாய் நினைத்துவிட
ாட்டானா?

"தலைக்கு குளித்தாயா...?"– அக்கறையாய் வினவினான்.

"பார்த்தால் தெரியலையா...?"– அலட்சியமாய் பதில்
சான்னாள்.

"எப்படிடீ... இப்படி ஆளை ஏமாத்த கத்துக்கிட்ட?"– அவன்

கேட்ட கேள்வியில் அதிர்ந்து நிமிர்ந்தாள்.
'இவன் என்ன கேட்கிறான்?'– கண்களில் பயரேகை ஓடிய்து
அதைப் பார்த்தும் பார்க்காதவனைப் போல் அவளது முகத்தை
பார்த்தவாறே அருகில் வந்தான்.
"இது பட்டிக்காடு. நேத்து ராத்திரி நமக்கு முதலிரவு. இன்னி
காலையில நீ குளிச்சுட்டு தலையை விரிய போட்டுக்கிட்டு அம்ச
நிற்கிறே! இதைப் பார்த்த பின்னால யாருக்காவது எந்தச் சந்தேகமா
வருமா? கெட்டிக்காரிடி நீ. என் அம்மாவை ஏமாத்த இ
'டெக்னிக்'கை பயன்படுத்தி இருக்கயே... உன்னை என்னவோன்
நினைச்சேன்"– அவன் விழிகளில் கிண்டல் இருந்தது.
இதற்கு என்ன பதிலைச் சொல்வது என்று அவள் திணறிக்கொண்
இருக்கையில்...
"வசுந்தரா... அம்மாடி வசுந்தரா..." என்று மருமகளை வா
நிறைய அழைத்துக்கொண்டு பவளக்கொடி வந்தாள்.
மொட்டை மாடியில் ரகசியமாய் பேசிக்கொண்டிருந்த மகனை
மருமகளையும் பார்த்தவுடன்– அவளுக்கு சந்தோஷமாகிவிட்ட
அதிலும் வசுந்தரா தலைக்கு குளித்துவிட்டு நின்றதில், அவ
மகிழ்ந்தே போய்விட்டாள்.
"தலைக்கு குளிச்சிட்டியாம்மா...? அதைச் சொல்லத்தா
வந்தேன். நான் சொல்றதுக்கு முன்னாடியே நீ குளிச்சிட்டே."
பவளக்கொடி பிரியத்துடன் வசுந்தராவின் கூந்த
தொட்டாள்.
சத்தியமூர்த்தியின் கண்கள்... 'பார்த்தாயா...?' என்
வசுந்தராவிடம் கேலி பேசின. அவள் உதட்டைக் கடித்துக்கொண்
தலையைக் குனிந்துகொண்டாள்.
மகனுக்கும், மருமகளுக்கும் இடையில் நடந்த பார்வை
பரிமாற்றங்களைப் பார்த்துக்கொண்டிருந்த பவளக்கொடிக்
கால்கள் தரையில் பரவவில்லை. அந்தரத்தில் மிதப்பதைப் போ
உணர்ந்தாள்.
"உன் மருமக ரொம்ப விவரமானவம்மா"– சத்தியமூர்த்தி நமுட்டு
சிரிப்பு சிரித்தான்.
"நான்தான் கூறுகெட்டு இருந்துட்டேன். என் மருமகளாவ
கெட்டிக்காரியாய் இருந்து பொழைக்கட்டும்"– அவள் எதார்த்தமா
பேசினாள்.
"அதெல்லாம் கெட்டிக்காரத்தனமாய் பொழைப்பா. அதுக்



அவளுக்கு சொல்லியா கொடுக்கணும்? ஆனா, இருந்து பொழைப்பாளான்னுதான் தெரியலை"– அவன் விழிகள் வசுந்தராவின் மேனியழகை மேய்ந்தன.

'எப்படிப் பார்க்கிறான் பார்...!'– பல்லைக் கடித்துக்கொண்டாள்.

முதலிரவு விலகலை அவன் குத்திக்காட்டுவது அவளுக்குப் புரிந்திருந்தது.

'அதென்ன இருந்து பிழைப்பது...?'– அவள் விழிகள் கேட்ட கேள்விக்கு சன்னமாக கண்ணைச் சிமிட்டினான்.

'ராஸ்கல்...'– அவள் முகம் சிவந்துவிட்டது. அதை ரசனையாகப் பார்த்தபடி மெல்லச் சிரித்துக்கொண்டான்.

"ஏன்ய்யா... என் மருமக இருந்து பிழைக்காதுன்னு என்ன அர்த்தத்தில் சொல்றே...? அதெல்லாம் தங்கமா இருந்து பிழைக்கும். அது என்ன படிக்காத பொண்ணா? படிச்ச பொண்ணு. நல்லது கெட்டது நாலும் தெரிஞ்சவ"– பவளக்கொடி அடுக்கினாள்.

"எங்கே...? நீதான் உன் மருமகளை மெச்சிக்கணும். இவதான் எதையும் தெரிஞ்சுக்க மாட்டேன்னு அடம் பிடிக்கிறாளே...?" மீண்டும் தாயாருக்குத் தெரியாமல் மனைவியைப் பார்த்து கண் சிமிட்டினான்.

வசுந்தராவின் முகம் இப்போது குங்குமமாகவே மாறிவிட்டது. இப்படியெல்லாம் ஜாடையில் பேச முடியும் என்பதை அன்றுதான் அவள் அறிந்தாள். கணவனின் பார்வையும், பேச்சும் உணர்த்திய செய்திகளை உடனுக்குடன் கண்டுபிடித்துவிட்டாள். அதைத் தாள முடியாமல் அவள் பெண்மை தவித்தது.

சதீஷின் அணுகுமுறை வேறு விதமானது. அவனிடம் நாசுக்கும், நாகரிகமும் இருக்கும். இவனைப் போல தடாலடியான பேச்சு இருக்காது. முதலில் தோழமையாகப் பழகி, அதன் பின்னால் காதலைச் சொல்லிக்கொண்டான். இந்தக் கண் சிமிட்டலை அவனிடம் காண முடியாது.

ஆனால், உரிமை இல்லாதபோதும், அவன் தொட்டுவிடத் துடித்தான். உரிமை இருந்தபோதும் சத்தியமூர்த்தி விலகி நின்றான். சதிஷின் கண்கள் காமத்தை மட்டுமே அந்தக் கணங்களில் பிரதிபலித்தன. இவனின் கண்களில் காதல்... கேலி... சொந்தம்... பரிவு... உரிமை– இவை அனைத்துடன் சேர்ந்து துளியளவு காமமும் பிரதிபலித்தது.

சதிஷின் விரல் நுனியைக்கூட தன் மேல் பட வசுந்தரா அனுமதித்தது இல்லை. அதில் அவனுக்கு மலையளவு கோபமும், ஏமாற்றமும் உண்டு.

"என்ன வசுந்தரா... இப்படி பட்டிக்காடாய் இருக்கிறே...?" என்பான்.

'திருமணத்துக்கு முன்னால் தொடக்கூடாது என்று சொன்னால் பட்டிக்காடா?'– வசுந்தராவுக்குப் புரியாது. ஆனால், சதிஷ் அதைப் பற்றி தெளிவாகப் பேசுவான்.

"ஒரு நாள் போனால், நம் ஆயுளின் ஒரு நாள் குறைகிறது வசுந்தரா."

"அதனால என்ன...?"

"அதற்குள் வாழ்க்கையை அனுபவித்துவிட வேண்டாமா?"

சதிஷின் கண்களில் அவளை அனுபவிக்க வேண்டும் என்ற வெறி மின்னும். அந்த வெறி கொண்ட பார்வை மட்டும் பிடிக்கவே பிடிக்காது, வசுந்தராவுக்கு.

"ச்சு. ஏன் இப்படி பாக்கிறீங்க சதிஷ்? வாழ்க்கையை வாழ்க்கையாய் வாழ்ந்து பார்க்க வேண்டும். அவசரப்பட்டு அனுபவிக்க ஆசைப்படக் கூடாது. அது வேறு எதிலாவது கொண்டுபோய் விட்டுவிடும்."

"வாழ்ந்து பார்ப்பதா... எப்படி?"

"எப்படியா? ம்... நான் சொல்றேன் கேளுங்க. இப்போது நாம் காதலர்களாக வாழ்ந்து பார்க்கிறோம்."

"சரி."

"உங்கள் வீட்டுக்கு நம் விஷயத்தைச் சொல்லி, முறைப்படி பெண் கேட்டு என் வீட்டுக்கு வாங்க."

'வேறு வினையே வேண்டாம்.'

"நமக்கு கல்யாணம் நடக்கும்."

'அதை எப்படி அவ்வளவு நிச்சயமாய் சொல்கிறாய்?'

"நாம் கணவன் – மனைவியாக வாழ்ந்து பார்க்கலாம்."

'அதை இப்போதே வாழ்ந்து பார்க்கலாம். வாடின்னா வரமாட்டேன்னு அடம் பிடிக்கிறாளே?'

"அப்புறம் நமக்கு குழந்தைகள் பிறக்கும். நாம அம்மா– அப்பாவாக வாழ்ந்து பார்க்கலாம்."

இதைச் சொல்லும்போது அவள் முகம் சிவந்துவிட்டது. வெட்கத்துடன் தலை குனிந்துகொண்டவளை அன்று சதிஷ் பார்த்த விசித்திரமான பார்வைக்கும், இப்போது சத்தியமூர்த்தி பார்க்கும் துள்ளல் மிகுந்த பார்வைக்கும் இடையில் உள்ள வித்தியாசத்தை எண்ணிப் பார்த்தாள்!

கடைசி வரை சதிஷை தள்ளியே நிற்க வைத்தாள். ஆனால், சத்தியமூர்த்தியிடம் அதுபோல் செய்ய அவளால் முடியுமா?

## 8

**ச**த்தியமூர்த்தியையும், வசுந்தராவையும் அருகருகே அமர வைத்து பரிமாறினாள் சாவித்திரி.

"இன்னும் கொஞ்சம் போட்டுக்கோங்க அண்ணி..."– இலையில் நெய் சொட்டும் ரவா கேசரியை அள்ளி வைத்தாள்.

'இந்த அண்ணியால்தானே கலெக்டர் ஆபீசில் வேலை பார்க்கும் மாப்பிள்ளை எனக்கு கிடைக்கப் போறாரு. இல்லாட்டி கனவில் கூட அப்படியொரு வாழ்க்கையை நான் நினைச்சுப் பார்க்க முடியுமா...' அவள் மனம் நன்றியில் மிதந்தது.

சாப்பிடும்போது வசுந்தராவுக்கு புரையேறியது. அதற்குக் காரணம் சத்தியமூர்த்தியின் சேட்டைதான். வசுந்தராவின் இலையில் இருந்த வடையையும், ரவா கேசரியையும் அவன் சுவாதீனமாய் தன் எச்சில் கையால் எடுத்துச் சாப்பிட– அதைப் பார்த்துக்கொண்டிருந்த பவளக்கொடி மனம் பூரித்தாள். வசுந்தராவோ முறைத்தாள்.

"எச்சில் கையோட என் இலையில் கை வைக்காதீங்க. எனக்குப் பிடிக்காது"– கோபத்துடன் சன்னமான குரலில் முணுமுணுத்தாள்.

"உன் இலையில் இருக்கிறது மட்டும் உன் எச்சில் பலகாரம் இல்லையாடி?"– பதிலுக்கு அவன் முணுமுணுத்தான்.

"என் எச்சிலை நான் சாப்பிடச் சொன்னேனா?"

"நீ சொல்லித்தான் நான் எல்லாத்தையும் செய்யணுமா?"

"பெரிசாய் சபதம் போட்டீங்க. என் மேல் விரல்கூடப் படாதுன்னு. இதுதான் நீங்க சபதத்தை காப்பாத்தும் லட்சணமா?"

"இப்ப மட்டும் என்ன... உன் மேல என் விரல் பட்டுச்சா? உன் இலையிலதான்டி பட்டுச்சு?"

இப்படிக் கேட்பவனுக்கு என்ன பதிலைச் சொல்வது? அவனது எச்சில் கைபட்ட கேசரியைச் சாப்பிடாமல் அவளால் எப்படி இருக்க முடியும்? சாவித்திரி வேறு..., 'உங்களுக்காக நானே செய்த கேசரி

அண்ணி... எப்படி இருக்கு?' என்று கேட்டுத் தொலைத்தாள்.

வேறு வழியின்றி கணவனின் எச்சில்கை பட்ட கேசரியை எடுத்து சாப்பிட்டாள் . உண்மையிலேயே வெகு சுவையாக இருந்தது தன்னை அறியாமல் இலையைக் காலி செய்தவள்.

"ரொம்ப சுவையா இருக்கு சாவித்திரி..." என்று நாத்தனாரை பாராட்டினாள்.

சாவித்திரியின் முகம் மலர்ந்துவிட்டது.

"இன்னும் கொஞ்சம் போடவா அண்ணி...?" என்று அவள் சொல்லிக்கொண்டு இருக்கும்போதே...

"அதுக்கு ஏன் வீணாய் அலையறே சாவித்திரி...? என் இலையில் இவ்வளவு கேசரியை அள்ளி வைச்சிருக்கியே! அதைச் சாப்பிட முடியாம நானே திணறிக்கிட்டு இருக்கேன். இதில் கொஞ்சத்தை அவ இலையில் வைச்சா சாப்பிட்டுட்டுப் போறா. நீ உட்காரு' என்று தங்கையின் மேல் பாச மழையைப் பொழிந்துகொண்டே தன் இலையில் இருந்த கேசரியை, எச்சில் கையால் அள்ளி மனைவியின் இலையில் வைத்தான்.

"இதுவும் சரிதான்"– சாவித்திரி சிரித்துக்கொண்டே அவர்கள் முன்னால் உட்கார்ந்துவிட்டாள்.

"சாவித்திரி... நீ செஞ்ச கேசரியால் வெறும் நெய்யைத்தானே கொட்டி இருக்க. நான் கொடுத்த கேசரியில் என் கையே பட்டிருக்கு. இதுக்கு ருசி அதிகம்"– சத்தியமூர்த்தி பெருமையாக தங்கையிடம் கூறினான்.

"ஹை... இதை நீ சொன்னால் எப்படிண்ணா? அண்ணி வாயால அவங்க சொல்லட்டும். அப்புறமாய் நான் நம்புறேன்"– சாவித்திரி தமையனுடன் இணைந்து கொண்டாள்.

வசுந்தரா திணறிப் போனாள். சிரித்த முகமாய் தன் பக்கம் பார்க்கும் நாத்தனாரை ஏமாற்ற மனமில்லாமல், சத்தியமூர்த்தி வைத்த எச்சில் கேசரியை சுவைத்தாள்.

"இப்ப எப்படி இருக்கு?" தங்கையின் முன்னாலேயே வசுந்தராவைப் பார்த்து கண்சிமிட்ட– அவளோ இங்கிதம் தெரிந்தவளாய்...

"எப்படி இருக்கும்... உன் எச்சில் கேசரிக்கு சுவை அதிகமா இருக்கும். இதை அண்ணி வாயில் சொல்லி நீயாய் கேட்கணுமாக்கும். கேளு... கேளு" என்று கூறியபடி எழுந்து சமையல் அறைக்குள் சென்றுவிட்டாள்.

அதற்காகவே காத்திருந்ததைப் போல சத்தியமூர்த்தியை



முறைத்துப் பார்த்த வசுந்தரா...

"கொழுப்பா...?" என்று அடிக் குரலில் சீறினாள்.

"கொழுப்புத்தான்டி.. நீ என்னை உட்கார வைத்து ஆக்கிப் போட்டு ஊட்டிவிட்டு வளர்த்திருக்கே பாரு, அந்தக் கொழுப்பு" – என்று சுவாதீனமாய் சொன்னான்.

"இனிமேல் இப்படிப் பண்ணாதீங்க."

"எப்படி?"

புரியாதவனைப் போல வினவினான். மனைவிக்குக் கோபம் வந்தது.

"உங்க எச்சிலைச் சாப்பிடும்படி வைக்காதீங்க."

"அது எப்படீ முடியும்?"

"ஏன் முடியாது?"

"என் விரல் உன் மேல படாது. நான் சபதத்தில் ஜெயிச்ச பின்னாடி உன்னோடு குடும்பம் நடத்தத்தான் போறேன். அப்ப என் எச்சில் படாம உன்னால இருக்க முடியுமா?"

வடையைச் சாப்பிட்டுக் கொண்டிருந்த வசுந்தராவுக்கு இதைக் கேட்டதும், புரையேறிவிட்டது. அவள் வாயில் வடையுடன் திணற– சாவித்திரி அவசரமாய்– கையில் தண்ணீர் செம்புடன் ஓடி வந்தாள்.

"என்னண்ணீ! புரையேறுதா...? இந்தத் தண்ணிய குடிங்க" என்றவாறு செம்பை அண்ணியின் கையில் கொடுத்து– அவள் தலையிலும் லேசாகத் தட்டினாள்.

"இதுதான் சாக்குன்னு உன் அண்ணியை அடிக்கிறியா?" சத்தியமூர்த்தி சிரித்தான்.

"சிரிக்காதே. அண்ணிக்கு புரையேறுது. பார்த்துக்கிட்டு உட்கார்ந்திருக்கியே...?" கடிந்துகொண்டாள்.

"உன் அண்ணி பார்க்க வைக்கிற மாதிரி பசக்குன்னு இருக்காளே... அப்புறம் பார்த்து தொலைக்காமல் என்னத்தை செய்யறது?"– மனைவியைப் பார்வையிட்டுக்கொண்டே சொன்னான்.

சாவித்திரி அதைக் கேட்டு சிரித்துவிட– வசுந்தரா முகம் சிவந்தாள்.

"அண்ணிக்கு அண்ணன் மேல கொள்ளை ஆசைம்மா."

சாவித்திரி அடுக்களைக்குள் இருந்த பவளக்கொடியிடம் கூற– முகம் மலர்ந்தாள் அவள்.

"இப்பத்தான் என் மனசுக்கு அமைதியா இருக்கு சாவித்திரி. படிச்ச

பொண்ணு. கை நிறைய சம்பாதிக்கறா. ஊருபட்ட சீர்வரிசையோட
வந்திருக்கா. ஆளும் பார்க்க ரதி மாதிரி இருக்கா. என் பிள்ளைகிட்ட
எப்படிக் குடும்பம் நடத்துவாளோன்னு பயந்து போய் கிடந்தேன்.
என் பயம் பொய்யாய் போயிருச்சு. நேத்து ராத்திரி அவங்க ரெண்டு
பேரும் சந்தோஷமா இருந்துருக்காங்க."

"இது உனக்கு எப்படிம்மா தெரியும்?"

"போடி.... கூறுகெட்டவளே! முகத்தைப் பார்த்தாலே அது தெரியாதா? முத ராத்திரி முடிஞ்சவுடன், ஒரு பொம்பளை தலைக்கு குளிச்சுட்டு நின்னா அதுக்கு என்ன அர்த்தம்."

மகளை கூறுகெட்டவள் ஆக்கிவிட்டு தான் பெரிய அறிவாளி போல பேசிக்கொண்டிருந்த பவளக்கொடியின் வார்த்தைகள்–கை கழுவ வந்த சத்தியமூர்த்தி, வசுந்தராவின் காதுகளிலும் தெளிவாக விழுந்தன.

"எங்க அம்மா சொல்றதைக் கேட்டியா?"– மனைவியைப் பார்த்து கண்சிமிட்டிச் சிரித்தான்.

அவளுக்கோ வெட்கமாகிவிட்டது. தலை குனிந்துகொண்டாள்.

"முத ராத்திரி முடிஞ்சவுடன் ஒரு பொண்ணு தலைக்கு குளிச்சுட்டா அதுக்கு என்ன அர்த்தம்னு கல்யாணம் ஆகாத சாவித்திரியைப் போயி என்னோட அறிவாளி அம்மா கேட்குதே! சாவித்திரிக்கு இதைப் பத்தி என்ன தெரியும்? முத ராத்திரியை முடிச்ச உனக்கில்ல அதோட அர்த்தம் தெரியும்? சொல்லு வசுந்தரா... அதுக்கு என்ன அர்த்தம்?"– சத்தியமூர்த்தி விடாமல் கிண்டிக் கிளறினான்.

"ப்ளீஸ்..." வசுந்தராவால் அதற்கு மேல் கேள்வியை எதிர்கொள்ள முடியவில்லை.

இரண்டு நாட்களாய் விடாமல் திருமணப் பெண் வேஷம் போட்டதில் அவள் அயர்ந்திருந்தாள். களைப்பு போக, தலையோடு வெந்நீரை ஊற்றிக் குளித்ததுக்குப் பின்னால் இவ்வளவு இருக்கும் என்று அவள் என்ன கனவா கண்டாள்?

"எனக்கென்ன தெரியும். நான் எதார்த்தமாய் தலைக்கு குளித்தேன். அதில் போய் இவ்வளவு அர்த்தத்தைக் கண்டுபிடித்தால் நானென்ன செய்வதாம்?"

அவள் அழுமாட்டாத குறையாய் கூற, அதைக் கேட்டு வாய்விட்டுச் சிரித்தான் அவன்.

கறுப்பு என்றும் சொல்ல முடியாமல், மாநிறம் என்றும் சொல்ல முடியாமல் இரண்டுக்கும் இடையேயான நிறத்தில் இருந்த சத்தியமூர்த்தியின் முகத்தில் தோன்றிய அந்தப் பளீர் சிரிப்பு, வசுந்தராவை வசீகரித்தது.

அவள் அதிக வியப்புடன் கணவனைப் பார்த்தாள்.



## 9

கணவனின் கம்பீரமான அழகை அப்போதுதான் உணர்ந்தாள். சதீஷிடம் கவர்ச்சி இருக்கும். ஆனால், சத்தியமூர்த்தியிடம் இருந்த கம்பீரத்தில் துளியளவுகூட அவனிடம் இருந்ததில்லை. நுனி நாக்கில் ஆங்கிலமும், மேல் தட்டு இளைஞன் எனப் பறைசாற்றும் தோற்றமுமாய் இருப்பவன். அதேநேரம் ஆண்மைக்குரிய கம்பீரமாய் இருந்ததாய் வசுந்தராவின் மனதிற்குப்பட்டதே இல்லை.

அந்தக் கம்பீரமான ஆண்மையின் அழகை தன் கணவனிடம்தான் முதன் முதலாக கண்டாள்.

"வாடி..."– அவளைப் பார்த்துக்கொண்டே சத்தமாக அழைத்தான்.

'வார்த்தைக்கு வார்த்தை 'டீ' போடுகிறானே...?' என்று மனத்துக்குள் பொறுமிக்கொண்டாலும், அதை வெளியே காட்டிக்கொள்ள முடியாமல் பல்லைக் கடித்தாள்.

மருதநாயகமும், பவளக்கொடியும் சேர்ந்து நிற்க– அவர்களிடம் வாழ்த்து வாங்கிக்கொண்டு மறுவீடு செல்வதற்காக கணவன் அழைக்கும்போது– எப்படி அவனிடம் சண்டை போடுவது?

மவுனமாய் முறைத்துக்கொண்டே அவன் பக்கத்தில் போய் நின்றாள்.

"எங்களை ஆசீர்வாதம் பண்ணுங்க"– சத்தியமூர்த்தி குனிய–

ராணி முத்து சந்தா விவரம்
இரண்டு ஆண்டு ரூ. 275
ஒரு ஆண்டு ரூ. 150
ஆறு மாதம் ரூ. 80
வெளிநாடுகள்
ஒரு ஆண்டு ரூ. 1,225
ஆறு மாதம் ரூ. 615
பணம் அனுப்பவேண்டிய முகவரி:
மேலாளர்,
'ராணி முத்து',
சென்னை–600 007.



தா–2

அவனுடன் சேர்ந்து வணங்கி எழுந்தாள்.

மகனின் ஆளுமையைக் கண்டு பெருமையுடன் மீசை முறுக்கிக்கொண்டு மனைவியை, 'எப்பு...டீ...' என்று ஒரு பார்வை பார்த்தார் மருதநாயகம்.

'சூப்பராத்தான் மருமகளை கொண்டு வந்திருக்கீங்க...' என்று பதிலுக்கு மெச்சுதலாய் ஒரு பார்வையை கணவன் மேல் வீசிவிட்டு மருமகளின் நெற்றியில் குங்குமத்தை வைத்துவிட்டாள்.

"தீர்க்க சுமங்கலியா இரும்மா. பத்திரமா போயிட்டு வாங்க. வந்ததும் உங்க ரெண்டு பேருக்க்கும் திருஷ்டி சுத்திப் போடணும்."

"அது எதுக்கும்மா?"

"ஊரு கண்ணெல்லாம் உங்க ரெண்டு பேரு மேலேயும் இருக்குடா மகனே."

"அது சரி... எங்க மேல கண்ணை வச்சுட்டு, அவங்க எப்படிப் பார்க்கிறாங்க?"

"இந்தக் கிண்டல்தானே வேணாம்கிறது... மருமகளைப் பத்திரமா பார்த்துக்கப்பா..."

"அதை நீ சொல்லித்தான் செய்யணுமா? பார்த்துக்கிட்டுத்தான இருக்கேன்."

சத்தியமூர்த்தி– வசுந்தராவை உல்லாசமாய்ப் பார்க்க, அவன் தனக்கு பிடித்தமில்லாத கணவன் என்பது ஒரு கணம் அவளுக்கு மறந்துபோனது.

'ஏன் இப்படி என்னைக் காதலித்து கல்யாணம் பண்ணிக் கொண்டதைப் போல பார்த்து வைக்கிறான்?'

காதல் கணவன்மார்களை எல்லாம் தோற்கடிக்கும் விதத்தில் அவன் தன் பார்வையாலேயே மனைவியிடம் கதை பேசிக்கொண்டிருக்க–

"போடா போக்கிரி..." என்று மகன் முதுகில் ஒன்று வைத்தாள் தாய்.

அந்தத் தெருவே கூடி நின்று வழியனுப்ப, காரில் ஏறி மறுவீட்டுக்கு புறப்பட்டனர் இளசுகள் இருவரும்.

மறுவீட்டு விருந்தை குறைவில்லாமல் செய்தாள், விசாலம். உதவிக்காக அவளுடைய தம்பியும், தம்பி மனைவியும்கூட வந்திருந்தார்கள்.

"என்ன மருமகளே... உன் புருஷன் எலும்பைக் கடிக்க இம்புட்டு யோசனை யோசிக்கறாரு? உங்க மாமன் என்னைக் கல்யாணம் [பண்]ணிக்கிட்டு மறுவீட்டு விருந்துக்கு வந்தப்ப, ஒரு ஆட்டு எலும்பை [மொ]த்தை ஆளா முழுங்கினாராக்கும்"– வசுந்தராவின் தாய்மாமன் [ம]னைவி கோசலை கலகலப்பாகப் பேசினாள்.



தாய்மாமன் ராஜாங்கமும் அதில் கலந்துகொண்டார். அவர்கள் இருவரின் கலகலப்பான பேச்சு, சத்தியமூர்த்திக்கு பிடித்துப் போய்விட்டது. அவனும் அவர்களுடன் இணையாக 'பகடி' பேசினான்.

'எப்படி இவனால் இவ்வளவு இயல்பாக இருக்க முடியுது?' வசுந்தராவுக்கு ஆச்சரியமாக இருந்தது.

"ஏன் சத்யா... வீட்டுக்குள்ளேயே அடைஞ்சு கிடந்தால், மூச்சு முட்டுற மாதிரி இல்லையா?"

ராஜாங்கம் வினவியபோது, அவரின் முதுகுக்குப் பின்னால், ஏதோ வேலை இருப்பதைப் போல விசாலம் நின்றுகொண்டிருந்தாள்.

கணப்பொழுதில் அது மாமியாரின் ஏற்பாடு என்பதை தெரிந்துகொண்டான் புதுமாப்பிள்ளை.

மகள், பழைய காதலனை மறந்துவிட்டு கணவனுடன் சந்தோஷமாக வாழ வேண்டும் என்று அந்தத் தாயின் மனது தவிப்பதை அவனால் புரிந்துகொள்ள முடிந்தது.

கையில் இருந்த பேப்பரை டீப்பாயின் மேல் வைத்துவிட்டு நிமிர்ந்து உட்கார்ந்தான்.

"மூச்சு முட்டுதா... மூச்சே திணறுது சித்தப்பா..."

"அப்புறம் எதுக்கு வீட்டுக்குள்ள அடைஞ்சுக் கிடக்கிறீங்க? இங்க சுத்திப் பார்க்க இடமா இல்லை? கோவில்ன்னு பார்த்தா உச்சிப் பிள்ளையார் கோவில் இருக்கு. ரங்கநாதன், நம்ம ஸ்ரீரங்கத்தில் இருக்கிறார். திருவானைக்காவல் கோவில் இருக்கு. காவிரிக் கரையோரமா குணசீலப் பெருமாள் இருக்கார். சுற்றுலான்னு பார்த்தா... கல்லணை இருக்கு. அதுக்கும் மேல சினிமாத் தியேட்டர். பெண்டாட்டியைக் கூட்டிக்கிட்டு ஊரைச் சுற்றிவர வேண்டியதுதானே?"

"சொல்லிட்டீங்க இல்ல... இனிக் கிளம்பிட வேண்டியதுதான். வசு... வசு..."

கூடத்தில் நடந்த பேச்சுவார்த்தை– வசுந்தராவின் காதில் விழத்தான் செய்தது. விசாலத்தின் எண்ணமும் அவளுக்கு புரிந்துதான் இருந்தது. அதற்காக பிடிக்காத ஒருவனுடன் ஊரைச் சுற்றுவது என்றால் அவளுக்கு எரிச்சல்தான் வந்தது.

"அதென்ன வசு... வசுன்னு கூப்பிடுறீங்க?"

அறைக்குள் வந்த கணவனிடம் தாழ்ந்த குரலில் கிசுகிசுத்தா

அவன் அறைக்கதவைச் சாத்திவிட்டு, அவளைத் திரும்பி தீர்க்கம பார்த்தான். துளைக்கும் அந்தப் பார்வையை எதிர்கொள்ள அவளா முடியவில்லை.

"வசுன்னு கூப்பிட்டா என்னடி?"

"என் பெயர் வசுந்தரா."

"அதுக்காக அப்படியே கூப்பிடணும்னு ஒண்ணு அவசியமில்லை."

"எனக்குப் பிடிக்கலை."

"எனக்குப் பிடிச்சிருக்கு."

"உங்களுக்கு பிடிச்சிருந்தா என்ன வேணும்னாலு செய்வீங்களா?"

"செய்வேன்."

இப்படி சண்டித்தனமாய் பேசுகிறவனுடன் எப்படிச் சண்டை போடுவது என்று தெரியாமல் அவள் மவுனித்தாள்.

"கிளம்பு."

"எங்கே...?"

"அதான காதுல விழுந்து இருக்குமே?"

"ம்... அங்கெல்லாம் நான் வரலை."

"நீ வர்றே."

"எதுக்கு என்னை தொந்தரவு செய்றீங்க?"

"நீ உங்க அம்மாவை ஏன் இந்தப் பாடு படுத்தற?"

அவனின் கேள்வி அவள் இதயத்தில் முள்ளாய் தைத்தத விக்கித்துப் போனவளாக அவனை நிமிர்ந்து பார்த்தாள்.

"என்ன பார்க்கிற...! நீ கைப்பிள்ளையாய் இருக்கிறப்பவே உன் அப்பா போய் சேர்ந்துட்டாரு. இவங்க தனி மரமா நின்னு உன்னை வளர்த்து ஆளாக்கி இருக்காங்க. உன்கிட்ட பதிலுக்கு என்ன கேட்கிறாங்க. நிம்மதி. அதைக்கூட உன் அம்மாவுக்கு தரமாட்டாயா?"

அவனின் கூரிய வார்த்தைகள் அவளுக்குள் குற்ற உணர்வை ஏற்படுத்தின.

'இவன் யார்? என்னைப் பெற்ற தாய் மீது நான் காட்டாத பாசத்தையும், கருணையையும் எதற்காக காட்டுகிறான்!'



# 10

திருச்சியில் இருக்கும் வரை தினந்தோறும் புதுமனைவியை வெளியே அழைத்துச் சென்றான்.

ராஜாங்கம் அவருடைய இருசக்கர வாகனத்தின் சாவியை த்தியமூர்த்தியிடம் கொடுத்துவிட்டார். பின் இருக்கையில் ஒண்ணு மர்ந்து செல்ல வசுந்தராதான் மிகவும் சிரமப்பட்டாள். அவன் வேண்டுமென்றே வேகத்தை அதிகப்படுத்த– அவள் வறுவழி இல்லாமல் அவனது இடுப்பில கைகொடுத்து இறுகப் பிடித்துக்கொள்வாள்.

"ஏண்டி உரசுற?"

"திமிறா... வேணும்னே காற்றைவிட வேகமா பைக்கில் றந்துக்கிட்டு, கேள்வியைப் பாரு. இதுதான் சபதம் போட்டிருக்கிற ட்சணமா?"– பழைய பல்லவியைப் பாடினாள்.

"இதப்பாரு... சபதம் நான்தான் போட்டிருக்கேன். நீ போடலை. உன் மேல் என் விரல்கூடப் படாதுன்னுதான் சொன்னேன். என் மேல் உன் விரல் படாதுன்னு நீ சொன்னியா? இல்லை... படக்கூடாதுன்னு நான்தான் சொன்னேனா?"

"இது என்ன புதுக்கதை?"

"எனக்கு கதையெல்லாம் தெரியாதும்மா. எதுவா இருந்தாலும் வெட்டு ஒண்ணு, துண்டு ரெண்டுதான். உனக்கு என்னைக் கட்டிப் பிடிச்சிக்கணும்னு ஆசை. கட்டிப் பிடிக்கற. அதுக்கு என்னை எதுக்கு குத்தம் சொல்ற?"

பேசாமல் வண்டியில இருந்து குதித்துவிடலாமா என்றுகூட யோசித்துவிட்டாள். ஆனால், அதற்கும் வழியில்லாமல் புயல் வேகத்தில் வண்டியை ஓட்ட– அவன் என்ன பேசினாலும் இந்தக் காதில் வாங்கி அந்தக் காதில் விட்டுவிட வேண்டும் என்ற முடிவுடன் அவனது முதுகோடு ஒட்டிக்கொண்டாள்.

"போன பிறவியில் நீ பல்லியாய் பிறந்திருந்தாயாடி?"

"வேண்டாம். என் வம்புக்கு வராதீங்க."

"வந்தால் என்னடி செய்வே?"

"வண்டியில இருந்து குதித்துவிடுவேன்."

"ஹா...ஹா..."

மறுவீட்டு விருந்து முடிந்து கிளம்பியபோது, விசாலம்

தயக்கத்துடன் அவர்களின் அறைக்கு வந்தாள்.

அவள் முக்கியமான எதையோ பேச விரும்புவதை அறிந்துகொ(ண்)
சத்தியமூர்த்தி...

"சொல்லுங்க அத்தை..." என்றான்.

வசுந்தரா, தாயை நிமிர்ந்துகூடப் பார்க்காமல் துணிகளை
பெட்டியில் அடுக்கிக்கொண்டிருந்தாள்.

"மாப்பிள்ளை..."

"ம்..."

"வசுந்தரா சேலத்தில் வேலை பார்க்கிறா!"

"தெரியும்."

"இத்தனை நாளும் 'ஆஸ்டலில்'தான் இருந்தாள்."

"அதுவும் தெரியும்."

"இனிமேலும் அவளை அப்படி 'ஆஸ்டலில்' விடுவது நல்லத(ல்ல)
நீங்க ஒரு ஊரில்... அவ ஒரு ஊரில்னு பிரிஞ்சு இருந்தா... பார்க்கிறவ(ங்க)
என்ன சொல்வாங்க?"

விசாலம் வார்த்தைகளை மென்று– தயங்கித் தயங்கிப் பேச
வசுந்தரா வெகுண்டாள்.

"அதுக்காக என்னம்மா செய்யச் சொல்றீங்க? கல்யாணம் செய்(து)
வைக்கிறதுக்கு முன்னாடி இதையெல்லாம் யோசிச்சிருக்கணு(ம்)
படித்துப் படித்துச் சொன்னேன்... எனக்கு இப்ப கல்யாண(ம்)
வேணாம்னு. நீ கேட்கலை. இப்ப அனுபவிங்க."

தாயின் கண்கள் குளமாகிவிட, மனைவியை அதட்டினா(ன்)
சத்தியமூர்த்தி.

"இப்ப அத்தையை எதுக்கு குத்தம் சொல்றே வசு?"

"அடேங்கப்பா. இவர் பிறந்ததில் இருந்து அத்தையைத் தெரிந்தவ(ர்)
அவங்களை ஒரு வார்த்தை சொன்னாலும், இவருக்கு கோப(ம்)
பொத்துக்கிட்டு வருது. அதுதான் கேட்கிறாங்கல்ல... பதிலை
சொல்லுங்க."

மனைவியை முறைத்துப் பார்த்துவிட்டு, மாமியார் பக்க(ம்)
திரும்பினான்.

"நீங்க கவலையே படவேண்டாம் அத்தை. நான் வசுவை(த்)
தனியாக விடமாட்டேன்."

இப்போது அவர்கள் இருவரும் ஆச்சரியத்துடன் அவனை(ப்)
பார்த்தார்கள்.

"ஹலோ சார்... தனியாக விடாமல் என்ன செய்வதாக உத்தேசம்?" (கி)ண்டலாக வினவினாள்.

அதைக் கண்டுகொள்ளாமல் நிதானமாய் பதில் சொன்னான்.

"சேலத்தில் தனி வீடு பார்க்கப் போறேன்"

விசாலத்தின் கண்கள் ஒளிர– வசுந்தரா புரியாமல் விழித்தாள்.

"தனி வீடா? அங்கே வந்து என்ன செய்யப்போறீங்க? நான்
வேலைக்குப் போக, நீங்க வீட்டைப் பார்த்துக்குவீங்களா?"

"வசுந்தரா..."

"சும்மா இருங்கம்மா. ஏன் இப்படி என்னை அதட்டுறீங்க? நான்
உள்ளதைத்தானே கேட்டேன்? சேலத்தில் எனக்கு வேலை இருக்கு.
இவருக்கு என்ன இருக்கு?"

அவளின் எகத்தாளமான கேள்விக்கு...

"நீ இருக்கிறாய்..." என்று அழுத்தம் திருத்தமாக பதில்
சொன்னான்.

"நான் இருந்தால்...? சீதைக்கு ராமன் இருக்குமிடம்தான்
அயோத்தின்னு கேள்விப்பட்டு இருக்கிறேன். இங்கே எல்லாமே
உல்டாதானா?"

"ஆமாம்னே வச்சுக்கயேன். எனக்கு என் சீதை இருக்கிற
இடம்தான் அயோத்தி. இப்ப என்னாங்கிற?"

அலட்டிக்கொள்ளாமல் பதிலைச் சொன்ன மருமகனைக் கண்டு
விசாலம் பூரிப்பாகிவிட்டாள்.

'கடவுள் கண் திறந்திட்டார். என் மகளின் வாழ்க்கை இப்படியே
இனிக்கட்டும்.'

"உங்களுக்கு கிராமத்தில் தொழில் இருந்ததே மாப்பிள்ளை...?"

"தொழிலா... டீக்கடைன்னு சொல்லுங்கம்மா."

மீண்டும் கிண்டலாக வசுந்தரா பேச, அமைதியாக அவளைப்
பார்த்தான்.

"ஏன்.... அதுவும் ஒரு தொழில்தானே?"

விசாலம் இப்போது மகளை மிகவும் கோபமாக முறைத்தாள்.
தாய் வாயைத் திறந்தால், ஏடாகூடமாக திட்டிவிடுவாள் என்பதை
உணர்ந்திருந்த அவள், தன் வாயை மூடிக்கொண்டாள்.

"நீங்க சொல்லுங்க மாப்பிள்ளை."

"நான் சேலத்திலே அதே தொழிலைச் செய்யப்போகிறேன்
அத்தை."

"டீக்கடையைச் சொல்கிறாரா அம்மா."

"ஏன்... டீக்கடைக்காரன் பொண்டாட்டின்னு சொன்னால்

உனக்கு கவுரவ குறைச்சலாகிவிடுமா வசு?"

இந்தக் கேள்விக்கு அவள் எந்தப் பதிலையும் உதிர்க்கவில்லை.

காதல் தோல்வியின் தீ அவளுக்குள் இன்னமும் கனன்றுகொண்டிருந்தது. அதன் வெம்மை தாங்காமல் எல்லோரையும் நாவால் சுட்டுக்கொண்டிருக்கிறாள் என்பதை அவன் அறிவான்.

அவளுடைய கோபத்தைப் பொருட்படுத்தாமல், அதே நேரம் அவளைத் தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் வித்தை அவனுக்குத் தெரிந்திருந்தது.

வசுந்தரா, தமிழகப் பெண்களின் பாரம்பரிய குணங்கள் எல்லாம் ஒன்று சேர்ந்த வார்ப்பு. தாலி கட்டிய கணவன் வீட்டில் அவள் காட்டிய அடக்கமும், மாமனார்– மாமியாரிடம் காட்டிய மரியாதையும், நாத்தனாரிடம் காட்டிய அன்பும் அவற்றைப் பிரதிபலித்தன.

'பாவம்... இவளுடைய கோபத்தையும், வேதனையையும் வேறு யாரிடம் காட்டுவாள்? என்னிடம்தானே காட்ட முடியும்?' என்ற நினைப்பே அவனுக்கு மேலோங்கியது. அதனாலேயே பொறுத்துப் போனான்.

'இவள் என் மனைவி. இவளுடைய சுக துக்கங்களில் எனக்கு மட்டுமே பங்கு உண்டு. இவளைக் காக்க வேண்டியது என் கடமை.'

இது மட்டுமே அவன் எண்ணமாக இருந்தது. வசுந்தரா பேரழகி என்பதற்காக அவளை நேசிக்க ஆரம்பிக்கவில்லை. அவள் எப்படி இருந்தாலும் நேசித்திருப்பான்.

## 11

"பார்த்துப் பார்த்து... மெதுவா, கண்ணாடி உடைஞ்சிரப் போவுது."

அவளது பதற்றத்தை சட்டை செய்யாமல்– 'இதைப் போல எத்தனை வீட்டுச் சாமான்களை நாங்கள் இறக்கி இருப்போம்?' என்ற பாவனையுடன் லாவகமாக லாரியில் இருந்த எல்லாப் பொருட்களையும் இறக்கி, வீட்டுக்குள் கொண்டுவந்து வைத்துக்கொண்டு இருந்தார்கள் வேலையாட்கள்.

மறுவீட்டு விருந்து முடிந்தவுடன் சீர்வரிசையை சத்தியமூர்த்தியின் கிராமத்துக்கே கொண்டுவந்து இறக்கிவிட விசாலம் தயாரானபோது,

சத்தியமூர்த்தி அதை மறுத்துவிட்டான்.

"ஏன் மாப்பிள்ளை?"

"வேணாம் அத்தை. இதையெல்லாம் சேலத்துக்கே கொண்டாந்து கொடுத்துருங்க."

"சேலத்தில் இன்னும் வீடு பார்க்கலையே மாப்பிள்ளை."

"பார்த்துட்டேன்."

இதைக் கேட்டதும் மாமியார் முகத்தில் மட்டுமல்லாது, வசுந்தராவின் முகத்திலும் ஆச்சரியம் தாண்டவமாடியது.

"நீங்க பார்த்துட்டீங்களா... எப்போ பார்த்தீங்க?"

"முந்தா நாள். எனக்கு ஒரு வேலை இருக்குன்னு சொல்லிவிட்டு போனேன் இல்லையா? அது இந்த வேலைதான். சேலத்துக்குப் போய் இருந்தேன்.

"அது நீங்க பழகாத ஊராச்சே மாப்பிள்ளை?"

"ஆனா... என்கூடப் பழகினவங்க நிறையப் பேரு அந்த ஊருல இருக்காங்களே அத்தை..."

"என் மகள்கிட்ட சொல்லி இருந்தா அவளுக்கு தெரிந்தவங்களை வைத்து நல்ல வீடா பார்த்திருப்பாளே?"

"பெண்டாட்டியை வீட்டுக்குள்ளே உட்கார வைச்சு சோறு போட்டுத்தான் எங்க ஊர்ல பழக்கம். வசுந்தரா படிச்சு வேலைக்குப் போறவளா இருக்கா. அவளை வேலையை விடச் சொன்னா, அதை நான் அவளுக்குச் செய்யும் கொடுமையா நினைப்பா. அந்த ஒரு காரணத்துக்காகத்தான் அவ இருக்கிற ஊருக்கு போறேன். மத்தபடி வீட்டைப் பார்க்கிறதோ... குடும்பத்தைப் பார்க்கிறதோ என்னுடைய பொறுப்பு. அவ இதுல தலையிட வேணாம். நான் பார்த்து வைச்சிருக்கிற வீட்டுக்கு வான்னு சொன்னா, அவ வந்தாப் போதும்."

"வீட்டுக்கு அட்வான்ஸ்...?"

"கொடுத்துட்டேன்."

"எப்படி?"

அவசரத்தில் இந்தக் கேள்வியைக் கேட்டுவிட்டு, ஏன் கேட்டோம் என்று வருத்தப்பட்டாள் வசுந்தரா. கணவனின் சுடு பார்வை அவளைச் சுட்டெரித்தது.

"நான் டீக்கடைகாரன்தான். ஆனா, அதுல கைநிறைய சம்பாதிச்சவன். கடை போட்டிருக்கும் முக்கு ரோட்டில் இருக்கிற இடத்தை, சொந்த சம்பாத்தியத்தைக் கொண்டு விலைக்கு



வாங்கினவன். என் கையிலயும் நாலு காசு இருக்கு. நான் வாடகை கொடுக்கும் வீட்டுக்கு வந்து குடித்தனம் பண்ணா போதும். நீ வாடகை கொடுக்கும் வீட்டுக்கு நான் வந்து குடி இருக்கணும்னு அவசியமில்லை."

இப்படி பட் பட்டென்று பேசுபவனிடம்– கேட்க வேண்டியதைக் கேட்க முடியாமல் விசாலம் தவித்தாள். அவள் கைகளைப் பிசைவதைப் பார்த்த சத்தியமூர்த்தி புருவம் தூக்கினான்.

"இன்னும் என்ன அத்தை?"

"இல்லை. உங்க தங்கச்சி கல்யாணத்துக்கு சீர் அனுப்பணுமே...?"

விசாலம் சொல்லவந்ததைச் சட்டென்று புரிந்துகொண்டுவிட்டான். அவன் முகம் சுருங்க... வசுந்தராவின் முகத்தில் ஏளனப் புன்னகை மலர்ந்தது.

"அறுபது பவுன் நகையும், ஒரு லட்ச ரூபாய் ரொக்கமும் நீங்க வசுந்தராவுக்கு தரப்போறீங்க இல்லையா?"

"ஆமா."

"அதை என்கிட்ட கொடுத்துடுங்க. சீர்வரிசையை சேலத்து வீட்டுக்கு அனுப்பி வைச்சிடுங்க."

அவன் தன் முடிவைச் சொல்லிவிட– விசாலம் நகைப்பெட்டியையும், ரொக்கத்தையும் அவன் கையில் ஒப்படைத்துவிட்டு கவலையற்றவளாய் அந்த இடத்தைவிட்டு அகன்றாள்.

"அறுபது பவுன் நகையையும், லட்ச ரூபாயையும் கையில வாங்கலாமா? அதனால உங்களுக்கு கவுரவ குறைவு வராதா?" வசுந்தரா இடக்காகக் கேட்டாள்.

"வராது. ஏன்னா... இது ரெண்டையுமே திருப்பித் தந்துட்டுத்தான் உன்னைத் தொடுவேன்னு சபதம் போட்டிருக்கேன். எதுக்கும் கணக்கு வேணுமில்லையா? உன் சீர்வரிசையில் ஏதாவது ஒரு சாமான் குறைஞ்சு போச்சுன்னா... நாளைபின்ன அதை சொல்லிக்காட்ட மாட்டேன்னு என்ன நிச்சயம்? வாங்கின கடன், நகையாவும், பணமாவும் இருக்கட்டும். சீர் சாமானா இருக்க வேணாம்."

"அப்படிச் சொல்கிறவர் சீர்வரிசையே வேண்டாம்னு சொல்ல வேண்டியதுதானே?"

"உன் அம்மா மனசு தாங்குமாடி? இதையெல்லாம் யாருக்காக அவங்க சேர்த்து வச்சிருந்தாங்க. உனக்காக...! பார்த்து பார்த்து சேகரித்து வச்ச சீர்வரிசைடி. இதை நீ புழங்கினாத்தான் அவங்க மனசு

நிறையும். இதை என் தங்கச்சி புழங்கக்கூடாதுன்னு மட்டும்தான் நினைக்கிறேனே தவிர... உனக்கும், உன் அம்மாவுக்கும் இடையில் நான் வரமாட்டேன்."

வசுந்தராவுக்கு என்னவோ போல் ஆகிவிட்டது. 'அண்ணி... அண்ணி...' என்று சுற்றிச் சுற்றி வந்து பாசம் காட்டின சாவித்திரியின் முகம் மனதில் வந்து போனது.

"இந்தச் சாமான்களை சாவித்திரியே எடுத்துக் கொள்ளட்டும். எனக்கு அதில் ஆட்சேபனை இல்லை."

"எனக்கு இருக்கு."

"நான் பிரியப்பட்டுத்தான் கொடுக்கிறேன்."

"உன் பிரியத்தை மட்டும் கொடு. சீர்வரிசையைக் கொடுக்க வேணாம்."

"ஏன் நான் அவளுக்கு கொடுக்கக்கூடாதா? எனக்கு அந்த உரிமை கிடையாதா?"

அவள் விழிகளில் நீர் கோர்த்துக்கொள்ள, அதை அவன் கண்டுவிடக்கூடாது என்ற நினைப்புடன் முகம் திருப்பிக்கொண்டாள்.

அவனது மனதில் கனிவு சுரந்தது. 'பாவம்...' என்று எண்ணிக்கொண்டான்.

"உன் கழுத்தில் நான் கட்டிய தாலி இருக்குடி. உனக்கு இல்லாத உரிமை வேறு யாருக்கு இருக்கு? ஆனா, பணம் பத்தின பிரச்சினை நமக்குள்ள வந்துருச்சு. அது சரியாகாம நீ என் வீட்டைச் சேர்ந்த யாருக்கும் எதையும் கொடுப்பதை அனுமதிக்கமாட்டேன்"- கண்டிப்புடன் கூறிவிட்டான்.

'நான் மட்டும் இவன் வீட்டைச் சேர்ந்தவள் இல்லையா?' - அவள் மனம் சிணுங்கியது.

அதைக் குறிப்பால் அறிந்தான்.

"வசு..."- மிருதுவான குரலில் அழைத்தான்.

"ம்..."

"என் அப்பா-அம்மா, தங்கச்சி மூணு பேரும் என் வீட்டைச் சேர்ந்தவங்க. என்னைச் சேர்ந்தவங்க. ஆனால் நீ...?"

'நான் மட்டும் யாராம்? இவனோடு கூடிக் குழாவினால்தான் வீட்டுக்குள் சேர்த்துக்கொள்வானா...?' அவள் மனம் போராடியது.

"நீ... என்னில் பாதி வசு. நீ வேறு, நான் வேறுன்னு நினைக்கலை.



நீயும் ஒரு நாள் இதை நினைப்பாய். அந்த நாள் நிச்சயமாய் வந்தேதான் தீரும்."

ஆழ்ந்த குரலில் சொல்லிவிட்டு, சட்டென்று எழுந்து அறையைவிட்டுப் போய்விட்டான்.

வசுந்தரா நெடுநேரம் அசையாமல் அங்கேயே அமர்ந்திருந்தாள்.

கணவன் கூறிய வார்த்தைகள் அந்த அறையில் நிரம்பி இருந்த காற்றில் கலந்து அவள் காதில் நுழைந்தன. அது தந்த நிறைவோடு, கண்களை மூடினாள். அலைகடலாய் கொந்தளித்துக்கொண்டிருந்த மனம் லேசாக சமனப்பட முயன்றது. ஆனால், அது இயலாமல் போக- மேலும் கனத்தது.

'வருமா... அப்படியொரு நாள் வந்தே தீருமா...?'

அவள் மனதில் பாறாங்கல் ஏறி அமர்ந்தது. இருளில் தொலைந்துபோன கடந்த காலத்தை கனவில் தேடிக்கொண்டிருந்தாள்.

## 12

மருதநாயகம் ஒருவித யோசனையுடன் மகனின் முகத்தைப் பார்த்தார்.

"ஏன்ப்பா... உனக்கு இங்கே என்ன குறைன்னு சேலத்துக்குப் போறேங்கிற...?"

"அவ அங்கேதானப்பா வேலை பார்க்கிறா?"

"பார்த்தா... வேலையை இந்தப் பக்கம் மாத்திக்கிறது. அதுக்காக பொழைக்கிற ஊரை விட்டுட்டு, நீ வேற ஊருக்குப் போகணுமா?"

"பொழைக்கணும்னு நினைச்சா, எல்லா ஊர்லயும் பொழைக்கலாம்ப்பா."

"இங்கேன்னா விவசாயம், மாடு கன்று எல்லாத்தையும் பார்த்துக்கலாம். நீ ஒரே மகன். எங்க கூடவே இருக்கலாம்."

"சாவித்திரி இருக்காளேப்பா?"

"அவளைக் கட்டிக் கொடுத்திருவோம்ல."

"அவ வந்து போறது போல, நானும் வந்து போகிறேனேப்பா."

எல்லாக் கேள்விகளுக்கும் மகனிடம் பதில் இருப்பதைக் கண்ட மருதநாயகம், பேச முடியாமல் வாய் மூடிக்கொண்டார். மகன் ஒரு

தீர்மானத்துக்கு வந்துவிட்டது அவருக்குப் புரிந்தது.

"உனக்கு ஏம்ப்பா இப்படியொரு யோசனை வந்துச்சு?"

எப்படி இந்த யோசனை அவனுக்குள் வந்தது... ஏன் அவன் இந்த முடிவை எடுத்தான்? எப்படி அவனால் தன் தந்தையிடம் சொல்ல முடியும்?

"வசுந்தராவுக்கு மாறுதல் கிடைக்கும் வரையில் சேலத்தில், விடுதியில் தங்கி இருக்கட்டும்."

அந்தச் சில மாத பிரிவு அவர்களுக்கு இடையே ஏற்கெனவே இருக்கும் பிளவை அதிகப்படுத்திவிடாதா? அந்தப் பரிசோதனை முயற்சிக்கு அவன் தயாராக இல்லை. மேலும் அவனுக்கும், வசுந்தராவுக்கும் இடையே இருக்கும் மனவேற்றுமை வீட்டுக்கு தெரிந்துவிடக்கூடாது என்று வேறு நினைத்தான்.

கிராமத்தில் ஒரு வீட்டில் தும்மினால்கூட அது ஊருக்கே தெரிந்துவிடும். அங்கே தனிப்பட்ட உணர்வுகளுக்கு இடம் இருக்காது. அந்த ஊரில் வசுந்தராவை இருக்கவிடுவது சரி வராது என்பதுதான் அவனுடைய உடனடி முடிவுக்கு காரணமாக இருந்தது.

மருதநாயகம் தாடையைத் தடவிக்கொண்டு, அடுத்தக் கட்டப் பேச்சுக்கு வந்தார்.

"சீர்வரிசையை சேலத்து வீட்டுக்கே கொண்டுவரச் சொல்லிட்டியாமே! அது எதுக்குப்பா?"

"அங்கேதானப்பா வசுந்தரா குடித்தனம் பண்ணப்போறா? அவ அம்மா வீட்டு சீர்வரிசையை அங்கே அனுப்புறதுதானே நியாயம்?"

'மகன், தங்கையின் திருமணக் கடமையில் இருந்து விலகுகிறானோ?'– என்ற சந்தேகம் மருதநாயகத்திற்குள் தோன்றியது.

"அப்ப சாவித்திரி சங்கதி...?"

"அவளுக்கு என்னப்பா? குறிச்ச முகூர்த்த தேதியில ஜாம் ஜாம்னு கல்யாணத்தை நடத்தி அனுப்பிருவோம்."

'நல்லவேளை... அவன் தன் கடமையை மறக்கவில்லை' – நிம்மதிப் பெருமூச்சு விட்டார்.

"நகை, ரொக்கம், கல்யாணச் செலவு, சீர்வரிசைன்னு நிறைய இருக்கேப்பா?"

"ம்... நீங்க சொன்னபடியே வசுந்தராவின் நகையிலே முப்பது பவுனை கொடுக்கிறேன்."

"தங்கமாப் போச்சு. என்கிட்ட பத்து பவுன் இருக்கு."

"முப்பதாயிரம் தர்றேன். உங்ககிட்ட பத்தாயிரம் இருக்குன்னு சொன்னீங்க..."

"முப்பதாயிரமே வேணாம்ப்பா. நீ கல்யாணத்தை மட்டும் நடத்தி வை. மொய்ப் பணம் வரும். மாப்பிள்ளைக்கு, அவர் கேட்ட மோட்டார் சைக்கிளை வாங்கித் தந்து, பணத்தையும் கொடுத்திருவேன்."

கிராமத்து திருமணங்களில் இது ஒரு நன்மை என்று நினைத்துக்கொண்டான் சத்தியமூர்த்தி. கடன் வாங்கிக்கூட தைரியமா திருமணத்தை நடத்திவிடலாம். அந்தச் செலவை 'மொய்' ஈடுகட்டிவிடும்.

"சாவித்திரிக்கு கொடுக்க வேண்டிய சீர்வரிசைப் பொறுப்பு என்னோடதுப்பா. நான் பார்த்துக்கறேன்."

"அப்புறம் என்னடா... என் கவலைவிட்டது. கல்யாணத்தை அமோகமா நடத்திப்புடலாம்."

உற்சாகத்துடன் எழுந்து சென்றார்.

சத்தியமூர்த்தி மாடி அறைக்குச் சென்றான். அங்கு அவனுடைய மனைவியின் கைக்கு மருதாணி இட்டுக்கொண்டிருந்தாள் சாவித்திரி.

நாத்தனாரின் அன்பில்நெகிழ்ந்துபோனவளாக-அவள் முகத்தையே அன்புடன் பார்த்தபடி கையைக் கொடுத்துக்கொண்டிருந்தாள்.

"என்ன செய்றீங்க... ரெண்டு பேரும்?" மனைவியைப் பார்த்துக்கொண்டே தங்கையிடம் கேள்வி கேட்டான்.

"பார்த்தா தெரியலையா? அண்ணி கைக்கு மருதாணி வைக்கிறேன்."

"உன் அண்ணியா புதுப்பொண்ணு? அவதான் பழைய பொண்ணா ஆயிட்டாள்ல...! உன் கைக்கு வைச்சுக்க வேண்டியதுதானே?"

ஜாடையாய் வசுந்தராவை வம்புக்கு இழுக்க- அவள் வெட்டும் பார்வையோடு அவனை முறைத்தாள்.

'நானா... பழைய பொண்ணு?'- என்று அவள் விழிகள் கேட்டன.

"போண்ணே... உனக்கு எப்பப் பார்த்தாலும் கேலிதான். அண்ணி செக்கச் செவேல்னு இருக்காங்க. அவங்க கையில மருதாணி வைக்கணும்னு எனக்கு என்னா ஆசையா இருக்கு தெரியுமா?"

தன்னைவிட தன் அண்ணன் மனைவி அழகானவள் என்பதை



துளிகூட பொறாமை இல்லாமல் சொல்லிய சாவித்திரியின் வெள்ளை மனதைக் கண்டு வசுந்தராவுக்கு அவள் மேல் பாசம் பொங்கியது.

"உனக்கென்ன அழகு குறைவா சாவித்திரி...?"- பரிவுடன் நாத்தனாரைப் பார்த்தாள்.

"உங்க அளவுக்கு நான் அழகில்லை அண்ணி."

"யார் அப்படிச் சொன்னது? உன் முக லட்சணம் எனக்கு வராது. நீ எவ்வளவு அழகா இருக்கேன்னு உனக்கு எப்படித் தெரியும்? உன்னைப் பார்க்கிற எனக்குத்தானே தெரியும்!"

"நிஜமாத்தான் சொல்றீங்களா?"

"எனக்குப் பொய் சொல்லத் தெரியாது."

"ஆமா...ம்! உன் அண்ணி அரிச்சந்திரன் வீட்டுக்கு அடுத்த வீட்டுக்காரி."

"நாங்க பொம்பளைங்க ஆயிரம் பேசிக்குவோம். நீ குறுக்கே வராதேண்ணா."

"இதப் பாருடா... பொம்பளைக கூட்டணி போடுறதை! ம்... கூட்டணி பலமா இருக்கு. இங்கே நின்னா என் பேச்சு எடுபடாது. நான் கொஞ்சம் வெளியே போயிட்டு வரேன்."

மனைவியைப் பார்த்து அவன் சொல்ல... அவள் தன்னை அறியாமல் மெதுவாக தலை அசைத்தாள்.

உடனே அவன் மனதில் சாரல் அடித்தது. துள்ளிக் குதித்தான்.

"ஏன் அண்ணி... அண்ணனும், நானும் ஒரே ஜாடை. நான் அழகுன்னா, அண்ணனும் அழகுதானே..." என்று கேட்டு வைத்தாள்.

அது தன் காதுக்கு மெல்லிசாக கேட்டதும், சத்தியமூர்த்தி அப்படியே நின்றுவிட்டான். வசுந்தரா என்ன பதிலைச் சொல்லப் போகிறாள் என்று அறிய ஆவல் கிளர்ந்தது.

வசுந்தரா உதட்டைக் கடித்துக்கொண்டே, "ஆமாம்" என்று சொல்லியும்விட்டாள்.

"கேட்டுக்கண்ணே..."- தமையனைத் திரும்பிப் பார்த்த சாவித்திரி... "அண்ணி... உங்க கையில் மருதாணி எவ்வளவு சிவந்திருக்குன்னு அப்புறமாய் வந்து பார்க்கிறேன்" என்றாள்.

"ஏன்...?"

"கல்யாணமான பொண்ணு கையில மருதாணி நல்லாச் சிவந்திருந்தா, அவங்களுக்கு அவங்க புருஷன் மேல ஆசை அதிகம்

இருக்குன்னு அர்த்தமாம். உங்க கைலேயும் மருதாணி நல்லாச் சிவந்திருந்தா, உங்களுக்கும் எங்க அண்ணன் மேல ஆசை அதிகம் இருக்குன்னு அர்த்தம்."

வசுந்தராவின் முகம் குப்பென்று சிவக்க...

சத்தியமூர்த்திக்கு வெளியே கிளம்ப வேண்டுமென்ற எண்ணமே மறந்துவிட்டது.

# 13

**வ**சுந்தராவின் கை நன்றாகச் சிவந்திருந்தது. அந்த மருதாணிச் சிவப்பில் தெரிந்த தளிர் விரல்களைப் பற்றி முத்தமிட வேண்டும் என்ற ஆசை மனதில் கிளற– மொட்டை மாடியில் காற்று வாங்கியவாறு அவளை காதலாகப் பார்த்தான்.

அவள் கட்டிலில் அவனுக்கு முதுகு காட்டி திரும்பிப் படுத்தாள். அன்று முழுவதும் வருவோர் போவோரெல்லாம் அவளது மருதாணிக் கையின் சிவப்பையே பேசியதில், அதிக நாணம் அடைந்திருந்தாள்.

"அட... புதுப்பொண்ணு கையைப் பாருடி. என்னமாச் சிவந்திருக்கு! புருஷன் மேல கொள்ளை ஆசை போல."

வசுந்தராவுக்கு மனம் தாங்கவில்லை. கணவன் மேல் அவள் கொண்டிருக்கும் ஆசையின் அளவைத்தான் அவளது மனம் அறியுமே... ! அதை அந்த ஊர் அறியுமா? அவர்கள் தங்கள் போக்கில் அவளின் கையைப் பற்றி கேலி பேசிக்கொண்டே இருந்தார்கள்.

அவள் மெதுவாக திரும்பி கணவனைப் பார்த்தாள். லுங்கியை மடித்துக் கட்டிக்கொண்டு நின்றிருந்தான். வெறும் பனியன் மட்டும் அணிந்திருந்த உடலில் தெரிந்த புஜங்களின் அழகு அவளை ஈர்த்தது. அவனது வலிமையான கால்களை, அவள் பார்வையிட்டுக் கொண்டிருந்ததை கவனித்துவிட்டான்.

அவளை விழுங்கி விடுவதைப் போல முறைத்துக்கொண்டே அறை வாசலுக்கு வந்தான். முதலிரவின்போது சாய்ந்து நின்றதைப் போல இன்றும் சாய்ந்து நின்றான்.

அவள் சட்டென்று கண் மூடிக்கொண்டாள். அவன் மெதுவாகச் சிரிப்பது அவள் காதில் விழுந்தது.

"தூங்கலையா?"



"தூங்கிட்டுத்தானே இருக்கேன்."

இப்போது அவன் பலமாகச் சிரித்தான்.

அவளுக்கு தன் முட்டாள்தனத்தை நினைத்து வெட்கமாகிவிட்டது. 'தூங்குபவர்கள் பேசுவார்களா என்ன? இப்படிப் பேசி மாட்டிக்கொண்டோமே?' என்ற எண்ணத்துடன் கண்களை இறுக மூடிக்கொண்டாள்.

அறைக்கதவை மூடிவிட்டு கட்டிலுக்கு வந்தான். வசுந்தரா மூச்சை இறுக்கிக்கொண்டு, திரும்பிப் படுத்தாள். விளக்கை அணைத்தான்.

'ம்ஹீம்... இவன் வேற... இப்படி இம்சை பண்ணித் தொலைக்கிறானே...? தரையில் இவன் படுத்துத் தூங்கலாம். இல்லை என்னைத் தரையில் படுக்கவிடலாம். இரண்டும் இல்லாமல் இப்படி ஒரே கட்டிலில் படுத்துக்கொள்வது எவ்வளவு கஷ்டம்? இவனுக்கு இது சிரமமாக இல்லையா...?'

"இதோ பார் வசு, என் விரல் உன் மேல படாது. அவ்வளவுதான்! அதுக்காக இந்தக் கட்டிலை பிரிச்சுப் போடறது– நீ தரையில் படுக்க, நான் கட்டிலில் படுப்பது– நான் தரையில் படுக்க, நீ கட்டிலில் படுப்பது– இதெல்லாம் கதைக்கு ஆகாது. வாழ்க்கை பூராவும் நாம் சேர்ந்து இருக்கணும்டி. இப்ப இருக்கற நிலைமைக்காக... கிறுக்குத்தனம் பண்ணாம நீ கட்டிலில் ஓரம் கட்டு. நான் இந்த ஓரமா படுக்கறேன்."

முதலிரவிலேயே அவன் தெளிவாக சொல்லிவிட்டான். முதல் இரண்டு தினங்கள் அது வசுந்தராவுக்கு சிரமமாக இருந்தது. மெல்ல அது பழகிவிட்டது.

அவள் தூங்காமல் விழித்திருப்பதை அவன் அறிந்து வைத்திருந்ததால் மெதுவாகப் பாடினான்.

"தூங்காத கண்ணொன்று உண்டு...

துடிக்கின்ற நெஞ்சொன்று உண்டு..."

அவளின் மூடிய இமைகளில் இருந்து கண்ணீர் வழிந்தது. என்ன மாதிரியான பாடல் இது! இதயத்துக்குள் ஒளித்து வைத்திருக்கும் உணர்வுகளை வெளியே கொட்ட வைக்கும் பாட்டு. என்ன ஒன்று... இந்தத் துடிக்கின்ற சுகத்தை வசுந்தரா ஏற்கெனவே உணர்ந்துவிட்டாள். தூங்காத கண்களுடன் விடியும் வரை பல இரவுகள் விழித்து அழுதுவிட்டாள். தாங்காத மனத்துடன் தவித்துவிட்டாள். இன்று இவன் புதிதாக அவளது பெண்மையைத் தட்டியெழுப்ப முயற்சி

செய்கிறானே...!

'இந்தப் பாடலைப் பாடாதே. உன் தாலி என் கழுத்தில் கிடக்கிறது. நீ என் கணவன். என் அருகில் இருக்கிறாய். உன் மார்பில் முகம் புதைத்து என் துயர் தீர அழ வேண்டும் போல தெரிகிறது. ஆனால், என்னால் அது முடியாமல் போய்விட்டதே! நான் என்ன செய்வேன்... எங்கு போவேன்...?'

வசுந்தரா விம்மலை அடக்கிக்கொண்டாள். சிறு வயதில் இழந்துவிட்ட தந்தையை எண்ணி அழுதாள். வளர்த்துவிட்ட தாயை நினைத்து அழுதாள். வளர்ந்த பின்னால் மனதில் வந்த காதலை எண்ணி அழுதாள்.

இப்போது வசுந்தராவிடம் கேவல் ஒலி சப்தமாக வெளிப்பட்டுவிட– சத்தியமூர்த்தி அதிர்ந்து எழுந்து, விளக்கைப் போட்டான். வெளிச்சத்தில்– முகமெல்லாம் கண்ணீராக இருந்த மனைவியைப் பார்த்தான். கைகளால் வாய் மூடி அழுகையை அடக்கப் போராடிக் கொண்டிருந்தாள் அவள்.

"வசு... என்ன இது! பச்சைப் பிள்ளையாட்டம்...?" அதட்டினான்.

அவளது அழுகை நிற்கவில்லை. கேவல் ஒலிகள் பலமாக வெளிப்பட– அவன் கவலையுடன் மாடிப் பக்கம் இருந்த கதவைப் பார்த்தான்.

"சத்தம் இல்லாமல் அழு. கீழே அப்பா– அம்மா காதில் விழுந்தா... வேற வினையே வேணாம்."

அவன் எச்சரித்துக்கொண்டு இருக்கும்போதே அறைக்கதவு தட்டப்பட– தலையில் கை வைத்துக்கொண்டான்.

"சொன்னேனே... கேட்டியா? இப்பப் பாரு... பாராளுமன்றத்தில் எழுப்புற கேள்விகளைவிட, இவங்க காட்டமா கேள்வி கேட்கப் போறாங்க."

வசுந்தரா அவசரமாய் முகத்தைத் துடைத்துக்கொண்டாள்.

"ம்கூம்... இப்ப முகத்தைத் துடைச்சு என்ன பிரயோசனம்? இந்த அறிவு முதலிலேயே இருந்திருக்கணும்! 'பகலில் பக்கம் பார்த்து பேசு. ராத்திரியில அதையும் பேசாதே'ன்னு பழமொழியே இருக்கு. நீ பேசித் தொலைச்சாலும் பரவாயில்லை. நான் என்னவோ உன்னைக் கொடுமை பண்ணியது மாதிரி இப்படிக் கதறி வைக்கிறே.

ஏன்டி.... தெரியாமத்தான் கேட்கிறன்... என் பாட்டு உனக்கு அத்தனை கொடுமையா இருக்கா? இப்படி அழுது தொலைக்கிறே?"



–சலித்துக்கொண்டான்.

அவன் எதிர்பார்த்தபடியே வசுந்தராவின் முகத்தில் மெல்லிய சிரிப்பு படற... நிம்மதியுடன் எழுந்து அறைக் கதவைத் திறந்தான்.

வெளியே மருதநாயகமும், பவளக்கொடியும் நின்றிருந்தார்கள்.

"என்னடா... மருமக அழுத மாதிரி இருந்துச்சே...?"

"ஏம்மா... உனக்கு அழுகைக்கும், சிரிப்புக்கும் வித்தியாசம் தெரியாதா? அவ சிரிச்சிட்டு இருக்காம்மா."

அப்போதைக்கு நிலைமையைச் சமாளித்துவிட்டான்.

## 14

சத்தியமூர்த்தி அந்தச் சிறிய டீக்கடையைச் சுற்றி வந்து பார்த்தான். கண்கள் பனித்தன. அவன் சம்பாதித்து சொந்தமாக வாங்கிய சொத்து. அவனுடைய அடையாளம்.

இரு கிராமங்களுக்குச் செல்லும் நுழைவுப் பாதையில், பெரிதாக வளர்ந்து பரந்திருந்த ஆலமரத்தின் அருகில் டீக்கடை அமைந்திருந்தது. அதன் சிறப்பு அம்சங்களில் ஒன்று– நிழலில் சின்னதாக மரப் பெஞ்சுகளைப் போட்டு வைத்திருந்தான்.

எப்போதும் அவனுடைய கடையில் கூட்டம் இருந்துகொண்டே இருக்கும். வீட்டில் பவளக்கொடி செய்து கொடுக்கும் உளுந்து வடை, இனிப்பு போண்டா போக– கொறிப்பதற்காக காராச்சேவு, இனிப்புச் சேவு, முருக்கு, மிக்சர், பூந்தி என்று பல வகைகளும் இருக்கும்.

வெயில் காலங்களில் ஜூஸ் போடுவான். அந்த இடத்தில் பஸ் ஏற வருகிறவர்களும் சரி, பஸ்ஸில் இருந்து இறங்குபவர்களும் சரி, அவனுடைய கடை டீயை ருசிக்காமல் போவதில்லை. இரவில், கடைசி பஸ் போன பின்னர்தான் கடையை அடைத்துவிட்டு வீட்டுக்குச் செல்வான்.

நிலத்தை அடமானம் வைத்து, மகனுக்காக இந்தக் கடையை தொடங்கினார் மருதநாயகம். அதுபோக, கடன்களையும் வாங்கி வைத்திருந்தார். அதில் கிடைத்த வருமானத்தை வைத்துதான் நிலத்தை மீட்டு, தந்தையின் கடன்களையும் அடைத்தான் சத்திய மூர்த்தி.

இன்று அவர் வாய்க்கு வாய் சொல்லிக்கொள்ளும் பத்து

பவுன் நகையும், பத்தாயிரமும் சத்தியமூர்த்தியின் உழைப்பா வந்தவைதான்.

அந்த டீக்கடையை விலை பேசி விற்கப் போகிறான். அவ வாங்குகிற ஆள் சற்று நேரத்தில் வரப்போகிறான். அவனுக்காகத்தா வெகுநேரம் காத்திருந்தான்.

மர பெஞ்சில் படுத்து, அண்ணாந்து ஆலமரத்தைப் பார்த்தா வெயிலின் சிறு கீற்று வெளிச்சம்கூடத் தென்படாமல், அடர்ந் இலைகள் மறைத்திருந்தன.

இதுதான்– இந்தக் குளுமைதான் வியாபாரத்தை தூக்கிவிட்டது இப்போது இந்தக் குளுமையைப் பிரிய வேண்டிய நேர வந்துவிட்டது.

"என்ன சத்தியா... ஆலமரத்தை அண்ணாந்து பார்த்துக்கிட்டு படுத்துக் கிடக்கற. குருவிக்கூடு எத்தனை இருக்குன்னு எண்ணிக்கிட்டு இருக்கியா?"– சைக்கிளில் வந்து இறங்கிய காத்தவராயன் கேட்டான்.

'இல்லை. நான் கட்டிய என் கூட்டைவிட்டுப் பிரியப்போறேன் அதான்...'– மனதுக்குள் சொல்லிக்கொண்டான்.

"ஏம்பா... ஒரு சேதி கேள்விப்பட்டேன். நெசமா...?"

"என்னண்ணே..."

"இந்த டீக்கடையை விக்கப் போறியாம்ல?"

"ம்..."

"ஏம்பா, உனக்கு என்ன கிறுக்குப் பிடிச்சிருக்கா? கூறோடதான் பேசறியா?"

"ம்ப்ச். வேற வழி இல்லண்ணே."

"டீக்கடையில உனக்கு எம்புட்டு வரும்படி வந்துச்சுன்னு எனக்கு தெரியும்ப்பா. அறிவு இருக்கிறவன் இந்தக் கடையை விப்பானா? நீ புத்தியைக் கடன் கொடுத்திட்டியா?"

காத்தவராயனின் உரிமை கலந்த கோபம், அவன் மனதுக்கு ஆறுதலைத் தந்தது.

"என்னண்ணே செய்யறது...? பொண்டாட்டி டவுன்ல வேலை பார்க்கிறா. இங்கே அவளை வரச்சொல்லி கட்டாயப்படுத்தறது நியாயமில்ல. இங்கு பிழைக்கிற பிழைப்பை டவுனில் போய் பிழைக்கலாமேன்னு முடிவு பண்ணிட்டேன். வேற ஒண்ணுமில்லே..."– குரல் நலிந்து ஒலித்தது.

காத்தவராயன் அனுதாபத்துடன் சத்தியமூர்த்தியைப் பார்த்தான்.

"முடிவு பண்ணிட்டல்ல. விட்டுத்தள்ளு, கவலைக் கழுதையை. இந்த மடம் இல்லேன்னா சந்த மடம். நீ தொழில்காரன். பொழைக்கத் தெரிஞ்சவன். உன் நல்ல மனசுக்கு ஒரு குறைவும் வராது சத்தியா. ஒரு முடிவை எடுக்கறதுக்கு முன்னாலதான், ஆயிரம் முறை யோசனை பண்ணணும். முடிவு எடுத்துட்டா, அதைப் பத்தி அப்புறம் நினைச்சுப் பார்க்கவே கூடாது. எங்கே இருந்தாலும் நீ நல்லா இருக்கணும். அதுதான் எனக்கு வேணும். வரட்டுமா...?"

**'எண்ணித் துணிக கருமம்– துணிந்தபின்**
**எண்ணுவம் என்பது இழுக்கு...'** என்ற

வள்ளுவரின் வாய் மொழியை இயல்பாக கிராமத்துப் பேச்சில் சொல்லிவிட்டுச் சென்ற அந்தப் படிக்காத மேதையின் பாசத்தை அசை போட்டபடி இருந்தான் சத்தியமூர்த்தி.

"ரொம்ப நேரமாயிட்டா சத்யா...?" என்றபடி சைக்கிளில் வந்து இறங்கினான் பேச்சிமுத்து.

அவன்தான் அந்த டீக்கடையை விற்றுத் தர இருக்கும் இடைத்தரகன்.

"இல்ல பேச்சிமுத்து... நானே இப்பத்தான் வந்தேன். வாங்குற ஆளு வர நேரமாகுமா?"

"அதோ... அவங்க வந்துட்டாங்களே..."

பேச்சிமுத்து கைகாட்டிய திசையில்– அடுத்த கிராமத்துக்கு செல்லும் சாலை தெரிந்தது. தூரத்தில் புள்ளியாக ஒரு சைக்கிள்.

"வர்றது யாரு தெரியுமா?" பேச்சிமுத்து கேட்டான்.

"யாரு...?" புரியாமல் வினவினான்.

"எல்லாம் உனக்கு வேண்டப்பட்டவங்கதான்."

"அந்த ஊரில எனக்கு வேண்டப்பட்டவங்க நிறைய பேரு இருக்காங்க. அதுல நீ யாரைச் சொல்ற...?"

"ஆளைப் பார்த்தால் நீயே தெரிஞ்சுக்குவ. டீக்கடையை விக்கப் போற சேதியைக் கேட்டவுடன், அந்த ஆளின் புதுப் பெண்டாட்டி இந்தக் கடையை வாங்கியே தீரணும்னு ஒத்தைக்காலில் நின்னாளாம். பணத்துக்கு எங்கே போறதுன்னு கழற்றிக் கொடுத்து வித்துப்புடச் சொன்னாளாம். பத்தாத குறைக்கு அவ தன்னோட சேமிப்புப் பணத்தையும் சேர்த்துக் கொடுத்தாளாம்."

"அட... அப்படியா... யாரு அந்தப் பொண்ணு?"

அருகாமையில் சமீபித்துவிட்ட சைக்கிளின் பின்பக்க

இருக்கையில் இருந்து இறங்கியவளைக் கண்டவுடன் அவன் வ
அடைத்துக்கொண்டது.

"இவளா...?" என்று அதிர்ந்தான்.

"நான் சொன்னேனே... உனக்கு வேண்டப்பட்ட ஆளுன்னு. அ
இந்த பூங்கோதைதான்... பார்த்துக்க"– முணுமுணுத்தான்.

பூங்கோதைக்கு திருமணமான செய்தியை சத்தியமூர்த்
அறிந்திருக்கவில்லை.

"எப்போ இவ கல்யாணம் நடந்தது?"– தாழ்ந்த குரலில் தரகனிட
கேட்டான்.

"நீ மறுவீட்டுக்குப் போயிருந்தப்ப நடந்துச்சு."

"எனக்கு பத்திரிகை வைக்கலையே?"

"திடீர் கல்யாணம்... கோவிலில் வைச்சு. இந்த நாராயணன் இ
கழுத்துல தாலியைக் கட்டிட்டான்."

"திடீர் கல்யாணமா... எப்படிடா?"

"உனக்கு எல்லாத்தையும் விளக்கமா சொல்லணும். சுருங்க
சொன்னா, உன் மண்டையில ஏறாது. இந்த நாராயணன் ரொம்
நாளா பூங்கோதையை டாவடிச்சானாம். பூங்கோதை அவனை
திரும்பிப் பார்க்க மாட்டேனுட்டா. உன் கல்யாணம் முடிஞ்
மறுநாள், நாராயணன்கிட்ட சம்மதம் சொல்லிட்டா. நாளை
கடத்தினா அவ மனசு மாறிப் போயிரும்னு உடனே கோவிலி
வைச்சு தாலியைக் கட்டிப்புட்டான்."

கணவன் பின்னால் நின்றுகொண்டிருந்த பூங்கோதையின் கண்க
கண்ணீரில் மிதந்தன. திருமணத்திற்கு முதல் நாள் இரவு வசந்தா
அழுத அழுகைதான் அவனுக்கு நினைவுக்கு வந்தது.

'பாவம் இந்தப்பெண்கள்... காதலை மறந்து... இன்னொருவனி
கைபிடிக்க வேண்டிய துர்பாக்கிய நிலைக்கு ஆளாகும்போது
எத்தனை மனப் போராட்டங்களை சந்திக்கிறார்கள்?' என்று
நினைத்துக்கொண்டான்.

## 15

**நா**ராயணன், கடையைச் சுத்திப் பார்த்தான். அவனுக்கு
மிகவும் திருப்தியாக இருந்தது. அந்தக் கடையில், சத்தியமூர்த்தியின்
கையால் நிறைய முறை டீ வாங்கிக் குடித்திருக்கிறான். அதே



கடைக்கு, தான் முதலாளியாகக்கூடும் என்று அவன் நினைத்துக்கூட
பார்த்ததில்லை.

இன்று அது சாத்தியமாகி இருக்கிறது. அதற்குக் காரணம்
அவனுடைய காதல் மனைவி.

நாராயணன் காதலுடன் தன் மனைவியைப் பார்த்தான். அவன்
கண்களில் பிரதிபலித்த பாசத்துக்கு பதிலாக வெற்றுப் புன்னகை
ஒன்றை வீசினாள் பூங்கோதை.

"இங்க வா நாராயணா..."

பண விஷயம் குறித்துப் பேச பேச்சிமுத்து அழைக்க– நாராயணன்
அருகில் போய்விட்டான். அவர்கள் இருவரும் சற்றுத் தூரத்தில்
போய் நின்று தாழ்ந்த குரலில் பேசிக்கொண்டிருந்தபோது, பூங்கோதை
ஏக்கத்துடன் சத்தியமூர்த்தியை நிமிர்ந்து பார்த்தாள்.

"எப்படி இருக்கே மச்சான்...? உன் புதுப் பெண்டாட்டி எப்படி
இருக்கா?"

அந்த வார்த்தைகளில் தொனித்த துயரம், அவன் இதயத்தைப்
பிழிந்தது. ஆனால், அதை வெளிக்காட்டிக்கொள்ளாமல் கண்டிப்பான
பார்வை பார்த்தான்.

"இனிமேல்பட்டு என்னை மச்சான்னு கூப்பிடாதம்மா. உன்
மச்சான் அதோ நிக்கிற உன் புருஷன்தான். என் பெண்டாட்டி
எப்படி இருக்காள்னு கேட்டில்ல... அவ நல்லா இருக்கா. என்னை
விட்டுப் பிரிஞ்சு இருக்க முடியாதுன்னு அழுதா. பார்த்தீல்ல... இந்தக்
கடையையே அவளுக்காக வித்துப்புட்டு சேலத்துக்குப் போறேன்.
ஒரு நிமிடம் என்னை விட்டுட்டு இருக்கமாட்டா. அம்புட்டுப் பிரியம்
என் மேல"– இயல்பான குரலில் சொன்னான்.

"உனக்கு அவ மேல பிரியம் இருக்கா?"– அவனை தீர்க்கமாகப்
பார்த்தாள்.

"கடலளவு இருக்கு. அவதான் என் உசிரு. நான் கட்டையில
போகிற வரைக்கும், என்கூட வாழப்போறவ. அவ மேல பிரியம்
வைக்காம வேற யாருமேல வைக்கப் போறேன்?"– கூர்மையான
வார்த்தைகளை கக்கினான். மேலும் விடாமல் தொடர்ந்தான்.

"கல்யாணத்துக்கு முன்னால நாம ஆயிரம் பேரோட பழகலாம்–
பேசலாம். கட்டிக்கிரணும்னு ஆசைப்படலாம். ஆனா, கல்யாணம்னு
ஒண்ணு நடந்து, நம்ம வாழ்க்கையை பங்கு போட இன்னொரு
ஜீவன் வந்துருச்சுன்னா... அதுமேலதான் நாம பிரியம் வைக்கணும்.
என் பொண்டாட்டி படிச்சவ. அழகானவ. பணக்காரிங்கறதுனால

மட்டும் நான் இதைச் சொல்லலை. அவ என் பொண்டா
அதனால அவ மேல பிரியம் வச்சுருக்கேன். அவளும் அப்படித்த
என் மேல உசிரையே வைச்சிருக்கா."

பூங்கோதைக்கு எதுவோ புரிவதைப் போல இருந்
சத்தியமூர்த்தியும் அதை இனம் கண்டுகொண்டான். அதன
பேச்சை நிறுத்தவில்லை.

"இப்ப டீக்கடையை விக்கப் போறேன். இந்தப் பணம், டவு
கடை போட பத்துமா? பத்தாது. அவ அறுபது பவுனு நகை
அப்படியே கையில கொடுத்துட்டா. இதை எதுக்காக செய்ய
அவ வசதியோட வாழணும்னா? அவ வசதிக்கு இப்ப என்
குறைச்சல்? என் தகுதியை அதிகப்படுத்திக் கொடுக்கிறா. இதுதா
பெண்டாட்டிங்கிறவ.

இப்ப நீயே இருக்கிறே... என் கடைக்கு தினமும் பால் ஊத்தி
ஒரு நாளைக்கு எம்புட்டு ரூபாய்க்கு வியாபாரம் நடக்கும்னு உனக்
தெரியும். இந்தக் கடை மூலமா உன் புருஷன் சம்பாதிச்சு முன்னு
வரணும்னுதானே நகைகளைக் கொடுத்து அவனை கடையை வா
வைக்கிற...?"

ஆனால், உண்மை அதுவல்ல என்று அவள் மனம் கூறிய
பூங்கோதையைப் பொறுத்தவரை அந்த டீக்கடை ஒரு நினை
சின்னம். அது இன்னொருவர் கைக்குப் போவதை அவ
விரும்பவில்லை என்பதுதான் உண்மை.

டீக்கடையை நினைவுச் சின்னமாக அவள் நினைக்காம
கணவனின் உடைமையாக நினைக்க வேண்டும். ஒரு வியாபார தலம
கருத வேண்டும் என்று விருப்பப்பட்டான் சத்தியமூர்த்தி.

"யாருக்கு யாருன்னு யாருக்குத் தெரியும் பூங்கோதை? வசுந்தராவை
கட்டிக்கப் போறேன்னு நான் நினைச்சுப் பார்த்தேனா? இல்ல
நாராயணனுக்கு கழுத்தை நீட்டப் போகிறேன்னு நீ நினைச்ச
பார்த்தியா? நாம எதிர்பார்க்காதது நடந்துடுச்சு. எனக்குன்
ஒருத்தி வந்துட்டா. என் மேல உயிராய் இருக்கிறா. உனக்குன்
ஒருத்தன் வந்துட்டான். நீ சொல்ற வார்த்தையை கடவுள் வாக்க
நினைச்சு நடக்கிறான். நான் என் வாழ்க்கையைப் பார்த்துக்கிட்டு
போகப் போறேன். நீ உன் வாழக்கைய வாழப் பாரு..."

அவள் முகத்தில் இப்போது தெளிவு வந்திருந்தது. கண்களை
துடைத்துக்கொண்டு, டீக்கடையைச் சுற்றித் தன் பார்வையை
செலுத்தினாள்.



அது காதலின் நினைவுச் சின்னத்தைப் பார்க்கும்– தோற்றுப்போன காதலியின் பார்வையாக இல்லாமல், கடையை எடை போடும் உரிமையாளரின் பார்வையாக இருந்தது.

'இனி பூங்கோதை வாழ்ந்துவிடுவாள்' – அவன் நிம்மதியானான்.

நாராயணன் கொடுத்த பணத்தை வாங்கிச் சட்டைப் பையில் வைத்துக்கொண்டு, சைக்கிளில் ஏறிய சத்தியமூர்த்தி– மெதுவாகத் திரும்பி பூங்கோதையைப் பார்த்தான்.

அவள்...அவனைக்கவனிக்காமல்நாராயணன் கூறிய ஏதோ ஒன்றுக்கு முகம் சிவந்து வெட்கச் சிரிப்பு சிரித்துக்கொண்டிருந்தாள்.

அந்தக் காட்சி மனதுக்கு இதத்தை அளிக்க– நிம்மதியுடன் சைக்கிளில் ஏறி பெடலை மிதித்தான்.

வீட்டுப் படியேறும்போது மனம் கனத்தது. நாராயணனுடன் பேசிச் சிரித்துக்கொண்டிருந்த பூங்கோதையின் முகம் நினைவுக்கு வந்தது.

'அதுபோல வசுந்தரா ஏன் என்னிடம் சிரித்துப் பேச மறுக்கிறாள்?'

'யார் நெஞ்சில் காதல் இல்லை...?'– அவன் மனம் கேள்வி கேட்டது.

திருமணப்பேச்சு ஆரம்பித்தவுடன்–பெண் பார்க்கப் போகும் முதல் பெண்ணையே மணம் முடித்துக்கொள்ளும் பாக்கியம் பெரும்பாலும் எந்த ஆண் மகனுக்காகவாவது கிடைக்கிறதா? அரிதுதான். பெண் பார்க்க சென்று வரும் முதல் மாப்பிள்ளைக்கே கழுத்தை நீட்டும் அதிர்ஷ்டம் எல்லா பெண்களுக்குத்தான் வாய்க்கிறதா?

ஒவ்வொரு பெண்ணையும், இனம்புரியாத ஒரு காதல் உணர்வோடுதானே அவன் பார்க்கிறான். ஒவ்வொரு முறையும் தலைநிமிர்ந்து மாப்பிள்ளையாக வந்து அமர்ந்திருக்கும் ஆண் மகனின் பார்வையைச் சந்திக்கும்போது, பெண்ணின் மனதில் காதல் பூ பூக்கத்தானே செய்கிறது.

பத்து முறை பெண் பார்த்து– பதினொறாவது முறை பார்க்கும் பெண்ணுக்கு தாலியைக் கட்டுகிறான். அவனுக்கு கழுத்தை நீட்டும் பெண்ணும், அதே நிலையில்தான் இருப்பாள். அந்தத் தாலி கழுத்தில் ஏறியவுடன்– அதைக் கட்டியவனுக்கும், வாங்கிக்கொண்டவளுக்கும் இடையில் ஒரு பந்தம் உருவாகுமே, அதுதான் என்றுமே நிரந்தரம்.

வசுந்தரா.

அவன் முகத்தில் சிறிதளவு வெளிச்சம் படர்ந்தது.

"உன் புருஷனைப் பற்றிப் பெருமையா சொல்லிக்க வேணாமா? அதுக்குத்தான் இது."

"என்னது? எனக்காக இவ்வளவு பெரிய ஓட்டலைத் திறந்திங்களா?"– விழிகள் விரியக் கேட்டாள்.

"ஆமாம்"– என்று அவளின் விழிகளுக்குள் ஊடுருவினான்.

"என்னால நம்பவே முடியலை."

"அதுதான் உண்மை. நீ நம்பித்தான் ஆகணும்."

## 17

"கூட வேலை பார்க்கிறவங்க உன் புருஷனைப் பத்திக் கேட்டா நீ பெருமையாய் சொல்லிக்க வேணாமா...? அதைத்தானே நீயும் விரும்புவ..." சத்தியமூர்த்தி சட்டென்று இயல்பாகி அவளைப் பார்த்து கண் சிமிட்டினான்.

'அப்பாடி... கோபத்தை விட்டுவிட்டான்'– அவள் மனம் லேசானது.

அவனுடைய கோபம் ஏன் தன்னைப் பாதிக்கிறது என்று அவள் யோசிக்கவே இல்லை.

"அடேங்கப்பா. எனக்காகத்தான் இந்த வேலையாக்கும்?" அலட்சியமாக பேசினாள்.

"எதுக்கு இப்படி சிலுப்பிக்கிற...? உன்கூட வேலை பார்க்கிறங்ககிட்ட ஓட்டல்காரனின் பெண்டாட்டின்னு சொல்லிக்க உனக்கு பெருமையா இருக்குமா... இல்லையா? நிஜத்தைச் சொல்லுடி..."– கேலி பேசினான்.

ஆனால், அதுதான் உண்மையாக இருந்தது.

வசுந்தரா வேலையில் மீண்டும் சேரப் போனபோது, அனைவரும் அருகே வந்து அவளுடைய கணவனைப் பற்றியே விசாரித்தனர். அவள் விவரம் சொன்னதும் ஆச்சரியப்பட்டனர்.

"அந்த ஓட்டலா... ரொம்ப பெரிசாச்சே! அதோட முதலாளியைத்தான் நீங்க திருமணம் பண்ணி இருக்கிங்களா?" என்று கேட்டனர்.

'இல்லை. என் கணவர்தான் அதை ஆரம்பித்திருக்கிறார்' என்று

அவளுக்குச் சொல்லத் தோன்றியது. ஆனால் சொல்லவில்லை. ஏதோ ஒரு வகையில் மனதில் இனம் புரியாத நிம்மதி நிலவுவ[illegible] உணர்ந்தாள்.

அவளுடைய பழைய காதலை அறிந்த பெண்கள் விடுதிக்[illegible] இனித் திரும்ப வேண்டியதில்லை என்பதே அமைதியைத் த[illegible] வீட்டில் சமைக்க வேண்டாம் என்று சத்தியமூர்த்தி கூறிவிட்ட[illegible] மிகப்பெரிய விடுதலை உணர்வை அவளுக்குத் தந்தது.

"காப்பிகூட வீட்டில் போட்டு, நீ சிரமப்பட்டுக்க வேணாம். நா[illegible] காலையிலேயே ஓட்டலுக்குப் போயிருவேன். ஆறு மணிக்கு உனக்[illegible] காப்பி கொடுத்துவிடுகிறேன். எட்டு மணிக்கு டிபன்- காப்பியோ[illegible] வர்றேன். மதியத்துக்கு உன் பேங்குக்கே சாப்பாடு அனுப்புறேன்[illegible] சாயந்தரம் நீ வந்ததும், நம்ம ஓட்டலில் இருந்து காப்பி வரும். ராத்[illegible] டிபன்- பாலோடு நான் வர்றேன்... சரியா!"

"............"

"நம்ம ஓட்டல் சாப்பாட்டை நாமே சாப்பிடலைன்னா... ஊரி[illegible] இருக்கிற மத்தவங்க எப்படிச் சாப்பிடவாங்க?"– அவன் கூறியதி[illegible] நியாயம் இருக்கவே... அதை ஏற்றுக்கொண்டாள்.

அழகான அடுக்ககத்தில்... அழகு சாதனங்களைக் குவித்து மேலும்[illegible] அழகுபடுத்தினாள் வசுந்தரா.

'இது என் வீடு...' என்ற பெருமித உணர்வு அவளுக்குள் எழுந்தது.

காலையில், வாசலின் அழைப்பு மணியின் சத்தத்தில் கண் விழிப்பாள். பக்கத்தில் அவன் இருக்கிறானா என்று விழிகள் தேடும். அவன் இருக்கமாட்டான். அதிகாலையிலேயே எழுந்து ஓட்டலுக்குப் போய்விடுவான்.

'இவன் தூங்கவே மாட்டானா...?' என்ற நினைவுடன், வாசல் கதவைத் திறப்பாள்.

"காப்பிம்மா..." என்றபடி ஓட்டலில் வேலை செய்யும் ஆள் நின்றிருப்பான்.

'பிளாஸ்க்'கை வாங்கிக்கொண்டு அவனை அனுப்பிவிட்டு, பல் துலக்கி முகம் கழுவி காலைப் பத்திரிகையைப் படித்துக்கொண்டே காப்பியை ருசிப்பாள்.

'இது... இது... இதைத்தான் நான் எதிர்பார்த்தேன். காப்பின்னா இது காப்பி...'– என்ற பாராட்டுதல் மனதில் தோன்றும்.

குளித்து, உடை மாற்றி, கண்ணாடி பார்த்துக்கொண்டு



இருக்கும்போது– மீண்டும் அழைப்பு மணி ஒலிக்கும். கதவைத் திறந்தால், காலை சிற்றுண்டியோடு உள்ளே வருவான் கணவன்.

"கிளம்பிட்டியா...?"

"ம்..."

"வா... சாப்பிடலாம்."

இதை ஒரு வழக்கமாகவே இவன் வைத்திருந்தான். அவளுக்கு வேலை இருக்கும் நாள்களில் காலை உணவையும், மதிய உணவையும் அவளுடன் சேர்ந்துதான் சாப்பிடுவான். விடுமுறை தினங்களில் மூன்று வேளையும் அவளுடன்தான் உணவு அருந்துவான். தனியாக அவளை வீட்டில் சாப்பிட அனுமதித்தது இல்லை.

வசுந்தராவுக்கு அவன் காட்டிய அந்த இணக்கம், மனதுக்கு வெகு இதத்தைத் தந்தது. ஓய்வில்லாமல் அவன் உழைப்பது, மனதை வருத்தியது. அதிகாலையிலேயே அவன் குளித்துவிட்டு ஓட்டலுக்குச் செல்வதை, விழித்திருந்து கவனித்து வேதனை அடைந்தாள்.

"இவ்வளவு சீக்கிரமாகவே குளிக்கணுமா?" என்று ஒரு நாள் கேட்டுவிட்டாள்.

அப்போது அவன் பார்த்த பார்வையில் எதுவோ இருந்தது. இன்னது என்று விளங்கிச் சொல்ல முடியாமல் அவள் விழிக்கையில்... அவன் இயல்பான பார்வைக்கு மாறி புன்னகைத்தான்.

"தொழில் செய்யற இடத்துக்கு சுத்தபத்தமா போக வேணாமா? காலையில சாமி படத்துக்கு ஊதுபத்தி ஏத்தி வைச்சுக் கும்பிடாம கல்லாப் பெட்டியில் உட்கார முடியுமா?"

'அட... இதில் இவ்வளவு இருக்கிறதா?' என்று பிரமித்தாள்.

அவனுக்கு எல்லாம் தெரிந்திருந்தது. உலக நடப்பு... நாட்டு நடப்பு... வீட்டு நடப்பு... ஏன்? சில நேரம் அவளின் மனதின் துடிப்பைக்கூட கணித்து வைத்திருந்தான் சத்தியமூர்த்தி.

அவனோடு சேர்ந்து வாழும் தருணத்தை, தாய்ப் பறவையின் சிறகுக்கடியில் பாதுகாப்பாக இருக்கும் குஞ்சின் வாழ்க்கையைப் போல நிறைவாக உணர்ந்தாள் வசுந்தரா.

## 18

**சா**வித்திரியின் மண நாள் நெருங்கியது. கல்யாண வேலைகளை ஆரம்பிக்க, மருதநாயகம் மகனைத் தேடி வந்தார்.

"யாருக்கு எவ்வளவு கொடுக்கணும்னு சொல்லுங்க... பணத்தை கொடுக்கறேன். நான் வந்து ஆடி ஓடி வேலை பார்க்க முடியாது மகன் கண்டிப்பாக சொல்லிவிட்டான்.

"இப்படிச் சொன்னா எப்படிப்பா? கூடப் பிறந்த அண்ணன் இல்லாம...?" மருதநாயகம் சலித்தார்.

"என்னை என்னதான் செய்யச் சொல்றீங்கப்பா? பாத்திங்கள்ல ஓட்டலில் எப்படிக் கூட்டம் குவியுதுன்னு. ஒரு நாள் கடை அடைச்சாலும், என் கதி என்னத்துக்கு ஆகறது?"

"அதுக்காக... பார்க்க வேண்டிய வேலைகளையும் பார்க்கமாட்டேன்னு சொன்னா எப்படி?"

"அப்ப நீங்க போய் ஓட்டல்ல உட்காருங்க. நான் ஊருக்கு போய் கல்யாண வேலைகளைக் கவனிக்கிறேன்."

"தெரியாத வேலையை நான் எப்படிப்பா பார்க்க முடியும்?"

"புரியுதில்ல! அப்ப தெரிஞ்ச வேலையை நம்ம ஊர்ல கவனியுங்க தேவைப்படுற பணத்தை வாங்கிட்டு போங்க."

மருதநாயகம் முணுமுணுத்துக்கொண்டே பணத்தை வாங்கிக்கொண்டு, ஊருக்குத் திரும்பினார். வசுந்தராவுக்கு அவரைப் பார்க்க பாவமாக இருந்தது.

"அவர் சொல்வதும் நியாயம்தானே...!" என்று சத்தியமூர்த்தியிடம் கேட்டாள்.

"எதை வச்சு அப்படிச் சொல்றே?"– கேள்வியுடன் பார்த்தான்.

"ஒரே தங்கையின் கல்யாணத்துக்கு நீங்க முன்னால் நின்று எல்லா வேலைகளையும் செய்தால் நல்லதுன்னு நினைக்கிறார். இது தப்பா?"

"தப்பே இல்லை. ஆனா, என் நிலைமையையும் கொஞ்சம் நினைச்சுப் பார்க்கணும்."

"அவர் நிலைமை பெரிதா... உங்க நிலைமை பெரிதா?"

"அவங்க அவங்களுக்கு அவங்க பக்கம் இருக்கற நியாயம்தான் தெரியும்."

இந்த வார்த்தைகளில் ஏதோ ஒரு மறைபொருள் ஒளிந்திருப்பதைப் போல அவளுக்குத் தோன்றியது.

'இவன் என்னைச் சொல்கிறானோ...?'

அவள் விழிகளில் தோன்றிய சந்தேகத்தை கண்டுகொண்டான்.

"என்னடி... முட்டைக் கண்ணை உருட்டி விழிக்கிறே?"

"ஒண்ணுமில்லை."



"இருக்காதே! உன் மண்டைக்குள்ள ஏதாச்சும் ஒரு சங்கதி பிராண்டாட்டி. இல்லைன்னா நீ இந்த முழி முழிக்க மாட்டியே... என்னாச்சு, சந்தேகமா?"

அவள் பதில் சொல்லவில்லை. டி.வி.யின் 'ரிமோட்'டை எடுத்து, அவளது மோவாயை அதால் தூக்கி, அவள் விழிகளுக்குள் உற்றுப் பார்த்தான்.

அவனது செய்கை அவளுக்கு வெட்கத்தை வரவழைத்தது.

"என்ன இது...?" என்றாள் சிரிப்புடன்.

"நீதான் உன்னை தொடக்கூடாதுன்னு சொல்லிட்ட இல்லே... அதனால் உன் முகத்தை நிமிர்த்திப் பார்க்க– இதை பயன்படுத்திக்கிட்டேன்" என்றான், சிரிக்காமல்.

'ஆமாம். நான் சொன்னதையே பிடித்துக்கொண்டு தொங்கு'– அவளுக்கு ஆற்றாமையாக இருந்தது. கணவன் மேல் கோபம் கோபமாக வந்தது.

"ம்ச்ச்"– என்றாள் சலிப்புடன்.

"வசு... காட்டில் ஓடுற மானைத் துரத்திக்கிட்டுப் போற புலியின் பக்கமும் ஒரு நியாயம் இருக்கு. அதுக்கு இரை வேணும். தன் உயிரைக் காப்பாத்திக்க ஓடுற மானின் பக்கமும் நியாயம் இருக்கு. அது தப்பிப் பிழைத்துத்தான் ஆகணும். இப்படி ஒவ்வொருத்தருக்கும் ஒரு நியாயம் இருக்கறப்போ, என் ஓட்டத்துக்கும் ஒரு நியாயம் இருக்குதுன்னு ஏன்டி உனக்குத் தோண மாட்டேங்குது."

அவன் பார்வையில்– மீண்டும் அந்த ஏதோ ஒன்று வந்து அமர்ந்துகொள்ள– வசுந்தரா பேச்சு இழந்தாள்.

அவனையே இமைக்காமல் பார்க்க– அவளது பார்வையில் இருந்த தவிப்பைக் கண்டுகொண்டவனின் கண்கள் மின்னின.

"வசு..." என்றான், ஆச்சரியத்துடன்.

"ம்..."– விழி மூடிக்கொண்டாள்.

அந்த நொடியில் அவனது விரல் அவள் மீது பட்டால், முழுவதுமாக உருகி அவனோடு கலந்திருப்பாள்.

அப்படியொரு துடிப்பு அவளுடைய நாடி நரம்பெல்லாம் வியாபித்திருந்தது.

அவளின் மூடிய அடர்ந்த இமைகள் பட்டாம்பூச்சிகளைப் போலத் துடிப்பதை அவன் பார்த்துக்கொண்டு அசையாமல் நின்றான். இயற்கையாகவே சிவந்த உதடுகள், 'வா' என்று அழைப்பதை அவனால் புரிந்துகொள்ள முடிந்தது.



அவளது தளிர் உடல் நடுங்குவதைப் பார்த்ததும், தன் உணர்வுகளைக் கட்டுப்படுத்திக்கொண்டு சட்டென்று விலகி நின்றான். தன் கையில் இருந்த 'ரிமோட்'டை சோபாவில் போட்டான்.

"ஓட்டலுக்கு கிளம்பறேன்."

மனைவியின் முகம் பார்க்காமல் சொன்னான்.

அவள் பதில் சொல்லாமல் எழுந்து ஜன்னல் அருகே சென்று திரையை விலக்கி, வானத்தைப் பார்த்தாள்.

"வசு..."– தயக்கத்துடன் அழைத்தான்.

"........" பதில் இல்லை.

அவளிடம் சொல்லிக்கொள்ளாமல் சத்தியமூர்த்தி சென்றதில்லை. அதிகாலையில் ஓட்டலுக்கு கிளம்பும்போதுகூட, 'போய்விட்டு வருகிறேன்...' என்று ஒரு சிறு காகிதத்தில் எழுதி அவள் அருகில் வைத்துவிட்டுத்தான் போவான்.

இன்று அவள் மனம் சுணங்க நின்றுகொண்டு இருக்கும்போது, தான் கிளம்புவது தவறு என்று அவன் மனதுக்குப்பட்டது.

## 19

சத்தியமூர்த்தி அவளின் அருகில் சென்று வானத்தைப் பார்த்தான். அது நிர்மூலமாக இருந்தது.

"மழை வரும் போல் இருக்கே...?" வேண்டுமென்றே சொன்னான்.

"........" அவள் மவுனத்தை தொடர்ந்தாள்.

"வசு..."– குழைவாக அழைத்தான்.

அந்தக் குரலில் தெரிந்த ஈர்ப்பு, அவளை திரும்பிப் பார்க்க வைத்தது.

"என்னைப் புரிந்துகொள் வசு..."

"கடைசியில் என்னை ராட்சசி ஆக்கிட்டீங்கல்ல..."

"ம்ப்ச். புரியாமல் பேசாதே. நான் உன்னை ஒரு நாளாவது அப்படிச் சொல்லி இருப்பேனா? இல்லை... அப்படி நினைச்சுத்தான் பார்த்திருப்பேனா? நீயா மனசைப் போட்டுக் அலட்டிக்காதே."

"நானென்ன பாவம் பண்ணினேன்?"

"ஒரு பாவமும் பண்ணலை."

"அப்புறம் எதுக்கு இந்தத் தண்டனை?"

"இது உனக்கு மட்டுமா தண்டனை?"

வசந்தரா சட்டென்று அவன் முகம் பார்த்தாள். விழிகள் அப்பட்டமான தாபம் தெரிய, தாள முடியாதவளாக அவனது ... பற்றிக்கொண்டாள்.

"வசு...?"

என்னைவிட்டு விலகிப் போறீங்க."

"போடி பைத்தியம். உன்னைவிட்டு விலகுகிறதுக்காகவா ஊருவிட்டு ஊரு வந்து பிழைக்கிறேன்?"

"நான் பாவி."

"முட்டாள் மாதிரிப் பேசாதே. நீ என் பெண்டாட்டி."

"உங்களுக்கு என்னைப் பிடிக்கலை."

இதைக் கேட்டதும் கடகடவென்று சிரித்தான்.

"இது 'ஜோக்'குன்னு உனக்கே தெரியலையா?"

"அப்புறம் எதுக்கு என்னை ஒதுக்கி வைக்கிறீங்க?"

"போடி பைத்தியம்."

அவள் இப்போது விசும்ப ஆரம்பித்துவிட்டாள்.

தொட்டு ஆறுதல் சொல்லப் போன சத்யமூர்த்தி, தன் கை... பின்னால் இழுத்துக்கொண்டான். அதைக் கண்ட வசந்தரா இன்... பலமாக அழலானாள்.

"இப்ப என்ன ஆகிடுச்சுன்னு இப்படி அழறே?"

"இன்னும் என்ன ஆகணும்?"

"இன்னைக்கோட வாழ்க்கை முடிஞ்சு போச்சா. நாளைக்கு வரவே வராதா?"

"ம்ச்ச். இன்றைக்கே இப்படி இருக்கிறவர்... நாளைக்கு எப்ப... இருக்கமாட்டீங்க?"

"இந்தப் பேச்சை விடு."

"கடைசியில் ஒரு சொல்; ஒரு வார்த்தையில் நிற்கணும்... முடிவோடு இருக்கீங்கல்ல."

நிதானமாக அவளின் முகம் பார்த்தான். புருவங்க... முடிச்சிட்டிருந்தன.

"அந்த ஒரு சொல்லும், ஒரு வார்த்தையும் என் வாயில் இருந்... வந்துச்சு? உன் வாயில் இருந்துதானே வந்துச்சு...?"

அவள் விக்கித்துப் போய் நின்றுவிட்டாள். கணவன் கேட்ப... நிஜம்தானே என்று மனசாட்சி அவளை ஆயிரம் கேள்... கேட்டது.



"உனக்குத்தான் வாய் இருக்குன்னு நீ பேசிட்டேடி. பேசினவ ...றந்துட்டே. கேட்டவன் நான்தானே...! என்னால அதை எப்படி ...றக்க முடியும்?"

"அதனால் காலம் பூராவும் தள்ளி நிற்கணும்னு முடிவே ...ண்ணிட்டீங்களா?"

அவளின் பதற்றம் சத்தியமூர்த்திக்கு புரியாமல் இல்லை. ...ன்னோடு இணைந்து வாழ வேண்டும் என்று அவள் துடிப்பதை அவனால் உணர முடிந்தது.

அந்த நொடியில் அவளை தன் மார்போடு அணைத்து– தலை ...கோதிவிட்டால்– அவளின் நிம்மதி திரும்பிவிடும். அவளும் அமைதி ...அடைந்துவிடுவாள் என்று கருதினான்.

ஆனால்...? அவள் சொன்ன வார்த்தை நினைவுக்கு வர– அவன் ...முகம் மீண்டும் பாறை போல் இறுகியது.

"சபதம் போட்டிருக்கேன் வசு. போட்ட சபதத்தில் ஜெயிக்காமல் ...விடமாட்டேன். அப்ப உன்னை ஜெயிக்க வர்றேன். இப்போ நான் ...ட்டலுக்குப் போகணும்."

அதற்கு மேல் அங்கு நின்றால் வார்த்தை வளரும் என்ற எச்சரிக்கை ...ணர்வோடு அங்கிருந்து விரைந்து சென்றுவிட்டான். அப்படியே ...சோபாவில் சுருண்டாள் அவள்.

'இனி புதிதாக என்னை ஜெயிக்கப் போகிறாயா? நான்தான் ...உன்னிடம் தோத்துவிட்டேனே...! உன் ஆண்மைக்கும், ...ராசத்துக்கும் முன்னால் அடிபணிந்துவிட்டேனே? ஏன் பாராமுகம் ...காட்டுகிறாய்?'

சத்தியமூர்த்தி அவளிடம் பாராமுகம் காட்டவில்லை என்பதை அவள் சிறிதளவு உணர்ந்தேதான் இருந்தாள். அவளைக் கண்ணுக்குள் ...வைத்து பாதுகாத்தான். அவள் முகம் வாட பொறுக்கமாட்டான். ...ஆனால், அவளாக அவனைத் தொட்டாலும் அசையாமல் நின்றானே ...தவிர, அவளைத் தொட முனையவில்லை.

கண்ணீர் வழிய யோசித்துக்கொண்டே இருந்தவள், அப்படியே தூங்கிவிட்டாள்.

இரவு உணவோடு வந்த சத்தியமூர்த்தி, தன்னிடம் இருந்த மாற்றுச் ...சாவியால் கதவைத் திறந்துகொண்டு உள்ளே நுழைந்தான். அழுது அழுது சோர்ந்து போய் உறங்கிவிட்ட மனைவியைப் பார்த்தான். அவன் மனம் வலித்தது.

'ஏன்டி... அப்படி வாய்விட்டுத் தொலைத்தாய்? இது ஆம்...

மனசுடி. ஜெயிக்காமல் உன்னைத் தொட எனக்கு ம
வரலையேடி.'

அங்கிருந்த புத்தகத்தை எடுத்து, அவளைத் தட்டி எழுப்பின
விழித்து எழுந்தவள், அவன் கையில் இருந்த புத்தகத்தைப் பார்த்
நெற்றிக் கண்ணைத் திறந்தாள்.

"முறைக்காதே வசு... இன்னும் கொஞ்ச நாள் அவகாசம் கெ
நான் நினைச்சதை செய்து முடிக்கிறேனா... இல்லையா எ
பாரு."

சத்தியமூர்த்தி சகஜமாக பேசிச் சிரித்தான்.

## 20

வீட்டில் கல்யாணக் களை வந்திருந்தது. வெள்ளை அடிக்கப்ப
சுவர்களும், வாசலில் பந்தலுமாக கல்யாண பரபரப்பு தோ
ஆரம்பித்திருந்தது.

"நீதான் ஓட்டலைப் பார்க்கணும், கல்யாணத்துக்கு
முடியாதுன்னு சொல்லிட்டே. மருமகளையாவது ஒரு வாரத்த
முன்னாலேயே அனுப்பி வையிடா..." மருதநாயகம் கோபப்பட
வேறு வழியின்றி வசுந்தராவை, பவளக்கொடியோடு அனு
வைத்தான் சத்தியமூர்த்தி.

மனைவி கிளம்பிப் போகும் வரையில் அவளைத் தடுத்து நி
முயன்றுகொண்டேதான் இருந்தான். ஆனால், கடைசிவரை
நடக்கவில்லை.

"வசு... உனக்கு லீவு கிடைக்காதுல்ல...?"

"இல்லையே... எனக்கு லீவு கிடைச்சிடுச்சு."

"எங்க ஊரு தண்ணி உனக்கு சரிப்படாதே."

"அது எனக்கும் பிறந்த ஊர்தான். அந்த ஊர் தண்ணி எ
சரிப்படும்."

"ஒரு வாரத்துக்கு முன்னால் அங்கே போய் என்ன பண்
போறே...?"

"அதை உங்க அம்மாகிட்ட கேட்டுக்கங்க."

வசுந்தரா, பவளக்கொடியிடம் சத்தியமூர்த்தியை மா
விட்டுவிட்டு நழுவிக்கொள்ள– அவன் தாயின் முகம் பார்த்தா

"என்னடா?"



"அவளை எதுக்கு முன்னாலேயே வரச்சொல்ற? நான் வரும்போது
ட்டிட்டு வரமாட்டேனா?"

"ஆமாடா ராசா... நீ முகூர்த்த நேரத்துக்கு வந்து நிப்பே. உன்
பண்டாட்டியையும் அப்பக் கொண்டு வந்து சபையில நிறுத்து...
ம்ம பேரு விளங்கிடும்."

"என்னம்மா... நீ புரியாம பேசற. அவ வந்து அங்கே என்ன
சய்யப் போறா?"

"இங்கே இருந்து மட்டும் எந்த வேலையை வெட்டி முறிக்கப்
பாறா?"

"ஏம்மா... என்னைக் கவனிக்க வேணாமா?"

"நீ ஓட்டலை நடத்துறே! வீட்டுக்கும் ஓட்டல்ல இருந்துதான்
ாப்பாடு வருது. வீட்டுக்கு கொண்டாந்து சாப்பிடுற சாப்பாட்டை
ட்டலிலேயே நீ சாப்பிட்டுக்கிட்டா ஆகாதா?"

"சாப்பாடு ஒண்ணு மட்டும்தானாம்மா...?"

சத்தியமூர்த்தி தன் மனைவியைப் பார்க்காமல் ஒரு நாள்கூட
ருக்க முடியாது என்பதை ஏக்கத்துடன் சொல்ல முயல–
வளக்கொடி தலையில் அடித்துக்கொண்டாள்.

"ஏன்டா... அம்மாகிட்ட பேசுற நினைப்போடதான்
சுறியா?"

"இப்ப நான் என்ன சொல்லிட்டேன்?"

புரியாமல் அவன் தன் மனைவியைப் பார்க்க– அவள் சிரிப்பை
டக்கிக்கொண்டு வாய் மேல் ஒரு விரலை வைத்து...

'இதுக்கு மேல பேசாதே...' என்று சமிக்ஞை செய்தாள்.

"இங்க பாருடா சத்யா... இன்னும் முகூர்த்தப்பட்டு எடுக்கலை.
கூர்த்த வளையல் அடுக்கலை. பந்தக்கால் நடலை. இத்தனைக்கும்
ருமகப் பொண்ணு முன்னாடி நிக்க வேணாமா?"

பவளக்கொடி கையோடு தன் மருமகளை அழைத்துக்கொண்டு
ப்பட்டுப் போய்விட்டாள்.

வசுந்தரா இல்லாத வீடு வெறிச்சென்று இருக்க– சத்தியமூர்த்திக்கு
ருப்புகொள்ளவில்லை. மனைவியின் தாய்மாமன் ராஜாங்கத்துக்கு
ான் போட்டான்.

"என்ன சத்யா... திடீர்னு போன் பண்ணுறீங்க?"

"தங்கச்சிக்கு கல்யாணம் சித்தப்பா..."

"அதுதான் தெரியுமே! எனக்கு பத்திரிகை
ச்சிருக்கிறாங்கல்ல."

"சித்தப்பா..."

"என்னப்பா?"

"நான் கல்யாணத்துக்கு போகணும்."

"கட்டாயம் போகணும். பொண்ணுக்கு கூடப் பி
அண்ணன். நீங்க போய்த்தானே ஆகணும்! வசந்ராவுக்கு
கிடைக்குமில்ல...?"

"அவ லீவு போட்டுட்டு, எங்க அம்மாகூட முன்னாடியே கிள
போயிட்டா!"

ஊர்ப்பட்ட ஏக்கத்துடன் சத்தியமூர்த்தி இதைக் கூற
வாய்விட்டுச் சிரித்தார் ராஜாங்கம்.

"ஓ... அதுதான் விஷயமா? இப்ப தங்கச்சி கல்யாண
கவலைப்பட வைக்கலை. பெண்டாட்டி உங்களைத் தவ
விட்டுவிட்டுப் போனதுதான் பெருங்கவலையாப் போச்சு."

"கொஞ்சம் கைகொடுங்க சித்தப்பா."

"எப்படி?"

"இரண்டொரு நாள் நீங்க ஓட்டலைப் பார்த்துக்கிட
நான் போய் தங்கச்சி கல்யாணத்தை நல்லவிதமா முடிச்
வந்துருவேன்."

"நானும் கல்யாணத்துக்கு வரணுமே சத்யா...!"

"சித்தியை மட்டும் அத்தைகூட அனுப்பி வைத்
பத்தாதா?"

"அதுசரி. நீங்க உங்க பெண்டாட்டியை பிரிஞ்சிரு
கூடாதுங்கறதுக்காக, நான் என் பெண்டாட்டியைப் பிரி
இருக்கணுமா?"

"என்ன சித்தப்பா... உங்களுக்கு ஐம்பது வயசுக்கு
ஆகலையா?"

"'ஐம்பதிலும் ஆசை வரும்'ன்னு கண்ணதாசன் பாடி இருக்
தெரியாதா...?"

"எனக்காக உங்க ஆசையைக் கொஞ்சம் தள்
போடுங்களேன்."

"ம்ஹும். என் அக்கா மகளைக் கல்யாணம் கட்டி இருக்
உங்களுக்காக பார்க்காவிட்டாலும், என் அக்கா மக ஏங்கிடுவா
நான் பார்க்கணும். என் பெண்டாட்டியை கல்யாணத்துக்கு அ
வைச்சுட்டு, உங்களை உங்க பெண்டாட்டிகிட்ட அனுப்பி
வந்து சேருகிறேன். வேறு என்னத்தைப் பண்ண...?"

சத்தியமூர்த்தி போனை துண்டித்ததும், விசாலத்துக்கு


போட்டுச் சொன்னார் ராஜாங்கம்.

"கவலையேபடாதேக்கா. உன் மக சந்தோஷமா வாழ்ந்துக்கிட்டு
இருக்கா."

# 21

**சா**வித்திரிக்கு முகூர்த்தப்பட்டு எடுப்பதற்காக, மதுரை மாநகரில்
இருந்த அந்தப் பெரிய கடைக்கு பெண் வீட்டைச் சேர்ந்தவர்கள்
ளம்பினார்கள்.

"என்ன மாமா, போகலாமா...?" என்றபடி காவேரி வந்தாள்.

"அதுக்கென்ன காவேரி! கிளம்பிட்டாப் போச்சு" என்று
ப்பத்தி ரெண்டு பல்லையும் மருதநாயகம் காட்ட – பவளக்கொடி
வெகுண்டாள்.

காவேரி, மருதநாயகத்தின் அத்தை மகள். அவரைத் திருமணம்
செய்துகொள்ளும் கனவில் இருந்து, அது முடியாமல் போகவும்
வறு ஒருவனுக்கு கழுத்தை நீட்டியவள்! அதனால் எப்போது
ார்த்தாலும் மருதநாயத்தைப் பார்த்து ஏக்கப் பெருமூச்சு ஒன்றை
ிட்டு வைப்பாள்.

"ஊகூம். யார் யாருக்கு எங்கே விதிச்சிருக்கோ அதுதானே
டக்கும்."

மருதநாயகம் என்னவோ இயல்பாகத்தான் அவள் மேல்
ாசம் காட்டுவார். ஆனால், காவேரி விடும் அனல் பெருமூச்சில்
டுப்பாகி இருக்கும் பவளக்கொடிக்கு, அவர் எதைப் பேசினாலும்
ில்லங்கமாகத் தோன்றித் தொலைக்கும்.

"ஏம்புள்ள இப்படி இளைச்சிருக்க...? உன் புருஷன் ஒழுங்காக
சாறு போடமாட்டானா?" கரிசனமாக அவர் கேட்கும்போதெல்லாம்
வளக்கொடிக்கு கோபம் கொழுந்துவிட்டு எரியும்.

"ஆமாம்னு அவ சொன்னா... நம்ம வீட்டுக்கு அழைச்சு விருந்தாக்கி
பாடப்போறீங்களா...?"= வார்த்தையால் வெடித்துவிட்டாள்.

"ஏன்டி... அத்தை மககிட்ட நல்லா இருக்கியான்னு நாலு வார்த்தை
பசக் கூடாதாடி?"

"அவ நல்லா இல்லாதது மட்டும்தான் உங்க கண்ணுக்குத்
தரியுதா? நான் என்ன இங்கே ஊஞ்சல் கட்டி ஆடிக்கிட்டா
இருக்கேன்?"

"உனக்கு என்னடி குறைச்சல்?"

"உங்களை மாதிரி ஒரு மனுஷனைக் கட்டிக்கிட்டதே பெ குறைதானே...! இனியும் வேற பெரிய குறை வந்தா சேரணும்?

பவளக்கொடி போடுகிற போட்டில், மருதநாயகம் அட போய்விடுவார்.

அன்றும் அதுபோல காவேரி, சொந்தம் கொண்டாடிப் பேசி வர, மருதநாயகம் உற்சாகம் அடைந்துவிட்டார்.

"என்னடி பவளக்கொடி... மசமசன்னு நிக்கிற...! கா கிளம்பி வந்துட்டா பாரு. நீ இன்னும் கிளம்பாம இழுத்தடி என்ன அர்த்தம்? காலாகாலத்தில் கிளம்புடி. அங்கே மாப்பிள் வீட்டுக்காரங்க காத்துட்டு இருப்பாங்கல்ல?"

"இம்புட்டு நேரமும் இந்த அக்கறை இல்லையே. இப்ப மட் எப்படி வந்து குதுச்சுச்சு?"

"யாருடி இவ... நேரங்காலம் தெரியாம மல்லுக்கு நின்னுக்கி எந்த நேரம் எதைப் பேசணுங்கிறதே உனக்கு தெரியாதா?"

"எனக்கு எப்படி அது இருக்கும்? இருக்கப்பட்டவகிட்ட தா இருக்கும்."

"இப்ப நீ கிளம்பி வரப்போறியா இல்லையா?"

"நான் வராட்டி என்ன... என் மருமக வராட்டி என்ன... இல் கல்யாணம் கட்டிக்கப் போற என்னோட மகள் வராட்டித் என்ன...? அதான் உங்க அத்தை மகள் ரத்தினம் வந்து இறங்கியா நீங்க அவளைக் கூட்டிக்கிட்டு நடையைக் கட்டுங்க."

அப்போதுதான் மனைவியின் கோபம் அவருக்குப் புரி அவசரமாய்– ரகசியமாய் காதைக் கடித்தார்.

"அடியேய்... அடக்கி வாசிடி மகராசி. வீட்டுக்கு வந்திரு மருமக முன்னாடி என் மானத்தை வாங்காதே."

"இவ்வளவு பயம் இருக்கிறவர், முகூர்த்தச்சேலை எடுக்கிறத் அவளை ஏன் அழைக்கணும்?"

"நானாடி அழைச்சேன்? அவளா கிளம்பி வந்தா அதுக்கு நா பொறுப்பு?"

"சீவி சிங்காரிச்சுக்கிட்டு எல்லாத்துக்கும் முந்தி இவ எ நான் நான்னு வர்றா? எனக்கு ரெண்டுல ஒண்ணு இன்னை தெரிஞ்சாகணும்."

மருதநாயகம் யோசித்தார். இது இத்தோடு போ என்று அவருக்குத் தெரியும். காவேரியை வரவிடாமல்



தடுக்காவிட்டால்– அதையே பவளக்கொடி பெரிய பிரச்சினை ஆக்கிவிடுவார். அதே நேரம் பாசமாக அவர் வீட்டு விசேஷத்தில் கலந்துகொள்ள வந்த அவளை, திருப்பி அனுப்பவும் அவருக்கு மனம் வரவில்லை.

வேறு வழியின்றி மருமகளின் உதவியை நாடினார்.

"அம்மாடி வசுந்தரா..."

"என்ன மாமா...?"

"அதோ நிக்குதே அது, எனக்கு அத்தை மக..."

"காவிரியத்தைத்தானே... எனக்குத் தெரியுமே!"

"அத்தை மகளா பிறந்து தொலைச்சிட்ட ஒரே காரணத்துக்காக, என் வீட்டில நடக்கிற விசேஷத்திலேகூட அவளை கலந்துக்கச் செய்யாம விரட்டணும்னு உங்க அத்தை ஒத்தைக் காலில் நிக்கிறா."

"அடப்பாவமே!"

"இப்பவும் பாரு... நம்மகூட முகூர்த்தச் சேலை எடுக்க யாரும் கூப்பிடாம தானா கிளம்பி வந்துருக்கு அந்தக் காவேரி. அதை திருப்பி அனுப்பினாத்தான் சேலை எடுக்க வருவேன்னு உன் அத்தை அடம்பிடிக்கிறா. இதை எப்படி சமாளிக்கிறதுன்னு எனக்கு ஒரே கவலைப்பா இருக்கு."

"இப்ப இதுதான் உங்களுக்கு பிரச்சினையா...? நான் வேணா காவேரி அத்தையை மனம் கோணாமல் பேசித் திருப்பி அனுப்பவா மாமா?" வசுந்தரா மனதுக்குள் சிரித்துக்கொண்டே வினவ–

"வேண்டாம் மருமகளே..." என்று அலறினார்.

"ஏன் மாமா...?" வசுந்தரா சிரிப்பை அடக்கிக்கொண்டாள்.

"ஏன் மருமகளே! நீ என் கட்சியா... இல்லை, உன் அத்தையின் கட்சியா?"

"ரெண்டு பேருக்கும் பொதுவான கட்சி."

அவள் சிரித்துக்கொண்டே தன் அத்தையைத் தேடிப் போனாள்.

# 22

"நீங்களே இதற்கு ஒரு நியாயத்தைச் சொல்லுங்க அத்தை..."

"என்னம்மா...?"

"அந்த காவேரி அத்தை, அப்பா வழி சொந்தம். அதனால நாத்தனார் வீட்டுக் கல்யாணத்துக்கு அவங்களைக் கூப்பிட இருந்தா முறையா இருக்காதுன்னு நான்தான் வரச் சொன்னே இப்ப மாமா வந்து, அவங்க நம்மளோட வரக்கூடாது சொல்றாரு. இது நல்லா இருக்கா? நான் எப்படி அவங்கள திருப்பி அனுப்ப?"

கெட்டிக்காரத்தனமாக முடிவை பவளக்கொடியி விட்டுவிட்டாள்.

காவேரியை, வசுந்தராவின் அப்பா வழி சொந்தத்தில் திரும செய்து கொடுத்து இருப்பதால் அவளுக்கு சந்தேகம் வரவில்ல

மருமகளின் மனத்தாங்கலுக்காக, காவேரி எதிர்ப்புக்கொள்ளை கைவிட்டாள் பவளக்கொடி.

"என்னங்க..." கணவரை அழைத்தாள்.

அதற்காகவே காத்திருந்த மருதநாயகம் அவசரமாக வந்தார்.

"என்னடி...?"

"அவளைப் போகச் சொல்ல வேணாம்."

"எவளை?"

"உங்க நொத்தை மகளை."

"என் அத்தை என்னடி பாவம் பண்ணுச்சு. நொத்தைங்கிற

"இப்படியொரு மகளைப் பெத்து வச்சிருக்கே."

"அதுசரி. இப்ப எதுக்கு அவளைப் போக வேணாம்னு சொ சொல்ற? நீ நினைச்சு நினைச்சு பேசுறதுக்கு நானா ஆளு?"

"நீங்கதானே என் புருஷன். அதனால நீங்கதான் மருமகள்தான் அவளை வரச் சொன்னாளாம். இப்ப என்ன... மாமாவுக்கு அவ வர்றதுல இஷ்டமில்லைன்னு நான் சொல்லிட என் மேலயும் பழி வராது. நீங்க சொன்ன சொல்லும் சொன்னதா இருக்கும். போங்க... போயி அவளைக் கிளப்பிவிடுங்க."

"மருமக வரச்சொல்லி இருக்கிறா. எனக்கு எதுக்குடி பொல்லா நீயே அவளைப் போகச் சொல்லிவிடு" என்று வெற்றிகர பேச்சுவார்த்தையில் பின்வாங்கிக்கொண்டார் அவர்.

"நீங்களே மருமககிட்ட இந்தப் பயம் பயப்படறப்போ, அவளைப் பகைச்சுக்க முடியுமா? வந்து தொலையட்டும்..."

பவளக்கொடி பச்சைக்கொடி காட்டிவிட்டாள்.

மாமனார்– மாமியாரின் உரையாடலை ரசித்தவாறே கவனித்



சுந்தரா. அப்போது, அவள் கையில் இருந்த செல்போன் ஒலித்தது. த்தியமூர்த்தியின் எண் மின்னி மின்னி மறைந்தது.

போனை காதுக்கு கொடுத்து... "ஹலோ..." என்றாள்.

"என்ன செய்ற...?" என்று கேட்டான்.

'உன்னை நினைத்துக்கொண்டே இருக்கிறேன்' என்று மனம் சால்ல...

"சாவித்திரிக்கு முகூர்த்தப் பட்டு எடுக்க கிளம்பிக்கிட்டே ருக்கோம்..." என்று அவளுடைய வாய் சொன்னது.

"அம்மாவும், அப்பாவும் என்ன செய்றாங்க...?"

"வாக்குவாதம் பண்ணிக்கிட்டு இருக்காங்க."

"எதைப் பத்தி...?"

"வேறு எதைப் பத்தி? எல்லாம் காவேரி பிரச்சினையைப் ற்றிதான்! தமிழ்நாடு பூராவும் காவேரியை வேண்டும்... வேண்டும்னு வமாய் தவம் கிடக்கிறோம். உங்க அம்மாவுக்கு மட்டும் காவேரியைக் ண்டால் ஆகவே மாட்டேங்குது."

வசுந்தரா பேசியதைக் கேட்டு மறுமுனையில் வாய்விட்டுச் ரித்தான்.

"காவேரிச் சித்தியும் உங்கக்கூட வருதா?"

"கண்டுபிடிச்சுட்டீங்களே."

இப்போது வசுந்தராவும் அவனோடு சேர்ந்து சிரித்தாள். பின்னர், ழ்ந்த குரலில் சத்தியமூர்த்தி வினவினான்.

"எப்படி இருக்கே வசு...?"

அந்தக் குரலில் தெரிந்த பிரிவாற்றாமையைக் கண்டு மலைத்தாள். வன் என்னை நினைக்கிறானா? எனக்காக ஏங்குகிறானா...?' று அவள் மனம் பரபரத்தது.

"நீங்க எப்படி இருக்கீங்க?"– அவள் குரல் தழுதழுத்தது.

அதை உணர்ந்துகொண்டவனாய் உடனே பதில் சொல்லவில்லை. றுப் பொறுத்து பெருமூச்சுடன் பேசினான்.

"எப்படி இருப்பேன்? நீ இல்லாத வீட்டுக்குப் போகவே பிடிக்கலை. டலே கதின்னு கிடக்கிறேன்."

இதைக் கேட்டதும் அவளுக்கு கண் கலங்கிவிட்டது.

"நேரா நேரத்துக்கு சாப்பிடுங்க."

"ஓட்டல்லதான இருக்கேன். நான் மறந்தாலும், சர்வர்கள் மறக்காம பாடு போட்டுருவாங்க. நீ ஒழுங்காக சாப்பிடுறியா?"

அத்தையும், சாவித்திரியும் என்னை விட்டுவிட்டு சாப்பிட

மாட்டாங்களே...?"

இருவரும் ஒருவரையொருவர் நலம் விசாரித்துக்கொண்ட ஒருவரின் நலத்தில் மற்றொருவர் ஆறுதல் அடைந்தனர். தங்க நினைவுகளைப் பகிர்ந்துகொண்டனர்.

"நீங்க எப்போ இங்கே வருவீங்க...?"

மனைவியின் ஏக்கத்தை உணர்ந்தவன் மனதில் கு பரவியது.

"வந்துருவேன் வசு."

"அதுதான் எப்ப...? முகூர்த்த நேரத்துக்குத் வருவீங்களா?"

"இல்லை. அதுக்கு முன்னாலேயே வந்துடுவேன்."

"நிசமாவா?"

"நிசமாத்தான். உன்னை விட்டுட்டு என்னால மட்டும் முடியுமாடி?"

இது எப்படி சாத்தியம் என்று வசுந்தராவுக்கு புரியவில் அவர்கள் காதலிக்கவில்லை. ஆனால், அவர்களுக்குள் மெலி காதலின் இழை ஓடிக்கொண்டிருந்தது.

இந்த ஜோடிக்குள் கூடல் இல்லை. ஆனால், கூடலில் இரு அத்தனை இன்பத்தையும் வெறும் பார்வையிலும், பேச்சி நினைவுகளிலும் நுகர்ந்தனர்.

'கூடல் இல்லாத ஊடல் கொடுக்கும் இன்பத்தைவிட பெரிது?' என்று வசுந்தரா நினைத்துக்கொண்டாள்.

"போனை வைத்துவிடவா வசு...?"- குழைந்தான்.

"ம்...."- அதற்கு குறையாத குழைவை அவளும் கு கொடுத்தாள்.

இருவரும் பெருமூச்சுடன் இரு பக்கமும் செல்போன் இயக்க துண்டித்தனர்.

## 23

**வ**சுந்தராவின் மனம் எதிலும் லயிக்கவில்லை. 'அண் அண்ணி...' என்று சுற்றி வந்த சாவித்திரிக்கு இயந்திரம் மருதாணி இட்டுவிட்டாள்.

"மருதாணி சிவக்குமா... இல்லை சிவக்காதா சாவித்திரி



மருதாணி இட்டபோது அவள் செய்த கேலியை நினைத்துப் பார்த்து, கேலிக் குரலில் கேட்டாள்.

"போங்க அண்ணி..."- வெட்கத்துடன் அங்கிருந்து ஓடிவிட்டாள் துப்பெண்.

"வசுந்தரா... அம்மாடி வசுந்தரா..." பவளக்கொடி அழைக்கும் குரல் கேட்டது.

'தங்கமாக தாங்கும் மாமனார்- மாமியார், அள்ளி அள்ளி பாசத்தைக் கொடுக்கும் நாத்தனார், யாருக்குக் கிடைக்கும் இப்பேர்பட்ட புகுந்த வீடு?'

கிடைத்த சிறிதளவு இடைவெளியில் வசுந்தரா பெருமூச்சு விட்டுக்கொண்டாள்.

"பந்தக்கால் நடணும், சீக்கிரம் வாம்மா..." மாமியாரின் குரலில் பரிவு நிறைந்திருந்தது.

மற்ற சுமங்கலிப் பெண்களுடன் அவளும் சேர்ந்து நின்று பந்தக்கால் நட்டாள். பந்தல் போடப்பட்டது. வீட்டில் உறவினர்கள் கூட்டம் வரத் தொடங்கியது. அவள் மனம் கணவனைத் தேட ஆரம்பித்தது.

"என்ன பவளக்கொடி... நாளை மறுநாள் கல்யாணம். நாளைக்கு சாயங்காலமே பெண் அழைக்க, மாப்பிள்ளை வீட்டுக்காரங்க வந்துடுவாங்க. உன் தங்க மகனை எங்கே... இன்னும் காணோம்?" வந்திருந்த உறவு ஜனங்களில், வாய் தாட்டியமான பெண்மணி ஒருத்தி குத்தலுக்காக கேட்டாள்.

"உன் மகனைப் போல ஊரைச் சுற்றிக்கிட்டு இருந்தா கல்யாணத்துக்கு ஒரு வருஷத்துக்கு முன்னாடியே எம்புள்ளையும் வந்து இறங்கி இருப்பான். இப்ப அவனோ பெரிய ஓட்டல் முதலாளி. ஐம்பது பேருக்கு மேல சம்பளம் கொடுத்து வேலை வாங்குறவன். நினைச்ச உடனே வந்து நிற்க அவனால் முடியுமா என்ன...?" - தானும் வாய் தாட்டியத்தில் சளைத்தவள் இல்லை என்று நிரூபித்தாள் பவளக்கொடி.

இரவு. பந்தி ஜோராக நடந்துகொண்டிருக்க- தனிமை தேடி தவிப்புடன் மொட்டைமாடிக்குச் சென்று காற்று வாங்கினாள் வசுந்தரா.

வானத்தில் நிலவு மிதக்க... அண்ணாந்து அதைப் பார்த்தபோது... முதலிரவின்போது கணவன் பாடிய பாட்டு நினைவுக்கு வந்தது...

"நிலவைப் பார்த்து வானம் சொன்னது
என்னைத் தொடாதே..."

அவள் கண்மூடி தவித்தபோது, காதுகளில் இன்னொரு பாடல் நுழைந்தது.

"என்னருமை காதலிக்கு...
வெண்ணிலாவே...
நீ இளையவளா... மூத்தவளா...
வெண்ணிலாவே..."

ஆனந்தத்துடன் திரும்பிப் பார்த்தாள். அறை வாசலில் சத்தியமூர்த்தி நின்றிருந்தான்.

"வந்துட்டீங்களா...?"

ஓடி வந்து அவனைக் கட்டிக்கொண்டு, மார்பில் முகம் புதைத்தாள். இரு கரங்களும் அவன் தோளைத் தழுவின. எவ்வித உணர்ச்சியும் இல்லாமல் அசையாமல் நின்றான் அவன்.

அதேநேரம் அவனது உடலில் அதிர்வு தோன்றியதை அவளால் உணர முடிந்தது. அவள்தான் இறுக்கித் தழுவிக்கொண்டு இருந்தாளே தவிர, அவனோ தொடவே இல்லை. அன்று சொன்ன சொல்லில் இருந்து மாறாமல்– விரல் நுனியால்கூட அவளைத் தொட்டுவிடாமல்– விரல் மடக்கி நின்றான்.

அதைப் பொருட்படுத்தவில்லை வசுந்தரா. 'சபதம் போட்டது நீதான், நான் இல்லை!' என்ற நினைவுடன் முகமெல்லாம் முத்தங்களைப் பதித்தாள். அவன் உடல் இறுகியது. ஒரு கட்டத்தில் தாள முடியாதவனாக...

"போதும் வசு. நான் மனுஷன். இயந்திரமில்லை" என்று குரல் கரகரக்கச் சொன்னான்.

"அதைத்தான் நானும் சொல்றேன். நான் மனுஷி. என் உணர்வுகளோடு விளையாடாதீங்க" தேம்பினாள்.

"நிச்சயம். இதுக்கு ஒரு முடிவைக் கொண்டு வருவேன் வசு... அதுவரை காத்திரு..."– அவன் இறைஞ்சினான்.

அவள் கண்களையும், முகத்தையும் துடைத்துக்கொண்டு விலகி நின்றாள்.

"கீழே வாங்க சாப்பிடலாம்."

"கொஞ்சநேரம் பேசிக்கொண்டு இருக்கலாம் வா."

"வருகிறேன். ஆனால் ஒரு நிபந்தனை..."

"என்னடி....?"

"உங்களைத் தொடாமல் பேச என்னால் முடியாது. அதனால..."



"அதனால...?"

"உங்களைத் தொட்டுக்கொண்டுதான் பேசுவேன். சரியா...?"

"நீ கொடுமைக்காரிடி."

அவன் சிரித்துக்கொண்டே மொட்டைமாடி நோக்கி நடந்தான். சுற்றுச்சுவரில் சாய்ந்து கால் நீட்டி கீழே அமர்ந்தான். அருகில் உட்கார்ந்த வசுந்தரா, அவனது மடி சாய்ந்துகொண்டாள். ஒரு வேக மூச்செடுத்து தன்னை நிதானப்படுத்தியவன், அவளைத் தொட்டுவிடாமல் கைகளை தளரவிட்டபடி பேச ஆரம்பித்தான். கணவனின் மடியில் சாய்ந்திருக்கும் மகிழ்ச்சியில் உள்ளம் பூரிப்பாக இருந்தது அவளுக்கு!

இருவரும் பிரிந்திருந்தபோது நடந்த நிகழ்வுகளை பேசிக்கொண்டார்கள்.

"இப்ப நம்ம ஓட்டலை யார் பார்த்துக்கிறாங்க?"

"உன் மாமாதான்."

"பலே ஆள்தான். அவர்தானே மாட்டேன்னு சொல்லாம உங்களிடம் அகப்படுவார்"– சிரித்தாள்.

"நீ வேற... அவர் என்ன கேட்டார் தெரியுமா?"

"என்ன கேட்டார்?"

"நீ உன் பெண்டாட்டியோட சேர்ந்து இருக்கணுங்கிறதுக்காக நான் என் பெண்டாட்டியை விட்டுப்புட்டு இருக்கணுமான்னு கேட்டார்."

"அப்படியா...!"

இருவரும் சேர்ந்து சிரித்தார்கள்.

நிலா வெளிச்சத்தில் அவன் மடியில் கிடந்தவள், தேவதையைப்போல காட்சி அளித்தாள். அவள் தலையில் குடியிருந்த மல்லிகையின் வாசம் அவனை சொர்க்கத்துக்கு அழைத்துச் சென்றது. அவள் மேனியின் குழைவு– அவனுக்குள் உணர்வுகளின் பேரலையை தட்டி எழுப்பியது.

"வசு..." கிறங்கிப் போனவனாக அழைத்தான்.

"ம்..." அதே கிறக்கத்துடன் பதில் சொன்னாள்.

"நான் ஆங்கிலத்தில் ஒண்ணு சொல்லவா?"

"ஒன்... டூ... திரின்னு சொல்லப்போறீங்களா?"

"போடி இவளே."

"அப்ப என்ன சொல்லப்போறீங்க?"

"ஐ லவ் யுடி..."

வசந்தரா பேச மறந்து சிலையாகிவிட்டாள். சதீஷ் சொன்ன அதே வார்த்தைகள்தான். ஆனால், அன்று உணராத கிளர்ச்சியையும், இன்பத்தையும் இன்று உணர்ந்தாள்.

அவள் மடிசாய்ந்திருப்பது முரட்டு வாலிபனின் மடியில்! அவன் கோபக்காரன்... ரோசக்காரன்... பாசக்காரன். நினைத்திருந்தால் ஒரு நொடியில் முதலிரவு அன்றே அவளை கசக்கி முகர்ந்திருக்கலாம். ஆனால், அப்படிச் செய்யாமல் சபதம் செய்தான்.

அந்த ஆண் மகன், தான் செய்த சபதத்தின் முதற்கட்டமாக அவளது மனதை அன்று ஜெயித்தான்.

வசந்தரா மெல்லச் சொன்னாள்.

"ஐ லவ் யு... டூ..."

## 24

திருமணம் முடிந்து, கணவன் வீட்டுக்கு சென்றுவிட்டாள், சாவித்திரி. சத்தியமூர்த்தியும், வசந்தராவும் சேலத்துக்குத் திரும்பினார்கள். எதையோ ஒன்றை தொலைத்த ஏக்கம் இப்போது அவளிடம் துளியும் இல்லை. கணவனின் காதல் கிடைத்துவிட்ட நிறைவில், நிம்மதியாக வேலைக்குச் சென்று திரும்பிக்கொண்டிருந்தாள்.

ஆறு மாதங்கள் இவ்வாறே இன்பமாக கழிந்தன, அவர்கள் இருவருக்கும்.

அவர்களைப் பார்க்க மருதநாயகமும், பவளக்கொடியும் சேலத்துக்கு வந்திருந்தார்கள்.

"வாங்க மாமா... வாங்க அத்தை..."- வசந்தரா வாய் நிறைய அவர்களை வரவேற்றாள்.

"ம்" என்று முணுமுணுத்தாள் பவளக்கொடி. மருதநாயகம் மனைவியை முறைத்தார்.

"ஜூஸ் குடியுங்க."

வீட்டில் இருந்த பழங்களை எடுத்து நறுக்கி, 'மிக்ஸி'யில் அடித்து ஐஸ் துண்டுகளுடன் கண்ணாடி தம்ளரில் நிரப்பி அவர்களிடம் கொண்டுவந்து நீட்டினாள்.

"இதில் ஒன்றும் குறைச்சல் இல்லை"- பவளக்கொடி நொடித்தாள்.

"பவளம்..." மருதநாயகம் அதட்டினார்.

"என் வாயை அடக்குறதிலயே குறியாய் இருங்க! ஊர் வாயைப் பத்தி யோசிக்காதீங்க."

"ஊர் வாயை மூடுறது எனக்கொரு பிரச்சினையே இல்லைடி! உன் வாயை மூடுறதுதான் பெரிய கஷ்டம்."

இருவரும் எதற்காக மோதிக்கொள்கிறார்கள் என்று புரியாமல் அவர்கள் வந்திருப்பதை சத்தியமூர்த்தியிடம் சொல்லுவதற்காக வசுந்தரா தன் செல்போனை கையில் எடுத்தாள்.

"யாருக்கும்மா போன் போடுற...?" என்று மாமியார் விசாரித்தாள்.

"உங்க மகனுக்குத்தான் அத்தை."

"அவன்கிட்ட போனிலேயேதான் பேசுவியா...? நேர்ல எதுவும் பேசமாட்டியா?"

அவள் குதர்க்கமாக வினவ- மருதநாயகம் கோபத்துடன் எழுந்து வெளியே சென்றுவிட்டார்.

"மாமா எங்கே போகிறார் அத்தை?"

"வேற எங்கே போவார்... மகன்கிட்டத்தான் போவார். நீ இப்படி வந்து உட்காரு."

"என்னங்க அத்தை..."- அருகே வந்து உட்கார்ந்தாள்.

பால் மனம் மாறாத பச்சிளங்குழந்தை போல இருந்த அவளின் முக வடிவைக் கண்டு பவளக்கொடிக்கு எப்படி இவளிடம் கடுமையாகப் பேசுவது என்று யோசனை மேலோங்கியது.

'வேறு வழியில்லையே! பேசித்தானே ஆகணும்' – மனதை சற்றே மாற்றிக்கொண்டு, முகத்தில் கடுமையை வரவழைத்தாள்.

"சத்தியா எப்போ வீட்டுக்கு வருவான்?"

"அது ராத்திரி பன்னிரண்டு மணியாகிடும்."

"எப்போ ஓட்டலுக்குப் போவான்?"

"நாலு மணிக்கு எழுந்து குளிச்சுட்டு போயிடுவார்."

" புருஷனும், பெண்டாட்டியும் இப்படி ஒருத்தரை ஒருத்தர் கண்டுக்காம குடித்தனம் பண்ணுனா ஊரில நாலு பேரு நாலு வார்த்தை பேசத்தான் செய்வாங்க."



"என்ன பேசுறாங்க...?"

"உங்களுக்கு பின்னால கல்யாணம் முடிச்ச சாவித்திரி இப்ப முழுகாம இருக்காளாம். சேதி வந்திருக்கு. 'என்ன பவளம்... சாவித்திரி கல்யாணத்துக்கு ஆறு மாசத்துக்கு முன்னாலேயே சத்தியமூர்த்தியோட கல்யாணம் முடிஞ்சிருச்சே! உன் மருமக இன்னும் குளிச்சிக்கிட்டுத்தான் இருக்காளா?'ன்னு கேட்கிறவங்களுக்கு என்னால பதில் சொல்லி முடியலை."

'இதற்கு என்ன பதிலைச் சொல்வது என்று எனக்கே விளங்கலை. நீங்க எப்படி பதில் சொல்லுவீங்க?' என்று நினைத்துக்கொண்டாள் வசுந்தரா...

"ஏம்மா... நீங்க ரெண்டு பேரும் இப்போதைக்கு குழந்தை வேணாம்னு இருக்கீங்களா?"

"அப்படியெல்லாம் ஒண்ணுமில்லை அத்தை."

வெட்கத்துடன் முகம் சிவக்க- தலை குனிந்துகொண்டாள் வசுந்தரா.

அங்கே ஓட்டலில் மருதநாயகத்திடம் மாட்டிக்கொண்ட சத்தியமூர்த்தியின் நிலையும், இவளைப் போன்றே சிக்கலில் இருந்தது. அவனும் மவுனம் சாதித்தான்.

பெரியவர்கள் இருவரும் சிறியவர்களை ஒரு பிடி பிடித்துவிட்டு, கோபத்துடன் கிளம்பி கிராமத்துக்கு திரும்பிச் சென்றுவிட்டார்கள்.

அன்று இரவு சத்தியமூர்த்தி வீடு திரும்பியபோது, வசுந்தரா அழுது வீங்கிய முகத்துடன் இருந்தாள்.

"அழுதியா வசு...?"

அவள் பதில் பேசவில்லை. அவளையே பார்த்துக்கொண்டு ஒரு கணம் அங்கேயே நின்றான். பின்னர், குளித்துவிட்டு வந்தான்.

"வசு... வா, சாப்பிடலாம்."

அவள் அசைவில்லாமல் கட்டிலில் சுருண்டு கிடக்க- அருகில் அமர்ந்து அவள் கையருகே அந்தப் பையை வைத்தான்.

"என்னது இது...?" எரிச்சலுடன் கேட்டாள்.

"எடுத்துப் பார் தெரியும்."

அமர்த்தலான குரலில் சொன்னான்.

வசந்தரா படுத்த வாக்கிலேயே வேண்டா வெறுப்பாக

அந்தப் பையைப் பிரித்துப் பார்த்தாள். பார்த்தவள் திகைத்தாள். திகைத்தவள் எழுந்து அமர்ந்தாள். ஒளி வீசும் கண்களுடன் அவனைப் பார்த்தாள்.

பையில் ஒரு லட்ச ரூபாயும், அறுபது பவுன் நகையும் இருந்தன. அவன் சபதத்தில் ஜெயித்துவிட்டான்.

"ஒரே வருஷத்தில் இவ்வளவு லாபம் கிடைச்சிருச்சுன்னு நான் சொல்லமாட்டேன். பழைய பாக்கி கொஞ்சம், கிராமத்தில் வசூலாச்சு. மொய் பணத்தில் சாவித்திரிக்கு சீர் செஞ்சுட்டதால நீ கொடுத்த ரொக்கப் பணத்துல கொஞ்சம் மீதம் இருந்தது. உன் முப்பது பவுன் நகையை அடகுதான் வச்சிருந்தேன். மீதி முப்பது பவுனை செய்யத்தான் அதிகம் உழைக்க வேண்டியது இருந்தது."

பேச்சு பேச்சாக இருக்க– அவன் கைகள் அவளை ஆவலுடன் இழுத்து வளைத்து அணைத்துக்கொண்டன.

அணை உடைந்த வெள்ளமாய் ஆக்கிரமித்துக்கொண்டான். மூச்சுத் திணற அவன் கொடுத்த முத்தங்களை ஏற்றுக்கொண்டாள் வசுந்தரா.

வேகம் தாளாமல் துவண்டு தொய்ந்து– கணவன் கைகளுக்குள் சரிந்து ஒன்றிப் போனாள். இதழோடு இதழ் பதித்தபோது, அவர்கள் இருவருக்குமே இந்த உலகம் மறந்துபோனது.

அடுத்து வந்த நாள்கள் அவர்களுக்கு தேனிலவு நாட்களாக தித்தித்தன. ராஜாங்கத்தை சேலத்துக்கு வந்து பதினைந்து நாட்கள் இருக்கச் சொல்லிவிட்டு, வசுந்தராவோடு தேக்கடிக்கு சென்றுவிட்டான் சத்தியமூர்த்தி.

குளிர் நிறைந்த ஏரியில் வலம் வந்தபோது, அவனின் கை விரல்களோடு விரல் பிணைத்த வசுந்தரா மெல்லிய குரலில் சொன்னாள்.

"ஏங்க..."

"என்னடி."

ராணி சிண்டிகேட் சார்பில் வெளியிட்டவர்,
ஆசிரியர் : ர.பாஸ்கரன், அச்சிட்டவர் : சி.கல்யாணசுந்தரம்.
ராணி அச்சகம், 86. பெரியார் நெடுஞ்சாலை, சென்னை–600 007.
தொலைபேசி: 25324771 FAX : 044–26426884
E-MAIL : raniweekly@vsnl.net



"நான் உண்மையிலேயே உங்களைக் காதலிக்கிறேன்னு நீங்க நம்புறீங்களா...?"

"என்னன்னு சொல்லுடி பைத்தியக்காரி."

"நான்... சதிஷ்னு ஒருத்தனை... அவன் பெங்களூரில் 'சாப்ட்வேர் என்ஜினியர்'. அது வந்து..."

அவள் தடுமாற, வாயைப் பொத்தி தடுத்தான் சத்தியமூர்த்தி. அவன் குரல் உறுதியுடன் ஒலித்தது.

"எனக்குத் தெரியும்."

"தெரியுமா? எப்போது... யார் சொன்னது?"

"நம் கல்யாணத்துக்கு முதல் நாள், என் நண்பன் சொன்னான்."

"தெரிந்துமா?"

விழிகள் வியப்பால் விரிந்தன. அவனுடைய கோபத்தின் அளவை அறிந்தவள் அவள். அப்படிப்பட்டவன் எப்படி தன்னைத் திருமணம் செய்துகொண்டான்? என்று மனதுக்குள் கேள்வி கேட்டுக்கொண்டாள்.

"நிச்சயம் உன் அழகுக்காகவும், பணத்துக்காகவும் உன்னை கல்யாணம் பண்ணிக்கொள்ளவில்லை..." என்று உறுதி அளித்தான் சத்தியமூர்த்தி.

"அதுதான் எனக்குத் தெரியுமே!"– சிணுங்கினாள்.

"ஏற்கெனவே காதலில் தோற்றுப்போன உன்னை, கல்யாண மேடை வரைக்கும் வரவிட்டு மறுபடியும் தோற்கடிக்க பிரியப்படவில்லை வசு..."– அணைத்துக்கொண்டவாறே சொல்ல... அவள் விழிகளில் கண்ணீர் மல்கியது.

"நான் காதலில் தோற்றுப் போனேனா... இல்லை! உங்கள் மேல் நான் கொண்ட காதல்தான் உண்மையானது. நிரந்தரமானது. அந்தக் காதலில் நான் ஜெயித்துவிட்டேனே...!!"

அவனது தோளில் சாய்ந்துகொண்டவளின் குரலில் காதல் ததும்பியது. அந்த ஆண்டு இறுதியில் – அவர்கள் பவளக்கொடியின் கையில் பேரனைப் பெற்றுக் கொடுத்தார்கள்.

(முற்றும்)